பனூ இஸ்ராயீல்களிலுள்ள ஒரு செல்வந்தர் கொல்லப் பட்டு, அவருடைய சடலம் வேறு ஒரு இடத்திற்கு அப்புறப்படுத்தப் பட்டது. இரவில் படுக்கைக்குச் சென்றவர் படுக்கையில் இல்லாததைப் பார்த்த உறவினர்கள் அவரைத் தேடினர். ஊருக்கு வெளியில் வேறு ஒரு இடத்தில் அவரது உடல் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு, அவரைக் கொலை செய்தவர் எவர் என்பதைக் கண்டுபிடிக்க முயன்றனர். துப்பு துலங்கவில்லை.

இறுதியாக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து கொலை பற்றிய செய்தியையும் கொலை செய்தவர் எவர் என்பதைக் கண்டுபிடிக்க முயன்று துப்பு துலங்காமல் தோல்வி யடைந்ததையும், கூறி "தாங்கள் நபியாக இருப்பதால், உங்களுடைய நாயனிடத்தில் இதனைக் குறித்து விசாரித்து எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அல்லாஹ்விடத்தில் துஆச் செய்தார். "ஒரு மாட்டை அறுத்து அதனுடைய வாலை எடுத்து கொல்லப்பட்ட சடலத்தின் மீது அடித்தால், அந்த சடலம் உயிர் பெற்றெழும்பி தன்னை கொலை செய்தது இன்னார்தான் என்று விளக்கமாகக் கூறும்" என்று இறைவன் தெரிவித்தான்.

இவ்விவரத்தை ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ராயீல்களுக்குத் தெரிவித்து, ஒரு மாட்டை அறுத்து, அதன் வாலை எடுத்து கொலையுண்ட சடலத்தின் மீது அடியுங்கள். அது உயிர் பெற்றெழும்பி தன்னை கொலை செய்தது இன்னார்தான் என்று அறிவிக்கும் என்றறிவித்தார். அவர் கூறிய விவரப்படி ஒரு மாட்டை வாங்கி அறுத்து அதன் வாலை எடுத்து அச்சடத்தின் மீது அடித்திருந்தால், அது உயிர்பெற்றெழுந்து, தன்னைக் கொலை செய்தவர் எவர் என்பதை விவரமாகக் கூறியிருக்கும்.

எகிப்து நாட்டை விட்டு பனூ இஸ்ராயீல்கள் வெளியேறி வந்தபோது, சாமிரி என்பவரின் சொற்கேட்டு அவர்கள் காளை மாட்டை வணங்கி, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களால் கண்டிக்கப்பட்டு பின்னர் தௌபா செய்து மீண்டனர். ஆயினும், அவர்களிடத்தில் காளை மாட்டை வணங்கும் மனப்பான்மை அடியுடன் நீங்கிவிடவில்லை. அவர்களில் இருந்த அற்ப சொற்பமான காளைமாட்டு பக்தியை அகற்றி விடுவதற்காகவே காளைமாட்டை அறுத்து அதன் வாலை எடுத்து கொல்லப்பட்ட உயிரற்ற உடலின் மீது அடிக்குமாறு இறைவன் கட்டளையிட்டான். இதனை அவர்கள் இறைவன் கட்டளை என்று மதிக்காமல் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களுடைய சுய கருத்துப்படி கூறுகிறார்கள் என நினைத்து, "மூஸாவே எங்களை நீர் பரிகசிக்கிறீரோ" என்று வினவினர்.

அவர்களுடைய இந்தக் கேள்வியிலிருந்து ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நபி என்ற முறையில் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்காமல் சாமான்ய மனிதர்கள் தங்கள் நண்பர்களுடன் பேசும் முறையில் எங்களை நீங்கள் பரிகசிக்கிறீர்களா? என்று வினவினர் என்பதை கவனிக்க வேண்டும். சாமான்யர்கள் ஒருவரை ஒருவர் பரிகசிப்பது போல மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களைப் பரிகசிக் கிறார்கள் என்று அவர்கள் நினைத்தே அவ்வாறு வினவினர். "நான் நபி; அல்லாஹ்வின் கட்டளையைத் தான் உங்களிடம் அறிவித்தேன். சுயமாக நான் உங்களிடம் கூறவில்லை. பரிகசித்தல், கிண்டல் செய்தல் போன்றவை கல்வியறிவற்ற, பெருந்தன்மையற்ற பாமரர்கள் பேசும் பேச்சுகள். அவ்வாறான பாமரர்களில் நான் ஒருவனாகி உங்களிடம் பேசுவதை விட்டு

இறைவனிடம் காவல் தேடுகிறேன் என்ற கருத்தில் மூடர் (ஜாஹில்)களில் ஒருவனாக இருப்பதை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்`` என்ற வார்த்தைகள் மூலம் அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதன் பின்னரும் அவர்களுக்கு புத்தி தெளியவில்லை. அந்த மாட்டின் வயதென்ன? நிறமென்ன? உழவடையில் பிடிக்கப்பட்டு வேலை செய்ததா? என்றெல்லாம் பல கேள்வி களைக் கேட்டு அவற்றிற்கெல்லாம் விளக்கம் தெரிந்த பின்னர் இன்ஷா அல்லாஹ் அவ்வாறான காளை மாட்டை நாங்கள் அறுக்கிறோம் என்று கூறினர். இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) என்ற வார்த்தையை அவர்கள் உபயோகிக்காமல் இருந்திருந்தால் அவர்கள் மாடு வாங்கவோ அறுக்கவோ இயலாது என்று திருக்குர்ஆன் விரிவுரைகளில் எழுதப்பட்டிருக்கிறது.

அவர்களுடைய கேள்விகளின்படி அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட அடையாளங்களுள்ள மாட்டை அவர்கள் கண்டு பிடிக்க மிக பிரயாசைப்பட்டனர். இறுதியாக ஒரு மாடு அந்த அடையாளங்களுள்ளதாக அமைந்தது. அதன் விலையைக் கேட்டால் சாமான்ய மாடுகளுக்குள்ள விலையாக இருக்க வில்லை. அந்த மாட்டை அறுத்து அதனுடைய தோல் நிறைய அஷ்ரபி என்னும் தங்க நாணயத்தைக் கொடுக்க வேண்டும். அது தான் விலை என்று கூறப்பட்டது. கொல்லப்பட்டவர் திரளான செல்வத்திற்கதிபதியாக இருந்ததால், மாட்டுக்குரியவர் கூறிய விலையை அதாவது அதன் தோல் நிரம்ப தங்க நாணயங் (அஷ்ரபி) களைக் கொடுத்து விலைக்கு வாங்கினார்.

அந்த மாட்டை அறுத்து, அதன் வாலை எடுத்து கொல்லப்பட்டுக் கிடந்த சவத்தின் மீதடித்தனர். ஹளரத் மூஸா

அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியது போல, சவம் உயிர் பெற்று எழும்பி, தன்னைக் கொலை செய்தது இன்னார் தான் என்று கூறி விட்டு மீண்டும் மரித்தது. கொல்லப்பட்டவர் பெரும் பணக்காரர். அவருக்குப் பிள்ளை இல்லை. அவருக்கு சிறிய தந்தையின் புதல்வர் ஒருவர் இருந்தார். அவர்தான் அந்த பிரபுவின் சொத்தை அவருடைய மரணத்திற்குப் பிறகு அடைய தகுதியுள்ள வாரிசு அவர் பரம ஏழை. பிரபுக்கு வயது அதிகமாயிற்று. ஆயினும், அவர் மரிக்கவில்லை. எனவே, இந்த வயோதிகர் சாவது எப்பொழுது? இந்தச் சொத்துக்களை சட்டப்படி அடைவது எப்பொழுது? என்று அவருடைய ஏழை வாரிசு நினைத்து, அவரைக் கொலை செய்து விட்டார். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் முறையிட்டவர்களிலும் இவர்தான் முதன்மையாக இருந்தார். கொலை செய்து விட்டு பழியை வேறு ஒருவர் மீது போடுவதற்காகவோ, தன் மீது கொலைக் குற்றம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கோ அவர் இவ்வாறு நடித்தார். இறுதியாக அவர்தான் கொலைக் குற்றம் புரிந்தவர் என்பது வெளியாகி அக்காலத்துச் சட்டப்படி தண்டனைக்குள்ளானார்.

ஒரு மாட்டை அறுத்து அதன் வாலை எடுத்து கொல்லப் பட்டவர் மீது அடியுங்கள் என்ற கட்டளை இறைவனிடமிருந்து வந்தவுடன், அவ்விடத்தில் இருக்கிற மாடுகளில் எதையேனும் ஒன்றை விலைக்கு வாங்கி அறுத்து, கொல்லப்பட்டவர் மீது அடித்திருந்தால், அவர் உயிர் பெற்றெழும்பி தன்னைக் கொலை செய்தவர் இன்னார்தான் என்பதை அறிவித்திருப்பார். வெகு சுலபமாக காரியம் நிறைவேறி இருக்கும். அவ்வாறின்றி கேள்விகள் பலவற்றைக் கேட்டு பல பதில்களைப் பெற்றதனால்,

குறித்த மாட்டை விலைக்கு வாங்க பெரும்பணம் கொடுக்க வேண்டியதேற்பட்டதும், குறித்த அடையாளங்களுள்ள மாடு இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதும் பெரும் சிரமமாயிற்று என்பதையும் இதன் மூலம் அறிகிறோம்.

தவிர, அந்த மாடு பனூ இஸ்ராயீல்களிலுள்ள ஒரு நல்ல மனிதருக்குச் சொந்தமானது. பல வருடங்களுக்கு முன் மனைவியையும், ஒரு மகனையும் விட்டு விட்டு மரணித்தார். அக்காலத்தில் இது ஒரு கன்றுக் குட்டியாக இருந்தது. நாயனே,. எனக்குள்ளது இந்தக் கன்றுக் குட்டி ஒன்றுதான். உன்னிடத்தில் இதனை அமானிதமாக ஒப்புவிக்கிறேன். என் புதல்வன் தக்க வயதை அடைந்த பிறகு அவனிடம் ஒப்புவித்து விடு; என்று பிரார்த்தித்து காட்டில் கன்றை விட்டு விட்டு மரணித்தார். அக்கன்று காட்டில்தான் வாழ்ந்தது. காட்டு மிருகங்களுக்கு அகப்பட்டு அவற்றிற்கு இரையாகவுமில்லை. மனிதருக்கு அகப்பட்டு அறுக்கப்படவோ விற்பனை செய்யப்படவோ இல்லை. எவருக்கும் அகப்படாமல் வன விலங்குகளுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தது.

அந்த மனிதருடைய மகன் தாய்க்குப் பிரியமானவன். தாய் சொல் கேட்பவன். ஒரு நாள் அவனுடைய தாயார் மகனை நோக்கி, உன் தந்தைக்குள்ள ஒரே சொத்து ஒரு காளைக் கன்றுதான். அதனை அவர் அல்லாஹ்விடத்தில் அமானிதமாக ஒப்புவித்து, என் புதல்வன் தக்க வயதை அடைந்த பிறகு அவனிடம் ஒப்புவித்து விடு என்று பிரார்த்தித்துக் காட்டில் விட்டு விட்டு மரித்தார். அது இப்பொழுது நன்கு வளர்ந்து கொழுத்து மூர்க்கமான மாடாகி விட்டது. எவராலும் அதனைப் பிடிக்க முடியவில்லை. வனவிலங்குகளுடன் சேர்ந்து மேய்ந்து

கொண்டிருக்கும். நீ இன்ன காட்டிற்குச் சென்றால் அதனைக் காண முடியும். அதன் கழுத்தில் நீ கையை வைத்து உன் பக்கம் அழைத்தால் உன் அழைப்பிற்கிணங்கி உன்னுடன் வரும். தப்பி ஓடாது என்று கூறி அக்காளையின் நிறம் அடையாளம் முதலியவற்றையும் விவரித்தனுப்பினாள்.

தாயார் குறிப்பிட்ட வனத்திற்கு தனையன் சென்றான். குறிப்பிட்ட அடையாளமுள்ள நல்ல மூர்க்கமான காளை மாடு வன விலங்குகளுடன் மேய்ந்து கொண்டிருந்தது. இதுதான் தன்னுடைய தாய் கூறிய காளை என்று உணர்ந்து அதன் அருகில் சென்றான். அதனுடன் சேர்ந்து மேய்ந்து கொண்டிருந்த வனவிலங்குகள் அப்பால் விலகின. அவன் மாட்டை அழைத்துக் கொண்டு அருகில் சென்றான். அது ஓடவில்லை. அதன் கழுத்தில் கையைப் போட்டு, வீட்டுக்கு வரும்படி அழைத்து இழுத்தான். அவனுடன் அது வந்தது.

தாய் சொன்னதை தட்டாத தனையா வெறுமனே ஏன் நடக்கிறாய்? என் முதுகில் ஏறிக் கொள். வீடு செல்வோம் என்று அக்காளை கூறிற்று. அதனை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. உன் முதுகில் அமர்ந்து சவாரி செய்து கொண்டு வருமாறு என் தாய் எனக்கு கட்டளையிடவில்லை. கழுத்தில் கையைப் போட்டு அழைத்து வரும்படியே என் தாய் கூறினாள் என்று பதிலளித்தான். அப்பொழுது அவனை நோக்கி, என் முதுகின் மீது நீ ஏறியிருந்தால், உன்னைத் தூக்கி எறிந்து விட்டு வனவிலங்கு களுடன் நான் சென்றிருப்பேன். அப்புறம் என்னை மீண்டும் பிடிக்க உன்னால் இயலாது என்று கூறி அவனுடன் அது வந்தது. இவ்வாறாக காளை மாட்டை வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான்.

பரம ஏழைகளான தாயும் மகனும் மாட்டுக்கு நல்ல தீவனம் கொடுத்துக் காப்பாற்றுவது சிரமமாகத் தோன்றிற்று. அதனை விற்பனை செய்து விட இருவரும் தீர்மானித்தனர். மாட்டுச் சந்தைக்கு மாடு ஓட்டி வரப்பட்டது. ஒருவர் வந்து விலைக்குக் கேட்டார். பையன் விலை கூறினான். அவன் கூறிய விலையைப் போல் இரு மடங்கு பணம் , தருவதாக விலைக்குக் கேட்டவர் கூறினார். உடனே, அதனை அவர் விற்று விடாமல், முடிவாக விற்பனை செய்வதற்கு என் தாயின் சம்மதம் தேவை. என் தாயாரிடம் இரட்டிப்பு விலை கொடுப்பதாக நீர் கூறியதைக் கூறி சம்மதம் கேட்கிறேன். அவர் சம்மதித்தால் தருகிறேன் என்று பையன் கூறி, வீட்டுக்கு வந்து தாயாரிடம் நடந்த விவரத்தைக் கூறினான்.

விலைக்குக் கேட்டவர் தருவதாகக் கூறிய பணத்தைப் போல் இரண்டு மடங்கு விலையைக் கூறுமாறு தாயார் மகனிடம் சொல்லி அனுப்பினார். பையன் வந்து தாயார் கூறிய விலையைக் கூறி முடிவாக விற்பனை செய்யும் போது தாயாரின் சம்மதத்தைக் கேட்க வேண்டும் என்ற நிபந்தனையையும் கூறினார். பையன் கூறிய விலையைப் போல் இரு மடங்கு விலை தருகிறேன். உன் தாயாரிடம் சம்மதம் கேட்க வேண்டாம் என்று விலைக்கு கேட்டவர் கூறினார். இந்த மாட்டின் எடையளவு தீனார் தந்தாலும் தாயின் அனுமதியின்றி நான் விற்க மாட்டேன். தாயாரிடம் அனுமதி பெறுகிறேன் என்று பையன் கூறி விட்டு தாயாரிடம் செய்தியை அறிவித்தார். உன்னிடம் விலை கேட்பவர் மனித ரூபத்தில் வந்த வானவராக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். இதனை என்ன விலைக்கு விற்கலாம் என்று நான் கேட்டதாக அவரிடம் கூறு என்று தாயார் கூறினார்.

தாயார் சொன்ன செய்தியை பையன் கூறினார். அதற்கவர் நீர் தாய் சொல் கேட்கும் பிள்ளை. எனவே, உனக்கு உபகாரம் செய்ய என்னை அல்லாஹ் அனுப்பினான். இதனை இப்பொழுது விற்பனை செய்ய வேண்டாம். பனூ இஸ்ராயீல் களில் கொல்லப்பட்ட ஒருவருக்காக இம்ரானுடைய மகனார் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதனை விலைக்கு வாங்குவார். அதனுடைய தோல் நிறைய தங்க நாணயம் கொடுக்காத வரையில் அவருக்கு இதனை விற்பனை செய்ய வேண்டாம். அது வரையில் இதனை வைத்திருங்கள் என்று கூறினார். அவ்விருவரும் அதனை விற்காமல் வைத்திருந்தனர்.

பனூ இஸ்ராயீல்கள் இதே மாட்டை விலைக்கு வாங்கி அறுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டனர். எனவே, அவர்கள் மாட்டின் அடையாளத்தை மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்க, இந்த மாட்டின் அடையாளத்தையே இறைவன் அறிவித்தான். இறுதியாக இந்த மாட்டின் தோல் நிரம்ப அவர்கள் தங்கம் கொடுத்து அதனை வாங்கி அறுக்கும் படியாயிற்று. அந்த பையனுடைய தந்தை நல்ல மனிதராக இருந்தது மட்டுமின்றி, தாய்க்கு நன்றி செய்யும் புதல்வராகவும் இருந்ததனால் அல்லாஹ் அவர் மீது கிருபை செய்து இவ்வுலகச் செல்வத்தை அருளினான்.

இந்த அருள் அக்காலத்தவருக்கு மட்டும் இல்லை இக்காலத்தினருக்கும் இருக்கிறது. இதற்கு பிரத்தியட்ச உதாரணமாக பம்பாய் நகரின் ஒரு பகுதியாகிய மகாயில் அடங்கி இருக்கிற மக்தூர் ஒலி குத்திஸ ஸிர்ருஹு அவர்களைக் குறிப்பிடலாம். இங்கு அடங்கி இருக்கிற வலி அவர்கள் பம்பாய் வாசிதான். இவருடைய தந்தை பம்பாயிலுள்ள பிரபலமான ஒரு

மௌலவி. அவரிடத்தில் போதியளவு பொருளாதாரம் இருந்ததால், அந்தப் பகுதியில் சன்மார்க்கப் பிரசாரம் செய்து சிறந்த பேச்சாளராகவும் இருந்தார். தமக்கு இவர் ஒரே புதல்வராக இருந்ததால் தம்முடைய சன்மார்க்க உபதேசங்களின் போது தம்முடைய புதல்வரையும் அழைத்துச் செல்வதுடன், தாமே அவருக்கு மார்க்கக் கல்வியை நேரில் போதிக்கும் ஆசிரியராகவும் இருந்தார். இந்த நிலையில் பம்பாயை அடுத்துள்ள கல்யாணில் அவர் மரித்தார். இன்றும் கூட கல்யாணில் அவர் பெயரால் வருடந்தோறும் கந்தூரி நடை பெறுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இடைக்காலத்தில் ஜியாரத்துக்கும் செல்கின்றனர்.

இவருடைய மரணத்தால் பையன் அனாதையானார் தந்தையிடம் கற்ற அரபி பார்ஸீ தீனியாத் கல்விகளும் முற்றுப் பெற்றன. இவரிடத்தில் போதியளவு செல்வம் இருந்ததால் குடும்பத்தினருக்கு பொருளாதாரச் சிரமம் இல்லை. ஒரு இரவில் இப்பையனின் தாயார் படுக்கையில் சாய்ந்து கொண்டு அருந்துவதற்கு தண்ணீர் கொண்டு வருமாறு மகனிடம் கூறினார். பையன் தண்ணீர் கொண்டு வந்த போது தாயார் தூங்கி விட்டார். தாயாரின் கால் மாட்டில் தண்ணீரை வைத்துக் கொண்டு பையன் நின்று கொண்டிருந்தார். தாயாரைத் தட்டி எழுப்பி தண்ணீரைக் கொடுக்கவுமில்லை. பக்கத்தில் அதனை வைத்து விட்டுச் செல்லவுமில்லை. இரண்டு மூன்று மணி நேரங்கழித்து தாயார் கண்விழித்தார். கால் மாட்டில் பையன் நிற்பதைப் பார்த்து. ஏன் இந்த நேரத்தில் இங்கு நிற்கிறாய்? என்று வினவினார்.

குடிக்கத் தண்ணீர் கொண்டு வரும்படி கூறினீர்கள். தண்ணீர் கொண்டு வந்தேன். நீங்கள் தூங்கி விட்டீர்கள். கண் விழிக்கட்டும் என்று நான் நின்று கொண்டிருக்கிறேன் என்றார்.

அப்பொழுதிருந்தா நிற்கிறாய் என்று வினவினார். ஆம் என்றார் மகனார். உடனே தாயர் எழுந்து மகன் கரத்திலிருந்த தண்ணீர் குவளையை வாங்கிக் கொண்டு. போய் படுத்துக் கொள் என்று கட்டளையிட்டு மகனை அனுப்பிய பின்னர். உளுச் செய்து. தொழுது விட்டு தாயாரும் படுத்துக் கொண்டார். இது நடந்த சில நாட்களுக்குப் பின்னர் தன் தாயாரிடம் அவர் சென்று. தந்தையுடன் நின்ற மார்க்கக் கல்வியை பூர்த்தி செய்வதற்காக சூரத் நகரிலுள்ள அரபி மத்ரஸாவில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்ற தம்முடைய விருப்பத்தைக் கூறி, தாயாரின் அனுமதியை வேண்டினார். மகனே, உனது தந்தை பிரபலமான ஆலிம், அவரைப் போல் நீயும் ஆலிமாக வேண்டும் என்பது தான் எனக்கும் ஆசை. சூரத் நகரம் இங்கிருந்து வெகு தூரத்தில் இருக்கிறது. நீ எனக்கு ஒரே புதல்வன். உன் தந்தையின் மறைவுக்குப் பிறகு உன்னைப் பார்த்து என்னைத் தேற்றிக் கொண்டு வாழ்கிறேன். நீ சூரத் சென்று விட்டால் இங்கு நான் உன்னைப் பிரிந்து தனிமையில் வாழ்வது எப்படி என்பதுதான் என் தயக்கம். உனது விருப்பத்திற்கு தடை சொல்லவும் எனக்குப் பிரியமில்லை. நீ இங்கே என்னுடன் இரு. அல்லாஹ் இதற்கு ஒரு வழியை விடுவான் என்று மகனுக்கு தாயார் பதில் கூறினார்.

மஹாயிம் என்ற அந்த நகரம் கடற்கரைப் பட்டணம். மாலை வேளையில் மக்கள் கடற்கரைக்குச் சென்று உலாவுவர். இந்தப் பையனும் கடற்கரைக்குச் செல்வது வழக்கம். இவ்வழக்கத் திற்கேற்ப அவர் ஒரு மாலையில் உலாவச் சென்ற போது, கடற்கரை மணல் வெளியினூடே இருந்த பாறைகளில் ஒன்றின் மீது ஒருவர் நின்று கொண்டிருந்தார். தன் அருகில் மணல் வெளியில் தன்னந்தனியே சென்ற இப்பையனை அவர்

அழைத்து, உனக்கு மார்க்கக் கல்வி பயில ஆர்வம் இருக்கிறதா? உனக்கு பிரியமானால் தினசரி இந்த இடத்திற்கு கித்தாபுடன் வந்து சேர். உனக்கு நான் பாடம் சொல்லித் தருகிறேன் என்றுரைத்தார்.

ஓதுகையில் ஆர்வம் கொண்டு வெளியூர் செல்ல விரும்பி இவருக்கு எதிர்பாராத முறையில் கிடைத்த இந்த வாய்ப்பு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. அவர் கூறிய நேரத்தில் குறித்த இடத்திற்கு கித்தாபுடன் சென்று முறைப்படி பாடம் ஓதலானார். இவ்வாறு நடந்து கொண்டிருப்பதை பையன் தன் தாயாருக்கு அறிவிக்கவில்லை. ஒருநாள் அவர் தம் புதல்வரிடம் சில நாட்களாக நீ கித்தாபும் கையுமாகச் சென்று நேரம் கழித்து வருவதை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். நீ கித்தாபு ஓதுகிறாயா? யாரிடத்தில் ஓதுகிறாய்? என்று வினவினார். அதற்கு அவர் நான் கித்தாபு தான் ஓதுகிறேன் என்று மட்டும் கூறினார். உனக்கு கற்றுக் கொடுக்கிற ஆசிரியர் யார் என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்து, தம்முடைய பெயரை நான் வெளியிடக் கூடாது என்று என் ஆசிரியர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவ்வாறு கூறினால் அப்புறம் நான் வர மாட்டேன் என்று என்னிடத்தில் அவர் கூறியுள்ளார். இதனை செவியுற்ற பிறகு அவர் இன்னார் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் தாயாருக்கு ஏற்பட்டு அவர் யார்? என்பதை வற்புறுத்திக் கேட்கலானார். பிறரிடம் நீ கூறாமல் இருக்கலாம். தாயாகிய என்னிடம் நீ மறைக்கலாமா? உனக்கு நான் கெடுதல் செய்வேனா? என்றெல்லாம் கூறி அவர் யார் என்பதை மகனின் நாவிலிருந்து வெளியாகுமாறு செய்து விட்டார்.

மறுநாள் பையன் கித்தாபுடன் குறித்த இடத்திற்கு குறித்த நேரத்தில் சென்றபோது, அங்கு ஆசிரியர் இல்லை. அவருடைய

வருகையை பையன் எதிர்பார்த்து வெகுநேரம் வரையில் காத்திருந்தும், அவர் வராததால் கவலையுடன் வீடு திரும்பி வந்து தாயாரிடம் வெளியூர் சென்று ஓத உத்தரவு கொடுக்கவில்லை. உள்ளூரில் ஓதியும் ஆசிரியர் பெயரை வற்புறுத்திக் கேட்டு விட்டீர். என் ஆசிரியர் தம்முடைய எச்சரிக்கைப்படி இன்று வரவில்லை. எனது ஓதுகை தடைபட்டு விட்டது என்று கூறி கதறி அழுதார்.

அல்லாஹ் இதற்கொரு ஏற்பாட்டைச் செய்வான் என்று கூறி மகனை தாயார் தேற்றினார். பையன் தினந்தோறும் குறித்த நேரத்தில் பாடம் ஓதிய இடத்திற்கு சென்று சற்று நேரம் தாமதித்திருந்து விட்டு வருவார். ஏறக்குறைய ஒரு வாரத்திற்குப் பிறகு குறித்த இடத்தில் அந்த ஆசிரியர் வந்து பையனை அழைத்து உனது தாயார் முஸ்தஜாபத்துத் தஃவத்தாக (பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுகிற பெண்ணாக) இருக்கிறார். அவரது பிரார்த்தனையை அல்லாஹ் அங்கீகரிக்கிறான். தினசரி நான் இங்கு வந்து கொண்டிருக்க முடியாது. ஒரே தடவையில் உமக்கு எல்லாவற்றையும் படித்துக் கொடுத்து விடுகிறேன் என்று கூறி அவருடைய வாயைத் திறக்கச் செய்து உமிழ்ந்து விட்டுச் சென்றார். மகனின் அழுகையைப் பார்த்த தாயார் தஹஜ்ஜுதுத் தொழுகையின் போது மகனுக்கு துஆ செய்வது வழக்கம். ஒரு பெரும் மார்க்க ஊழியருக்கு மனைவியாக இருந்து வாழ்ந்ததின் பரக்கத்தால் அவருக்கு மார்க்க பக்தி சிறந்து தஹஜ்ஜுது, இஷ்ராக், போன்ற நபிலான வணக்கங்களையும் கூட நிறைவேற்றும் பழக்கமுண்டாகி விட்டது. அத்துடன் அவர் தன்னுடைய மைந்தனுக்காக கேட்கும் துஆ. இது இறைவன் சமூகத்தில் ஏற்கப்பட்டு, இவருக்கு கல்வியை கற்பிக்க ஹளரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம்அவர்கள் வரும்படியாயிற்று. தாயாரின்

துஆவின் மகிமைக்கு எல்லையுண்டோ? இக்காலத் தாய்மார்கள் தங்கள் மக்களிடம் காட்டும் கரிசனத்தையும் பரிவையும் நம்மவர் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

இதற்குப் பின்னர் அவர் மத்ரஸாவில் சேர்ந்து ஓதவுமில்லை. வேறு எவரிடத்திலும் மண்டியிட்டு ஓதவுமில்லை. கல்விகள் பெருகின. தம்முடைய தந்தை விட்டுப் போன நிலத்தில் ஒரு பகுதியில் மத்ரஸாவையும் மஸ்ஜிதையும் தம் சொந்தச் செலவில் நிர்மாணித்து, அவரே அம்மத்ரஸாவிற்கு ஆசிரியராகவும் மஸ்ஜிதுக்கு இமாமாகவும் இருந்து மார்க்கப் பணி புரியலானார். சிறந்த ஒரு சன்மார்க்க அறிஞரின் புதல்வர் சிறந்த மார்க்க அறிஞராகி, பொது மக்களிடம் நிதிவசூல் செய்யாமல் மத்ரஸாவையும் மஸ்ஜிதையும் நிர்வகிப்பதால், அவர் வயதில் இளைஞராக இருந்தும் மஹாயிமில் வாழ்ந்த பொது மக்கள் அவருக்கு தக்க மரியாதை கொடுத்து கௌரவித்தனர்.

தங்களுள் ஏற்படுகிற சகல பிணக்குகளையும் அவரிடம் கூறி, அவரது தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு தங்கள் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வது அவர்களின் வழக்கம். ஒருநாள் ஒரு ஏழை விதவை ஹளரத் அவர்களிடம் வந்து, தன்னுடைய சகோதரரைப் பற்றி முறையிட்டாள். தன்னுடைய புதல்வியை மணமுடித்துத் தருவதாக அக்குழந்தை பிறந்ததிலிருந்து ஆசை வார்த்தை கூறிய தன் சகோதரர் நானும் என் புதல்வரும் ஏழைகளாக இருக்கிறோம் என்பதைக் கருதி தன்னுடைய புதல்வியை வேறு ஒருவருக்கு மணம் செய்விக்கத் துணிந்து விட்டார். என் சகோதரரை அழைத்து விசாரித்து அவரது புதல்வி பிறந்ததில் இருந்து கூறி வந்த வாக்குறுதிக்கு மாறாக இப்பொழுது நடக்கலாகாது என்று அறிவுறுத்த வேண்டும் என்பது அவளின் முறையீடு.

அவ்விதவையின் சகோதரரான பணக்கார சேட் சாகிபை அழைத்து விசாரித்ததில் தன் தங்கை கூறிய வாக்கு மூலம் முற்றிலும் உண்மை. நான் தான் என் சகோதரிக்கும் அவளது புதல்வருக்கும் பராமரிப்பு இன்று வரை செய்து கொண்டிருக்கிறேன். ஒரு மாப்பிள்ளைக்குப் பெண் தருவதாக வாக்களித்து நிச்சயதார்த்தமும் ஆகி விட்டது. எனவே, திருமணம் நடக்கட்டும், என் சகோதரியின் புதல்வருக்கு வேறொரு பெண்ணை என் செலவிலேயே திருமணம் செய்விப்பதுடன் வழக்கம் போல் என் சகோதரியின் குடும்பத்தை பராமரிக்கிறேன் என்று கூறினார். பெண் தருவதாக ஒரு முறை கூறிய வாக்குறுதியை மீற முடியாது என்று கூறுகிற சேட் சாகிபு தமக்கு மகள் பிறந்தது முதல் இது காறும் எத்தனையோ முறை தன் சகோதரியிடம் கூறிய உறுதிமொழியை மறந்து விட்டது ஆச்சரியமேயாகும். சேட் சாகிபும் தன் பேச்சில் எள்ளளவும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அவரது சகோதரியும் அவரைப் போலவே தன் வழக்கிலிருந்து சிறிதும் மாறவில்லை. இருவரும் தங்கள் கருத்துக்களை விட்டு மாறாததை உணர்ந்த ஹளரத் அவர்கள் உங்கள் இருவருக்கும் பொதுவாக ஒரு தீர்ப்பு வழங்குகிறேன். அதனை இருவரும் மதித்து அதன் படி நடப்பதாக எனக்கு வாக்களியுங்கள் என்று கூறி அவ்விருவரிடமும் வாக்குறுதி வாங்கிக் கொண்டு, சேட் சாகிபு தம்முடைய புதல்விக்கு திருமணம் செய்விப்பதை தற்போதைக்கு ஒத்திவைக்க வேண்டும். அப்பெண்ணை திருமணம் செய்கிற இரு மாப்பிள்ளைகளும் அண்மையில் வர இருக்கிற ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டும். இவ்விருவரில் எவர் முதலாவதாக திரும்ப வருகிறாரோ அவருக்கு சேட் சாகிபின் புதல்வியை திருமணம் செய்விக்க வேண்டும் என்று தீர்ப்பு செய்தார்.

இத்தீர்ப்பை சேட் சாகிபும் அவர் தங்கையும் ஏற்றுக் கொண்டனர். ரமலான் முடிந்த பிறகு முதல் மாப்பிள்ளையாகிய அரபி வியாபாரி, எல்லா நண்பர்களிடமும் சொல்லிக் கொண்டு ஆடம்பரமான முறையில் பம்பாயிலிருந்து கப்பலில் ஹஜ்ஜுக்கு சென்றார். நண்பர்களும் வர்த்தகர்களும் துறைமுகம் சென்று வழியனுப்பி வைத்தனர். சேட்டின் சகோதரி மகனான மற்றொரு மாப்பிள்ளை ஹஜ்ஜுக்கு செல்வதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் துல்ஹஜ்ஜு மாதம் பிறந்து ஏழு நாட்களாகி விட்டன. அன்று மாலை அஸர் தொழுகைக்காக ஹளரத் அவர்கள் உளூச் செய்து கொண்டிருந்த போது இவ்விரண்டாவது மாப்பிள்ளையும் அங்கு வந்து உளூச் செய்தார். அவரைப் பார்த்தவுடன் ஹளரத் அவர்கள் என்ன தம்பி நீ ஹஜ்ஜுக்குச் செல்லவில்லையா என்று வினவினார். அதற்கவர் தாங்கள் அன்று தீர்ப்பு வழங்கிய போதே அரபி வியாபாரியாகிய போட்டி மாப்பிள்ளைக்கு சாதகமான தீர்ப்புச் செய்து விட்டீர்கள் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். அன்றாடம் குடும்பச் செலவுக்கு போதுமான அளவில் சம்பாதிக்க இயலாமல் சிரமப்படுகிற என்னையும் பெரும் வியாபாரம் செய்கிற பணக்காரராகிய போட்டி மாப்பிள்ளையையும் புரிந்து கொண்டே பணச் செலவுள்ள காரியத்தைச் செய்யுமாறு கட்டளையிட்டால், அதனை யார் செய்வார் எவர் செய்ய மாட்டார் என்பதை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ள இயலுமல்லவா? என்று கூறி ஹளரத் முன்னிலையில் கண்ணீரை வடித்தார்.

இந்த காட்சியைக் கண்டவுடன் ஹளரத் அவர்களுக்கு அந்த ஏழை மாப்பிள்ளையின் மீது இரக்கமுண்டாயிற்று. அவரை நன்கு தேற்றி அழுகையை நிறுத்திவிட்டு இன்று இஷாவிற்குப் பிறகு இங்குவா என்று சொல்லி அனுப்பினார். அவரது கட்டளைப்படி அந்த ஏழை மாப்பிள்ளை இரவில் வெகு நேரம்

கழித்து வந்தார். ஊர் அடங்கி விட்டது. ஓதுகிற பிள்ளைகளும் உறங்கி விட்டனர். ஹளரத் அவர்கள் ஹௌளுக் கரைக்கு அவரை அழைத்து வந்து, நான் இந்த ஹௌளுக்குள் குதிப்பேன். என்னுடன் சேர்ந்து நீரும் குதிக்க வேண்டும். கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். தண்ணீருக்குள்ளிருந்து எழுந்திருக்குமாறு நான் சமிக்கை செய்வேன். உடனே நீர் எழுந்திருக்க வேண்டும். கண் விழித்து எதையும் பார்க்கலாகாது என்று கூறி, அவரின் கையைப் பிடித்துக் கொண்டு ஹளரத் அவர்கள் ஹௌளினுள் குதித்து மூழ்கினார்கள்.

ஏழை மாப்பிள்ளையும் ஹளரத் அவர்களின் கட்டளைப்படி கண்ணை மூடிக் கொண்டு ஹளரத்துடன் சேர்ந்து மூழ்கி, பின்னர் ஹளரத் அவர்களின் சமிக்கைப்படி அவருடன் சேர்ந்து எழுந்தார். பின்னர் கண்ணைத் திறக்குமாறு கட்டளை யிட்டவுடன் கண்ணைத் திறந்தார். திருமக்காவினுள் இருக்கக் கண்டு ஆச்சரியம் அடைந்தார். ஹளரத் அவர்களின் கட்டளைப்படி திருமக்காவில் தமக்கு போட்டியாக வந்த மாப்பிள்ளையையும், தமக்கு அறிமுகமான பம்பாய் ஹாஜிகளையும் சந்தித்து ஸலாம் சொல்லி முஸாபஹாவும் செய்து கொண்டார். மறுநாள் மினாவிலும் பின்னர் துல்ஹஜ்ஜு மாதம் 9ந்தேதி அரபாத்திலும், மீண்டும் 10-11-12 தேதிகளில் மினாவிலும் 13-14 தேதிகளில் மக்காவிலும் அவர்கள் யாவரையும் மீண்டும் சந்தித்தார். ஹஜ்ஜு ஜியாரத்துக்கள் முடிந்து ஒரு வாரத்திற்குள் ஹளரத் அவர்கள் ஏழை மாப்பிள்ளையை பம்பாய் கொண்டு வந்து சேர்த்து விட்டார்.

இவ்விதமாக ஹஜ்ஜுக்குச் சென்றதையும் அவர்களைச் சந்தித்ததையும் அவ்வேழை மாப்பிள்ளையோ ஹளரத் அவர்களோ எவரிடமும் சொல்லவில்லை. ஏழை மாப்பிள்ளை

வழக்கம் போல் பம்பாயில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தார். பணக்கார மாப்பிள்ளை ஒட்டகையில் பல நாட்கள் பிரயாணம் செய்து ஜியாரத்தை முடித்துக் கொண்டு ஜித்தாவிலிருந்து கப்பல் மார்க்கமாக பம்பாய் வந்தார். அவர் வருகையைப் பற்றிய தகவல் அறிந்த சேட்சாகிபும் இதரர்களும் துறைமுகம் சென்றனர். ஏழை மாப்பிள்ளையை ஹளரத் அழைத்து நீரும் உமது போட்டி மாப்பிள்ளையை வரவேற்க துறைமுகம் சென்று சந்திக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஹாஜிகளை வரவேற்கிற அக்காலத்து ஒழுங்குப்படி இவரும் சென்று கப்பலில் அவரை வரவேற்று ஆலிங்கனம் செய்தார்.

இவரைப் பார்த்தவுடனேயே பணக்கார மாப்பிள்ளை ஹாஜி நீங்கள் எப்பொழுது மக்காவிலிருந்து வந்தீர்கள்? என்று வினவினார். வரவேற்பதற்காக அங்கு வந்திருந்த சேட்சாகிபும் மற்றவர்களும் இவர் ஹஜ்ஜுக்குப் போகவில்லை. இங்கேயே தான் இருக்கிறார் என்றனர். இதனை பணக்கார அரபி மாப்பிள்ளை இல்லை. இவர் ஹஜ்ஜுக்கு வந்திருந்தார். மக்கா மினா அரபாத் ஆகிய இடங்களில் எல்லாம் இவரைச் சந்தித்தேன் என்று கூறி இவர் ஹஜ்ஜுச் செய்தார் என்பதை உறுதி செய்தார். இவருடன் சேர்ந்து ஹஜ்ஜுக்குச் சென்றிருந்த பம்பாய் வாசிகளும் ஆமாம் அவர் ஹஜ்ஜுக்கு வந்திருந்தார். நாங்களும் சந்தித்தோம் என்றனர். இவ்வாறு துறைமுக சந்திப்புக்கு இவ்வேழை வந்ததே அவருக்குத்தான் சேட்மாமாவின் மகள் என்று யாவருக்கும் புரிந்து விட்டது. இத்தீர்ப்பை ஏற்றுக் கொண்ட சேட்ஜீ தங்கை மகனைத் தழுவிக் கொண்டார். பணக்கார போட்டி மாப்பிள்ளை தம் செலவிலேயே இத்திருமணத்தை செய்து வைத்தார்.

இத்தனை காலமாக சிறந்த ஆலிமின் புதல்வர், சிறந்த ஆலிம், சம்பளம் வாங்காமல் மஸ்ஜிதுக்கு இமாமாகவும் மத்ரஸாவிற்கு ஆசிரியராகவும் இருந்து சன்மார்க்க சேவை செய்பவர், மஸ்ஜிது மத்ரஸாவின் நிறுவனர், சிறந்த நிர்வாகி, பாகுபாடின்றி தீர்ப்புக் கூறும் நீதிமான் என்றெல்லாம் நினைத்துக் கொண்டாடிக் கொண்டிருந்த பம்பாய் வாசிகள் அவரால் அற்புதமாக நிகழ்ந்த இந்த ஹஜ்ஜுப் பயணம் பற்றிய தகவல் இவரை ஒலி குத்துபு என்றெல்லாம் நினைத்து மகிமைப்படுத்தும் நிலை வந்தது. இச்சம்பவத்திற்கு பிறகு வேறு பல அற்புதங்களும் அவரிலிருந்து நிகழ்ந்தன. அவர் திருமணம் செய்து கொள்ள வில்லை. அவர் இறந்த பிறகு ஒரு வருடத்திற்குள் அவருடைய தாயார் இறந்தார். அவர் கட்டிய மஸ்ஜிதிலேயே அவரையும் அவருடைய தாயாரையும் அடக்கி இருக்கிறார்கள்.

இவர் நூலாசிரியருங் கூட. இவர் இயற்றிய அகப் பொருள் தப்ஸீர் உலகெங்கும் பரவி இருக்கிறது. எகிப்து, மொரோக்கோ போன்ற நாடுகளில் இந்த தப்ஸீர் அதிகம் பிரசித்தி பெற்றிருக்கிறது. இவர் ஷாபிஈ மதுஹபு சட்ட நூல்:-(பிக்ஹு கித்தாபு) ஒன்றும் எழுதியுள்ளார். இதுவும் உலக முழுவதும் பரவி இன்னும் ஜீவ நூல்களாக இருந்து வருகின்றன. ஜமாதுல் அவ்வல் மாதத்தில் இவருக்கு வருடாந்திர பாத்திஹா கந்தூரி பிறை பிறந்ததிலிருந்து பல நாட்கள் நடக்கிறது. கடைசி தினத்தன்று பம்பாய் போலீஸ் தலைமைக் காரியாலயம் கந்தூரியை பம்பாய் கவர்னர் தலைமையில் நடத்துகிறது. பிரதி வியாழக்கிழமை தோறும் மாலையில் மஹாயிம் போலீசார் ராணுவ மரியாதையுடன் அணிவகுத்து வந்து ஸலாம் செய்கின்றனர். இவ்விபரங்களை آفتاب کوکن ஆப்தாபே

கோக்கன் என்ற உர்தூ நூலில் காணலாம். பம்பாயில் இந்நூல்:- முஸ்லிம் புத்தக விற்பனை நிலையங்களில் கிடைக்கும். இந்நூலை படித்ததுமின்றி பலமுறை இங்கு யாம் ஜியாரத்தும் செய்துள்ளோம்.

இச்சரித்திரத்திலிருந்தும் ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சகோதர வர்க்கத்தினரான பனூ இஸ்ராயீல்கள் பற்றிய திருக்குர்ஆன் கூறிய சம்பவத்திலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்னவெனில் நல்ல பெற்றோர்கள் தங்கள் மக்களுக்காக இறைவனிடம் கேட்கும் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் புதல்வர் மறு உலகில் உயர்வுகளை அடைவது மட்டுமின்றி இவ்வுலகிலும் உயர்வுகளை அடைகின்றனர் என்பதே. நீண்ட காலம் இவ்வுலகில் வாழவும், இவ்வுலக வாழ்வில் தரித்திரத்தை அடைந்து சிரமப்படாமல் சுபிட்சமாக வாழவும், இவ்வுலகை விட்டு மறையும் போது ஈமானுடன் மரணிக்கவும், இவ்வுலக மக்களின் அபிமானத்தைப் பெறவும் விரும்புவோர் தம் பெற்றோர்களை மதித்து கண்ணியப்படுத்தி அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று ஹதீஸ் ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. இதனை நம்நாட்டுப் பெற்றோர்களும் அவர்களின் மக்களும் சிந்தித்து செயல்படுவார்களாக. பெற்றோர்களுக்கு நன்றியுள்ள மக்களாக வாழ நம் யாவருக்கும் ரஹ்மான் நல்லருள் புரிவானாக.

இவ்வுலகாதாயத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகிற வர்த்தகம், கைத்தொழில் போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர் தங்கள் ஸ்தாபனத் தலைவர்கள் இடும் பணிகளை மனமுவந்து உடனுக்குடன் செய்வார்களாயின் அத்தொழிலாளர்கள் மீது தொழிலதிபர்களுக்கு அன்பேற்பட்டு

விசேஷச் சலுகைகளை வழங்குவதையும் அவர்களுக்கு பதவி உயர்வளிப்பதையும் நாம் நேரடியாகக் காண்கிறோம். எஜமான் இட்டபணியை உடனடியாகச் செய்யாமல் அப்பணியைக் குறித்து கேள்விகளைக் கேட்கிற பணியாளர்களை எஜமானர்கள் வெறுப்பதையும், பணியை விட்டு விலக்குவதையும் நாம் காண்கிறோம். இது போல மார்க்க விஷயத்தில் அல்லாஹ்வும் அவனுடைய ரசூலும் கூறியுள்ள கட்டளைகளைப் பற்றிய குறுக்கு விசாரணைகள் புரியாமல் அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் அடியார்களாகிய நமக்கு நன்மையைத் தரும். அவ்வாறின்றி அவற்றிற்கு காரண காரியங்களைத் துருவி ஆராய்ந்து கொண்டு விவாதங்கள் செய்வது தீமையைத் தான் உண்டு பண்ணும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த போது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை அவர்களின் மறைவுக்குப் பிறகு கேட்டு தர்க்கம் செய்வது நன்மையை நல்காது என்பதையும், சன்மார்க்கம் கூறுகிற ஏவல் விலக்கல்களுக்கு எதிர்ப்பின்றி தலை சாய்ப்பது தான் நம்மவரின் கடமையேயன்றி விளக்கம் என்ற பெயரால் கடமையைச் செய்யாமல் தட்டிக் கழிப்பது விவேகமான செயலாகாது. கண்ணியவான்களான ஸஹாபிகள் இந்த ஹதீஸில் கண்ட உபதேசத்துக்குக் கட்டுப்பட்டு இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்து உயர்வடைந்ததை நாம் முன் மாதிரியாகக் கொண்டொழுக எல்லாம் வல்ல ரஹ்மான் நமக்கருள் புரிவானாக. ஆமீன்.

10. ஹலாலைப் பேணுவீர்

عن ابي هريرة رضي الله تعالى عنه قال: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَيُّهَا النَّاسُ إِنَّ اللهَ طَيِّبٌ لاَ يَقْبَلُ إِلاَّ طَيِّبًا وَ إِنَّ اللهَ أَمَرَ الْمُؤْمِنِيْنَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِيْنَ. (فقال تعالى: يا ايها الرسل كلوا من الطيبات واعملوا صالحا. وقال تعالى: يا ايها الذين آمنوا كلوا من طيبات ما رزقناكم) ثُمَّ ذَكَرَ الرَّجُلَ يُطِيْلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ يَا رَبُّ يَا رَبُّ وَمَطْعَمُهُ حَرَامٌ وَمَشْرَبُهُ حَرَامٌ وَمَلْبَسُهُ حَرَامٌ وَغُذِيَ بِالْحَرَامِ فَأَنَّى يُسْتَجَابُ لَهُ. رواه مسلم.

"நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தன்; பரிசுத்தமானதையல்லாமல் அங்கீகரிக்க மாட்டான். ரசூல்மார்களே சுத்தமானவற்றிலிருந்து நீங்கள் புசித்து, நல்ல காரியத்தைச் செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். விசுவாசிகளே: உங்களுக்கு நாம் அளித்திருப்பதிலிருந்து புசியுங்கள் என்றும் அவன் கூறி, முர்ஸலான நபிமார்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டதையே மூமின்களான விசுவாசிகளுக்கும் அவன் கட்டளையிட்டிருக்கிறான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

பின்னர், "மனிதன் நீண்ட பிரயாணம் செய்து வியர்த்துப் பூத்து வானின் பால் இரு கரங்களையும் உயர்த்தி என் ரப்பே, என் ரப்பே என்கிறான். அவனுடைய சாப்பாடு ஹராம். அவனுடைய பானம் ஹராம். அவனுடைய உடை ஹராம். உணவு ஹராம், இந்நிலையில் (அவனுடைய பிரார்த்தனை) அவனுக்கு எங்கே அங்கீகரிக்கப்படப் போகிறது" என்று (அவர்கள் கூறிய பொன்மொழியையும்) கூறினார்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

அல்லாஹ் குறையில்லாதவன், குற்றமற்றவன். எனவே, அவன் பரிசுத்தன், தூயன், மனிதர்கள் தங்கள் உடலாலும் பொருளாலும் செய்யும் அமல்களில் சுயநலம், பிறரை மெய்ப்பித்தல், பேராசை போன்ற அழுக்குகளில்லாமல் சுத்தமான தூயவற்றையே அங்கீகரிப்பான்.

தன் உடல் நலத்தைக் காப்பாற்ற மனைவி மக்களைக் காப்பாற்ற என்ற நோக்கத்தில் செய்யும் காரியங்கள் சுயநலத்தைச் சேர்ந்ததல்ல. உடலில் வலிமை இருந்தால் தான் நன்கு உழைத்து சம்பாதித்து மனைவிமக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் வழங்கலாம். தொழுகை நோன்பு ஹஜ்ஜு போன்ற உடலால் புரியப்படும் வணக்கங்களைப் புரியலாம் என்ற எண்ணத்தில் நன்கு உண்பதும் பருகுவதும் உடற் பயிற்சி செய்வதும் வணக்கங்களின் இனத்தைச் சேர்ந்ததே.

தன்னுடைய பொறுப்பை உணர்ந்து மனம் உவப்புடன் மனைவி மக்களுக்காக சம்பாதித்துக் கொடுப்பது சுயநலமல்ல. உன்னுடைய பொறுப்பை உணர்ந்து உன் மனைவியின் வாயில் நீ ஊட்டுகிற ஒரு கவாள உணவு கூட உனது தர்மக் கணக்கில் (ஸதக்காவில்) சேர்க்கப்படும் என்று ஹதீஸ் ஷரீபில் வந்திருக்கிறது. எனவே, ஒருவர் தன் மனைவி மக்களைக்

காப்பாற்ற நல்லவிதமாக போஷிக்க என்ற எண்ணத்துடன் சம்பாதிப்பதும் சன்மார்க்க ஊழியமும் இறைவனுக்கு திருப்தியான முயற்சியுமாகும்.

இதற்காக சன்மார்க்கத்திற்கு விரோதமான முறையில் தொழில் செய்தல், பொருளீட்டல் போன்றவை இறைவனின் திருப்தியை சம்பாதிப்பதற்கு மாறாக அதிருப்தியை உண்டு பண்ணும். இக்காலத்திலுள்ளவர்கள் மனைவி மக்களைப் போஷிக்க, அவர்களை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் தொழில் செய்கின்றனர், உழைக்கின்றனர், வர்த்தகம் செய்கின்றனர்.

இது நல்ல எண்ணம் தான். என்றாலும், இறைவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பூர்த்தியாக நிறைவேற்றுவது மில்லை. மனைவி மக்களை சரியான முறையில் காப்பாற்றுவது மில்லை, அவர்களுக்கு சொத்துச் சேர்த்து வைத்து விடல் ஒன்றுதான் தங்கள் கடமைகள் பூர்த்தியடைந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். எட்டாவது ஹதீஸில் சொல்லி இருக்கிறபடி மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை குடும்பத்தலைவன் நிறைவேற்ற வேண்டும். அக்கடமைகளை நிறைவேற்றாமல் செல்வத்தை திரட்டி அவர்களிடம் ஒப்புவிப்பது அவர்களுக்கோ குடும்பத் தலைவனுக்கோ நன்மை பயக்காது. சன்மார்க்க பக்தியும் சன்மார்க்க அறிவுமற்றவர்கள் கையில் செல்வம் சேர்ந்தால் அச்செல்வம் பெரும்பாலும் துன்மார்க்கத்தில் தான் செலவாகும். இதனால் அவர்கள் துன்மார்க்கர்களாகுவதற்கு செல்வம் பயன்படுகிறது. செல்வத்தை திரட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு சன்மார்க்கக் கல்வியை புகட்டுதல் இஸ்லாமியப் பண்பாட்டில் பயிற்சியளித்தல் இவ்வுலகில் கௌரவமான முறையில் வாழ்வதற்கான வழிகளைக் காட்டல்

ஆகிய காரியங்களில் அப்பணத்தை செலவு செய்தால், குடும்பத் தலைவனும் குடும்பத்து அங்கத்தினர்களும் இம்மை மறுமை இரண்டிலும் பயன் அடைவர்.

இந்நிலையில் குடும்பத்திற்கு செல்வத்தை திரட்டிக் கொடுக்கும் எண்ணத்தில் சன்மார்க்கத்தில் அனுமதிக்காத முறைகளை கையாள்வதற்கு பல குடும்பத் தலைவர்கள் பின்வாங்குவதில்லை. எந்த வழியானாலும் சரி செல்வம் திரள வேண்டும் என்ற நோக்கத்திலேயே பலர் முயற்சி செய்கின்றனர். இதில் அவர்கள் வெற்றி பெற்று, குடும்பத்தாரிடம் அதனை ஒப்புவித்தால், அந்தப் பணத்தால் இவ்வுலகில் அவர்களுக்கு சுகம் கிடைப்பதில்லை. தகாதமுறையில் வந்த செல்வம் அதனை அனுபவிப்பவரின் சன்மார்க்க பக்தி, இஸ்லாமியப் பண்பாடு ஆகியவற்றைக் கெடுப்பதுடன் தீய நடத்தைக்கு அவர்களை இட்டுச் செல்கிறது. எனவே, தவறான வழியில் வந்த செல்வம் தவறான வழியைக் காட்டும். இது யாவருக்கும் தீமை பயக்கும்.

இக்காலத்தவரின் சம்பாத்தியங்கள் கலப்படமானவை களாகவே இருக்கின்றன. வியாபாரம், விவசாயம், கைத்தொழில் ஆகியவைகள் எந்த முறையில் இருக்க வேண்டும் என்பதற்குரிய சட்ட திட்டங்கள் பிக்ஹு சட்ட புத்தகங்களில் எழுதப்பட்டி ருக்கின்றன. இவற்றை வாங்கிப் படித்துணர வேண்டும் என்ற எண்ணம் நம்மவருக்கு இருக்கிறதா? என்பதை சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. இக்காலத்தில் பொய் சொல்லாமல் வியாபாரம் செய்ய முடியாது என்ற கொள்கையே பெரும்பாலான முஸ்லிம்களுக்கு இருந்து வருகிறது. தாடி வைத்து தலைப்பாகை கட்டினால் வியாபாரம் நடைபெறாது என்ற எண்ணம் பலரின் உள்ளங்களில் ஆணிவேர் விட்டுப் பதிந்திருப்பதாகத்

தோன்றுகிறது. வட்டிக் கலப்பின்றி வியாபாரம் இல்லை என்று பலர் கருதுகின்றனர். தாடி வைத்து தொப்பி போடுபவர்களை, தலைப்பாகை கட்டுபவர்களை, ஐங்காலத்து தொழுகைகளை நிறைவேற்றுபவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள பலர் விரும்புவதில்லை. இவை யாவற்றையும் கவனிக்கையில் அவர்களிடமுள்ள வர்த்தகச் செல்வத்தில் பெரும்பாகம் சன்மார்க்கத்திற்கு முரணான முறையில் சம்பாதிக்கப் பட்டவைகளாக இருக்குமோ என்ற கருதத் தோன்றுகிறது. வியாபாரம் வளமாக நடைபெற வேண்டுமாயின் தாடி மீசை இருக்கக் கூடாது. தலையில் கிராப் இருக்க வேண்டும் என்று கூறுவோரும் நம்மில் ஆங்காங்கே காணப்படுகின்றனர். முஸ்லிம் களிலும் முஸ்லிம் அல்லாதாரிலுமுள்ள பல வியாபாரிகள் பொய்யில்லாமலும் வட்டிக் கலப்பில்லாமலும் தங்கள் தொழில் களை சிறப்பாகச் செய்கின்றனர். எத்தனையோ வியாபாரிகள் தாடி வைத்து தலைப்பாகை தொப்பிகளை அணிந்து திறமையாக தொழில் செய்கின்றனர். சிந்தனா சக்தியுள்ளவர்கள் இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இக்காலத்தில் ஹஜ்ஜுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கு தக்கவாறு இவ்வெண்ணிக்கை பெருகி இருக்கலாம். போக்கு வரத்திற்குரிய சாதனங்கள் முற்காலத்தில் மிகக் குறைவாக இருந்தன. இக்காலத்தில் கடல் மார்க்கமும் கரை மார்க்கமும் ஆகாய வழிகளும் திறந்திருக்கின்றன. நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்திற்கு குறித்த காலத்தில் சென்று வர வசதிகள் ஏற்பட்டிருப்பதால் ஹாஜிகளின் எண்ணிக்கை பெருகி இருக்கலாம். என்றாலும், முற்காலத்தில் ஹஜ்ஜுக்கு செல்வோர்

உயிருடன் திரும்ப வருவது சந்தேகம் என்ற எண்ணத்தில் கடன்களைத் தீர்த்து விட்டு, சொத்துச் சுகங்களை உரியவர்களுக்கு எழுதிக் கொடுத்து விட்டு, சண்டை சச்சரவு செய்திருந்தால் அவற்றை சரி செய்து விட்டு, புனிதமான எண்ணத்துடன் ஹஜ்ஜுக்குச் சென்று, திரும்ப வந்த பின்னர் கூடிய வரையில் உலகமாயையில் சிக்காமல் ஒதுங்கி தூய வாழ்வை நடத்தினர். இக்காலத்திலும் இவ்வாறாக உள்ள ஹாஜிகள் இல்லாமல் இல்லை. என்றாலும், சிலர் தங்களுடைய ஹஜ் பயணத்தை மெய்யான புனிதப் பயணமாக அமைக்காமல் மக்கா பயணமாகவோ வியாபாரப் பயணமாகவோ ஆக்கிக் கொள்கின்றனர்.

ஹஜ்ஜுக்குச் செல்பவர் மக்கா, மினா, அரஃபாத், முஜ்தலிஃபா போன்ற இடங்களில் வியாபாரத்தையும் செய்வது இஸ்லாமிய ஃபிக்ஹு சட்டப்படி தடுக்கப்படவில்லை. ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டி இருப்பவர் வியாபாரமும் செய்யலாம். கூலிவேலையும் செய்யலாம். சட்டப்படி இது செல்லத்தக்க காரியமாகும். ஆயினும், ஹஜ்ஜுச் செய்வதுதான் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். போதுமான அளவு பணமில்லாதவர்கள் பிறரிடம் யாசகம் வாங்காமலிருப்பதற்காக தங்களிடம் இருக்கிற பணத்தில் வியாபாரமும் செய்து சம்பாதித்துக் கொள்வது வரவேற்கத் தக்க செயலாகும்.

மக்கா, மினா, முஸ்தலிஃபா, அரஃபாத் போன்ற இடங்களில் ஹாஜிகளுக்கு நல்ல பொருள் கிடைக்க வேண்டும். அவர்களுக்கு வசதி ஏற்படட்டும். இந்த வகையில் ஹாஜிகளுக்கு பணிவிடை செய்வோம் என்ற நல்லெண்ணத்தில் ஹாஜிகளிடம் வியாபாரம் செய்வது பாராட்டத்தக்கதாகும். இந்த முறையில் வியாபாரம்

செய்வது பாராட்டத்தக்கதாகும். இந்த முறையில் வியாபாரம் செய்யும் ஹாஜிகளுக்கு அவர்கள் ஹஜ்ஜுச் செய்த பலனும் ஹாஜிகளுக்கு பணி விடை செய்த பலனும் இன்ஷா அல்லாஹ் மறுமையில் கிடைக்கும் என்று நம்பவும் இடமிருக்கிறது. அவ்வாறின்றி மக்காவில் எந்தெந்த சாமான்களை கொள்முதல் செய்தால் திரும்ப வந்து இலாபத்திற்கு விற்க முடியும் என்று திட்டமிட்டு அதற்கு தேவையான பணத்தை எடுத்துக் கொண்டு செல்வது புகழத்தக்க காரியமில்லை. இக்காலத்தில் அந்நிய செலவாணியிலுள்ள கஷ்டங்களைக் கருதி சில நாடுகள் ஹாஜிகள் இத்தனை ரூபாய் தான் தங்களுடன் எடுத்துச் செல்லலாம் என்று நிர்ணயித்திருக்கின்றன. அந்த நிர்ணயத்தை மீறி அதிகப்படியாக எடுத்துச் செல்வது அந்த நாட்டு சட்ட விதிமுறைகளை மீறுவதாக இருக்கிறது. இப்படி மீறிக் கொண்டு செல்வது தாங்கள் வசிக்கும் நாட்டுக்கு துரோகம் செய்வது மட்டுமின்றி பொருளாதார கஷ்டத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது. இவை யாவும் பாவமான காரியங்கள். அல்லாஹ் விற்கு அதிருப்தியை உண்டு பண்ணுங் காரியங்கள்.

தன் வாழ்நாளில் எண்ண முடியாத பல பாவங்களைச் செய்து திரு மக்கா சென்றேனும் ஹஜ்ஜுச் செய்து பாவச் செயல்களுக்கு முழுக்குப் போடுவோம் என்ற எண்ணத்திற்கு இடங்கொடுக்காமல் சன்மார்க்கத்தில் விலக்கப்பட்ட காரியங்களை திருமக்காவிலும் செய்ய உறுதி பூண்டு, தன் கோரிக்கையை அங்கும் நிறைவேற்றிக் கொண்டு வீடு திரும்புவோரின் நிலை குளிக்கப் போய், சேற்றைப் பூசிக் கொண்டு திரும்பியவரின் கதையாக முடியும். இப்படிப்பட்டவரின் வாழ்க்கயில் எந்த மாறுதலும் இருக்காது. ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு முன்னர் செய்த

சட்டவிரோதச் செய்கைகளைப் பார்க்கினும் அதிகமாகவே சட்ட விரோதச் செய்கைகளை அவர் செய்வார். இது அவரது ஹஜ்ஜு வெளிப் பார்வைக்கு பூரணமானதாகக் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் அவரது எண்ணத்தில் தூய்மை இல்லாத காரணத்தால் அல்லாஹ்விடத்தில் அங்கீகாரம் பெறவில்லை என்பதற்கு அடையாளமாகும். இதனையே இந்த ஹதீஸின் பிற்பகுதியில் மனிதன் நீண்ட பயணம் செய்து வியர்த்துப் பூத்து வானின் பால் இரு கரங்களையும் உயர்த்தி, என் ரப்பே என் ரப்பே என்கிறான், அவனுடைய சாப்பாடு ஹராம், அவனுடைய பானம் ஹராம். அவனுடைய உடை ஹராம் உணவு ஹராம் இந்நிலையில் (அவனுடைய பிரார்த்தனை) அவனுக்கு எங்கே அங்கீகரிக்கப்படப் போகிறது என்ற வசனம் குறிக்கிறது.

திருமக்காவில் கஃபா ஷரீபின் திரையைப் பிடித்துக் கொண்டும், வாசல் படியில் ஒட்டிக் கொண்டும், தவாபு செய்யும் போதும், தவாஃபு செய்த பிறகும், ஸஃபா, மர்வா குன்று மேடைகளின் மீது நின்று கொண்டும், அவ்விரண்டுக்கும் இடையில் ஸயீ செய்யும் போதும், அரபாத்திலும், முஸ்தலிஃபாவிலும் ஹாஜிகள் துஆ செய்கின்றனர். நல்ல தூய எண்ணத்துடன், தூய பணத்தை செலவு செய்து, தூய உணவை அருந்தி, தூய உடை உடுத்தி உருக்கமாகக் கேட்கும் துஆ உடனே அங்கீகரிக்கப்படுகிறது என்பது உறுதி. என்றாலும், சட்ட விரோதச் சம்பாத்தியத்துடன், சட்ட விரோதச் சம்பாத்திய உணவை உட்கொண்டும் பானமருந்தியும் உடை உடுத்தியும், பிரயாணம் செய்து சட்ட விரோதச் செயலைச் செய்து கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக சேர்ந்து என் ரப்பே என் ரப்பே என்று கூச்சலிட்டால், இது காட்டுக் கூச்சல் என்று கருதப்படுமேயன்றி துஆ என்று கருதப்பட மாட்டாது. இதனை நம்மவர் உணர வேண்டும்.

துஆ அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் நம்மில் இருவகைச் சுத்தம் தேவை. ஒன்று அகச் சுத்தம்; மற்றொன்று புறச் சுத்தம். பாவம் செய்வதால் தான் மனிதனுக்குத் துன்பங்களும் துயரங்களும் உண்டாகின்றன. எனவே, தௌபா இஸ்திஃபார் செய்து பாவத்தை விட்டு விலகி சுத்தமாகிக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக உணவு, பானம், உடை ஆகியவைகள் சன்மார்க்கத்திற்கு முரணானவைகளாக இல்லாமல் ஹலாலானவைகளாக இருக்க வேண்டும். இவ்விரண்டுக்குப் பின்னர் மனம் வாக்கு ஆகியவை ஒன்றித்து பயபக்தியுடன் துஆ கேட்க வேண்டும். பிறருடைய உரிமையை அபகரித்திருந்தால் அல்லது நஷ்டப்படுத்தி இருந்தால் இதனை உரியவரிடம் திரும்பக் கொடுக்க வேண்டும். திரும்ப கொடுக்க இயலாத நிலை இருந்தால் உரியவரிடம் மன்னிப்புப் பெற வேண்டும். இவற்றில் எதையும் செய்யாமல் வெறுமனே கையை உயர்த்தி நாவால் மட்டும் பிரார்த்தித்தால் அது காட்டுக் கூச்சலைத் தவிர்த்து வேறு அல்ல என்ற நிலையைத் தான் அது அடைய நேரிடும்.

இவை யாவற்றுக்கும் அதிக பிரதானமானது ஹலாலான சம்பாத்தியம், ஹலாலான சாப்பாடு, ஹலாலான பானம், ஹலாலான உணவுகளே இதனை இந்த ஹதீஸின் முற்பகுதி யிலுள்ள இரண்டு ஆயத்துகளும் நாம் உங்களுக்கு அளித்ததி லிருந்து மணமானதை சுத்தமானதை என்ற வார்த்தைகள் குறிப்பிடுகின்றன. இக்கட்டளையில் நபிமார்களும் பொது மக்களும் கட்டுப்பட்டவர்கள். இவ்விஷயத்தில் அவர்களுக் கிடையில் பாகுபாடில்லை என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுட்டிக் காட்டி இருப்பதை நாம் கவனித்து சன்மார்க்க நெறிக்கு உட்பட்டு நமது தொழில்களையும் சம்பாத்திய முறைகளையும் அமைத்துக் கொள்வோமாக.

சம்பாத்தியத்தில் சிறந்தது விவசாயம். இரண்டாவது கைத் தொழில், மூன்றாவது வியாபாரம் என்று இமாம் ஷாபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள். முதல் தரமான சம்பாத்தியம் உழைத்துச் சம்பாதித்தல். இரண்டாவது விவசாயம். மூன்றாவது வியாபாரம் என்று இமாம் அபூஹனீஃபா ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள். இம்மூவகைச் சம்பாத்தியமும் ஹலால் தான். எனினும், ஹராம் சம்பந்தப்படாமல் இருப்பதற்கு மிகவும் ஏற்றது என்பதைக் குறிப்பிடுகையில் விவசாயத்தை இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சிறப்பாகக் கருதுகிறார்கள்.

உடல் உழைப்பில் ஹராம் கலப்பதற்கு இடமே இல்லை. விவசாயத்தில் ஹராமுக்கு இடமில்லை. என்றாலும் விதைப்பு, அறுவடை முதலிய காரியங்களை ஒரே மனிதன் தன்னந் தனியாக செய்து முடிக்க இயலாது. உதவிக்கு பிறரை அழைக்க நேரிடும். அவர்களால் ஹராம் கலப்பு ஏற்பட இடமுண்டு. சொந்த உடல் உழைப்பில் இந்தச் சந்தேகத்திற்கு இடமில்லை என்பது ஹனஃபீ இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கருத்து. வியாபாரம் ஹலாலான சம்பாத்தியம்தான். எனினும் இதில் ஹராம் கலக்கும் சந்தர்ப்பம் மற்றிருவகை சம்பாத்தியத்தைப் பார்க்கினும் அதிகமிருப்பதால் இதனை இரு இமாம்களும் மூன்றாம் வகையில் சேர்த்துள்ளார்கள். ஹலாலான சம்பாத்தியத்தை மேற்கண்டவாறு அவர்கள் தரம் பிரித்துக் கூறியதற்கு அடிப்படைக் காரணம் அவ்விருவரிலும் உள்ள தக்வாவும், மார்க்கச் சட்டத்தைப் பேணி நடப்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வமுமாகும்.

வியாபாரம் பற்றி இமாம்களுக்குள் கருத்து வேற்றுமை இல்லை. திருமக்காவை ஹிஜ்ரத்துச் செய்து திருமதீனாவில்

குடியேறிய ஸஹாபிகள் யாவரும் வியாபாரிகளே. வியாபாரத்தின் மூலமாகவே அவர்கள் தங்களுடைய பொருளாதார நெருக்கடிக்கு அதிவிரைவில் பரிகாரம் கண்டனர். அவர்கள் சகல விதமான வியாபாரங்களையும் செய்திருக்கின்றனர். எனவே, ஹலாலான தொழில்களில் அதனையும் ஒன்றாகச் சேர்த்த இமாம்கள், அத்தொழிலுக்கு கடைசி இடத்தைத்தான் கொடுத்திருக்கிறார்கள்.

முஸ்லிம்களாகிய நம்மவர் வர்த்தகத் திறமையில் பிறருக்குப் பிந்தியவர்களல்லர். என்றாலும், மார்க்கக் கல்வி குறைவாலும், வர்த்தகத்தைக் குறித்து இஸ்லாம் இயற்றிய சட்ட திட்டங்களை நடைமுறையில் கடைப்பிடிக்காமலும், இதர சமூக மக்களை முன்மாதிரியாக வைத்து இக்காலத்து முஸ்லிம்கள் வர்த்தகம் செய்வதால் அவர்களுக்கு அதில் பரக்கத்து இல்லை. நம்மிலுள்ள சிலர் பணம் புரளுவது தான் பரக்கத்து என்று தவறாகப் புரிந்திருக்கின்றனர். பரக்கத் என்பதற்கு பணம் திரளுதல் என்பது பொருளல்ல. அல்லாஹ் அளித்த பாக்கியத்தை நன்கு அனுபவித்தல், பொது மக்களுக்கு பிரயோஜனமான சன்மார்க்க காரியங்களில் அவற்றை ஈடுபடுத்தி மறுமையில் தனக்கு நன்மைப் பயன் கிடைப்பதற்கான நிரந்தர காரியங்களை ஏற்படுத்துதல் ஆகியவைகளாகும்.

நம்மவரில் லட்சாதிபதிகள் இருக்கின்றனர். கோடீஸ்வரர்கள் இருக்கின்றனர். தொழில் அதிபர்களிருக்கின்றனர். வர்த்தக மன்னர்களிருக்கின்றனர். விவசாய நிபுணர்களிருக்கின்றனர். என்றாலும், பொது நலத்தை முதன்மையாகக் கொண்டவர்கள் தான் அரிது. தனி நபர் நலனை நாடுவோர் ஏராளம். இதனால், முஸ்லிம்களிடம் உள்ள பணம் குறிப்பிட்ட சிலரிடம் குவிகிறது. யாவருக்கும் பயனின்றி தேங்கிக் கிடக்கிறது. பணத்தை

திரட்டியவர்கள் அதனை சன்மார்க்க முறைப்படி திரட்டி இருந்தால், ஊதாரித்தனம் செய்யாமல் சன்மார்க்கத்துக்கு விரோதமில்லாத காரியங்களிலும் மறுமையில் தனக்கு பயன்படக் கூடிய காரியங்களிலும் செலவு செய்வார். அவ்வாறில்லாவிடில் அவருக்கு நல்ல காரியங்களில் செலவு செய்ய மனமில்லாமல், சூதாட்டம், குடி, ஆடல், பாடல் கோர்ட்டு வழக்கு முதலியவற்றில் செலவாகும். அவருடைய உடலிலும் பலவித நோய்களேற்பட்டு, தாராளமாக உண்ணவோ பருகவோ, உடுத்தவோ முடியாமல் பத்தியமாக உயிர் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்.

இவர் திரட்டிய செல்வம் இவருக்கு இம்மையிலும் மறுமையிலும் பயன்படாமல் போனது மட்டுமின்றி இவருடைய வாரிசுகளுக்கும் இதே தீமைகளைச் செய்து அவர்களையும் அனுபவிக்காமல் செய்து விடும். சன்மார்க்கத்திற் கிணங்கிய முறையில் செல்வத்தை திரட்டி இருந்தால் மேற்கண்டவாறான தீமையான காரியங்களில் அவை செலவாகா. நல்ல காரியங்களிலேயே செலவாகும். அதனை அவரும் அவருடைய வாரிசும் அனுபவிப்பர். பொதுக்காரியங்களுக்கும் உதவும். இதனை சிந்தித்துப் பார்த்தால் உணர முடியும். எனவே, பணம் திரளுவது மட்டும் பரக்கத்தில்லை, அவருக்கும் அவரது வாரிசுகளுக்கும் பொதுக் காரியத்திற்கும் உதவாமல் வெறுமனே செல்வத்தை திரட்டி வைப்பது பூதங்காத்த பொக்கிஷத்திற்கே சமம்.

பிரபல துறவியான ஹஸரத் இப்ராஹீமுப்னு அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஒரு முறை பஸராவின் கடைத் தெருவில் சென்றார், அவரை அங்குள்ள மக்கள் சூழ்ந்து கொண்டு அபூஇஸ்ஹாக்கே, நாங்கள் இறைவனைப் பிரார்த்திக் கிறோம். எங்களுடைய பிரார்த்தனை நிறைவேறுவதில்லையே.

இதற்குக் காரணம் என்னவென்று வினவினர். அதற்கவர் பத்துகாரியங்களால் உங்களுடைய இதயங்கள் மரணித்து விட்டன.

1. நீங்கள் அல்லாஹ்வை அறிந்திருக்கிறீர்கள். (உங்களைப் படைத்து காத்து இரட்சிப்பவன் அவன்தான் என்பது உங்களுக்குத் தெரியும்). ஆனால், அவனுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நீங்கள் நிறைவேற்றுவதில்லை.

2. அல்லாஹ்வின் ரசூலை நேசிப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் (அவர்களை விசுவாசித்திருப் பதாகக் கூறுகிறீர்கள்) ஆனால், அவர்கள் காட்டிய வழி முறையாகிய ஸுன்னத்தை நீங்கள் கடைப்பிடித் தொழுகு வதில்லை.

3. நீங்கள் திருக்குர்ஆனை ஓதி இருக்கிறீர்கள் ஆனால், அதில் கூறப்பட்டவாறு செயலாற்றுவதில்லை.

4. அல்லாஹ் உங்களுக்கு கொடுத்துள்ள பாக்கியங் களை அனுபவிக்கிறீர்கள். ஆனால், அதற்குத் தக்கவாறு நன்றி செலுத்துவதில்லை.

5. ஷைத்தான் உங்களுடைய விரோதி என்று ஒப்புக் கொள்கிறீர்கள். ஆனால், அவனுடைய நோக்கத்திற்கிணங்க செயலாற்றுகிறீர்கள்.

6. சுவர்க்கம் உண்டு என்று நம்புகிறீர்கள். ஆனால் அதனை அடைவதற்கான காரியங்களைச் செய்வதில்லை.

7. நரகம் உண்டு என்ற விசுவாசம் உங்களுக்கிருக்கிறது.

ஆனால், அதனை விட்டு விலகுவதற்கான காரியங்களைச் செய்தில்லை.

8. மரணம் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை உறுதியாகத் தெரிந்திருக்கிறீர்கள். ஆனால், அதற்குத் தகுந்தவாறு உங்களை நீங்கள் ஆயத்தம் செய்து கொள்வதில்லை.

9. நீங்கள் நித்திரையிலிருந்து எழுந்ததிலிருந்து பிறருடைய குறைகளையே கவனிக்கிறீர்கள். உங்களிலுள்ள குறைகளைக் குறித்து நீங்கள் சிந்திப்பதில்லை.

10. உங்களில் மரித்தவரை நல்லடக்கம் செய்கிறீர்கள். ஆனால், அதிலிருந்து நீங்கள் பாடம் கற்றுக் கொள்வதில்லை என்று பதிலளித்தார்கள்.

எனவே, இவ்வுலகில் வாழும் பொழுதே மறுமைக் கானவற்றை செய்து கொள்பவர் தான் புத்திசாலி. நிலையற்ற இவ்வுலகை சதமென நம்பி மோசம் போகாதிருக்க நம் அனைவருக்கும் ரஹ்மான் ஜல்ல ஷானு ஹு வதஆலா கிருபை செய்வானாக. ஆமீன்.

11. சந்தேகமானவற்றைத் தவிர்ப்பீர்

عن أبي محمد الحسن بن علي بن أبي طالب سبط رَسُوْل اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَرَيْحَانَتِهِ رضي الله تعالى عنهما قال: حَفِظْتُ مِنْ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ دَعْ مَا يَرِيْبُكَ إِلَى مَا يَرِيْبُكَ. رواه الترمذي والنسائي وقال الترمذي حديث حسن صحيح.

"உனக்குச் சந்தேகமில்லாததைச் செய்வதற்காக உனக்குச் சந்தேகமாக இருப்பதை விட்டு விடு" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிலிருந்து நான் பாடமிட்டுக் கொண்டேன்.

அறிவிப்பவர்:- அல்இமாம் அல்ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள். நூல்கள்:- திர்மிதீ, நஸயீ.

எந்தக் காரியத்தை எவர் செய்தாலும் உறுதியான ஒரு தீர்மானத்தின் பேரில் தான் செய்ய வேண்டும். அவ்வாறான உறுதியில்லாவிட்டால் அக்காரியம் உருப்படாது. மனிதனுக்கு தேவையான காரியங்களும் பல. தேவையற்ற காரியங்களும் பல. தேவையான காரியத்தைச் செய்யத் துணிந்தால், அதனைப் பூர்த்தி செய்யாமல் அரைகுறையாக அதனை நிறுத்தவோ கைவிடவோ மாட்டார். அதனை நிறைவேற்றுகையில் ஏற்படுகிற தடைகள் எதிர்ப்புகள் சங்கடங்கள் போன்ற யாவற்றையும் சகித்துக் கொண்டு அதனைப் பூர்த்தி செய்வார். தேவையற்றதைச்

செய்தால் இடையில் வரும் எதிர்ப்புகளையும் தொல்லைகளையும் கருதி அதனை முற்றுப் பெறச் செய்யாமல் அரைகுறையாக நிறுத்தி வைத்து பிரிதொரு சமயத்தில் அதனை மீண்டும் செய்வார் அல்லது அதனைச் செய்யாமல் நிரந்தரமாகவே கைவிட்டு விடுவார். இவ்விரண்டுமே மனிதனுக்கு நஷ்டம் தான். ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினால் உடல் உழைப்பு. பணச் செலவு ஆகிய இரண்டும் ஏற்படும். அது முற்றுப் பெற்று விட்டால் இவ்விரண்டையும் பற்றி மனிதன் கவலைப்படாமல் மகிழ்ச்சியடைவதுடன் வேறு புதிய காரியத்தைச் செய்யவும் துணிவான். அதனை அரை குறையாக நிறுத்தினால் அது வரையில் செலவிட்ட பணம் வீணாகும். உடலுழைப்பும் வீணாகி விடும். அதனுடன் அவனுடைய அருமையான ஜீவிய காலத்தின் ஒரு பகுதியும் வீணாகி விடும். எனவே, எண்ணத்துணி கருமம் துணிந்த பின் எண்ணுவதென்பது இழுக்கு என்றபடி நன்கு சிந்தித்து, சந்தேகங்களை அகற்றி உறுதியான முடிவு செய்த பிறகு செயலாற்ற வேண்டும் என்பது இந்த ஹதீஸின் கருத்து. உலகக் காரியங்களுக்கு மட்டும் இது பொருந்தும் என்றில்லை. சன்மார்க்கக் காரியத்திற்கும் இது பொருந்தும். இதனால் தான் தொழுகையில் ஒருவருக்கு எத்தனை ரக்அத்து தொழுதோம் என்று குழப்பம் ஏற்பட்டால், எத்தனை ரக்அத்து தொழுதோம் என்பதில் இரண்டு ரக்அத்தை ஊர்ஜிதம் செய்து எஞ்சியுள்ள ரக்அத்துகளை பூர்த்தி செய்யுமாறு இமாம்கள் சட்டமியற்றியுள்ளார்கள். உறுதியாக உள்ளது சந்தேகத்தால் நீங்காது என்பது பொது விதி. உதாரணமாக ஒருவர் உளூச் செய்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு தொழச் சென்றார். தக்பீர் கட்ட ஆரம்பிக்கும் போது. உளூச் செய்தோமா? அல்லவா? என்று சந்தேகமுண்டாகி விட்டது. அல்லது உளூச் செய்த பிறகு உள்ள அந்த

இடைக்காலத்தில் உளூ முறிந்து விட்டதோ? என்ற சந்தேகம் வந்தால், இந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்யாமல் விட்டு விட்டு முன்னர் உளூச் செய்ததை ஊர்ஜிதம் செய்து தொழ வேண்டியது தான். மீண்டும் உளூச் செய்ய வேண்டும் என்ற அவசியம் சட்டப்படி இல்லை. ஆனால், உளூவுக்கு மேல் உளூ செய்தால் நல்லது என்ற எண்ணத்தின் பேரில் மீண்டும் ஒரு முறை உளூச் செய்வது குற்றமல்ல என்று சட்ட அறிஞர்கள் கூறியுள்ளார்கள். எந்தக் காரியத்திலும் வஸ்வாஸ் என்னும் குழப்பம் சந்தேகம் வராமல் நம்மனைவரையும் காப்பானாக. ஆமீன்.

12. தேவையற்றதைத் தவிர்ப்பீர்

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: مِنْ حُسْنِ إِسْلَامِ الْمَرْءِ تَرْكُهُ مَا لَا يَعْنِيْهِ. رواه الترمذي.

"மனிதன் தனக்குத் தேவையில்லாததை விட்டு விடுதல் அவனுடைய அழகிய இஸ்லாமைச் சேர்ந்தது" என்று ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- திர்மிதீ

இவ்வுலகில் மனிதன் நோய்நொடியின்றி, தரித்திரமின்றி வாழ்வதும், மறு உலகில் முக்தி பெறுவதற்கான கிரியைகளைச் செய்து கொள்வதும்தான் மனிதனுக்கு அத்தியாவசிய மானவைகள். மற்றைய யாவும் தேவையற்றவைகளே. தனக்குத் தேவையானதை மட்டும் கவனித்துக் கொள்பவருக்கு இவ்வுலகில் நிம்மதியான வாழ்வும் மறு உலக முக்தியும் கிடைத்து விடும். இதற்குமேல் அதிகமாகப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்வது தான் மனிதனுக்குத் தொல்லைகளையும் துயரங்களையும் உண்டு பண்ணுகின்றன. இஸ்லாம் என்ற வார்த்தைக்கு சாந்தி சமாதானம் என்பனத மட்டும் பொருள்களில்லை. பிறரை சமாதானமாக வாழ விடுவதற்கும் பிறருக்கு சாந்தியளிப்பதற்கும் இவ்வார்த்தை பொருந்தும்.

இவ்வுலகில் தோன்றுகிற துன்பங்களில் பெரும்பாலான வற்றிற்கு தனக்கு தேவையில்லாதவற்றில் தலையிடுவதே முக்கிய காரணமாகும். இது மனிதனின் தனி வாழ்வு, குடும்பவாழ்வு, சமூக வாழ்வு, தேசிய வாழ்வு, அரசியல் வாழ்வு ஆகிய யாவற்றுக்கும் பொருந்தும். இஸ்லாம் என்பது தவ்ஹீது, தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு ஆகியவற்றிற்கு மட்டும் பெயரல்ல. இவ்வைந்தும் இவ்வுலகைப் படைத்த அவ்வல்லோனுக்கு மட்டும் சம்பந்தப்பட்டவை. இவற்றைத் தவிர மனிதன் தன்னுடைய ஸ்தூலத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளும், தன் குடும்பத் திற்குச் செய்ய வேண்டிய கடமைகளும் இதர கடமைகளும் இருக்கின்றன. இவை யாவற்றையும் நன்குணர்ந்து அவற்றை குறைவற நிறைவேற்ற வேண்டும். எனவே, அவசியமானதைச் செய்யாமல் விட்டு விடுவதும், அனாவசியமானதைச் செய்வதும் குற்றமாகும். இரண்டும் அழகிய இஸ்லாமிற்கு புறம்பானவைகளே.

ஆற்றங்கரையில் நீ இருந்தாலும் அனாவசியமாக செலவு செய்யலாகாது என்பது ஹதீஸின் கட்டளை. உளூச் செய்ய வேண்டுமாயின் எவ்வளவு தண்ணீர் தேவைப்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. சிலர் அளவுக்கு அதிகமாகச் செலவு செய்வதைப் பார்த்து நாம் கோபமடைகிறோம். இதுபோல மீலாது விழாக்களை எடுத்துக் கொள்வோம். இவ்விழாக்களை கொண்டாடுவது வரவேற்கத் தக்க காரியம். முஸ்தஹப்பு (விரும்பத்தக்கது). எனவே, இதனை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். எனினும், இவ்விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பவர்கள் சட்ட விரோதமான காரியங்களைச் செய்து விடுகின்றனர். நல்ல மேடைப் பேச்சாளர், அடுக்கு மொழிச் சொல்லழகர் போன்றவர்களை விழாவிற்கு அழைக்கின்றனர். அவர்களுக்கு சன்மார்க்க அறிவு இருப்பதில்லை, சன்மார்க்க பக்தியுமில்லை. மேடையின் மீதேறி தங்கள் பிரசங்க வன்மையைக் காட்டுகின்றனர். இஸ்லாத்துக்கு விரோதமான செய்திகளையும் கூறுகின்றனர்.

இவர் சிறந்த பேச்சாளர், நல்ல செய்திகளைச் சொல்வார் என்ற எண்ணத்தில் ஏராளமானவர்கள் கூடுகின்றனர். இவர் தவறுதலாகப் பிரசங்கம் செய்தாலும் அதனை சரி என்றே சபையினர் நம்புகின்றனர். கூட்டத்திற்கு வந்தவர்களில் படித்தவர் களும் இருப்பர். அவர்கள் இவருடைய பிரசங்கத்தை தவறு என்று உணர்வாராயினும் கூட்டத்தில் வைத்து பிரசங்கத்திற்கு மறுப்புக் கொடுத்தால் இவரை அழைத்த மீலாது விழாக்கமிட்டியினர் கோபப்படுவார்கள். வெளியிலிருந்து வந்த மனிதரை உள்ளூர்வாசி அவமதித்து விட்டார் என்று நினைத்து பேச்சாளருக்கு ஆதரவாகவும், அவருடைய பிரசங்கத்தினுள் இருக்கிற குறையை அறிவித்தவருக்கு எதிர்ப்பாகவும் கிளம்பி விடுவர். இதனால் ஊரில் பிளவுண்டாகி கட்சி பிரதி கட்சிகள் ஆரம்பமாகி விடும். இது பெருந்தீமை என்பதைக் கருதி படித்த அறிஞர்கள் பிரசங்கத்தைப் பற்றி எதுவும் கூறாமல் மௌனியாகி விடுவர்.

படித்தவர்களின் முன்னிலையில் இன்னின்னவிதமாக அவர் பேசினார். அவர்களில் ஒருவர் கூட எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. எனவே, அவர் பேச்சு நம்பத் தகுந்ததே என்று பொதுமக்கள் கருதிக் கொள்வர். ஒருவர் பேசக்கற்றுக் கொள்வது அவரை சன்மார்க்க அறிஞராகவோ, சட்ட அறிஞராகவோ, அரசியல் அறிஞராகவோ, பொருளியல் அறிஞராகவோ ஆக்கி விடாது. இவ்விஷயங்களை அவர் கற்றுக் கொண்டால் தான் இவற்றில் அறிஞராக அவர் இருக்க முடியும். எனவே, பிரசங்கம் செய்யத் தெரிந்த ஒருவர் இஸ்லாத்தை தெரிந்து கொள்ளாமல் நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களின் பெருவாழ்வை உணராமல் மார்க்க விஷயமாகவோ மீலாது பற்றியோ பேசுவது அறிவீனம். எனவே, மீலாது விழாவிற்கு அழைத்தவரும் மீலாது பிரசங்கத்தை நிகழ்த்துபவரும் மறுஉலகில் குற்றவாளிகளாகு வதுடன் இவ்வுலகிலும் ஏராளமானவர்களை வழி தவறச் செய்த குற்றவாளிகளாகின்றனர். அதினும் முஸ்லிம் அல்லாதாரை அழைத்து இஸ்லாமிய பிரசங்கம் செய்யச் செய்வது அறிவீனமாகும்.

மீலாது விழா நடத்துவோர் ஆடம்பரம், விரயம் போன்ற காரியங்களையும் செய்து விடுகின்றனர். பொது மக்களிடம் வசூல் செய்த பணத்தை தேவைக்கு மேல் அதிகமாக ஆடம்பரத்திலும் விரயத்திலும் செலவிட்டால் இவை யாவற்றுக்கும் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும். எனவே, ஷைத்தான் மீலாது என்ற நற்காரியத்தைக் கண்ணில் காட்டி அநேக தவறுகளைச் செய்வித்து விடுகிறான். இந்தத் தவறுகளும் குற்றங்களும் தேவைக்கு மேல் அதிகமாகச் செய்வதால் விளைபவை. எனவே, மெய்யான முஸ்லிம் அனாவசியமான காரியங்கள் எதிலும் சம்பந்தப்பட மாட்டான். அவனும் செய்யான். செய்வோருக்கு உடந்தையாக இருக்கவுமாட்டான்.

மனிதன் தேவையில்லாத காரியங்களில் அனாவசிய மான காரியங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி விடுவானாயின் பெருங் கெடுதியையும் தீங்கையும் விட்டுத் தப்பித்துக் கொள்வான். மனிதன் பேசுகிற பேச்சுகள் கூட அவனுடைய செய்கைகளைச் சேர்ந்தவை தான். அவற்றிற்கும் இறுதி நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்வானாயின் அவனுடைய பேச்சுகள் தானாக குறைந்து விடும். இந்த ஹதீஸ் வீண் பேச்சை

மட்டும் தேவையற்ற பேச்சை மட்டும் குறிப்பிடவில்லை. தேவை யற்ற வீணான காரியங்கள் யாவற்றையும் குறிப்பிடுகிறது. தன் தேவைக்கு மேல் அதிகமாக செல்வத்தை திரட்டுதல், பட்டம் பதவிகளுக்கு ஆசைப்படல், தன்னை பிறர் புகழ வேண்டும், பாராட்ட வேண்டும் என விரும்புதல் போன்ற யாவும் மனிதனுக்கு தேவை இல்லாதவைகள்.

தாங்கள் இவ்வளவு சிறப்பை அடைந்ததற்கு காரணம் என்னவென்று ஹளரத் லுக்மானுல் ஹக்கீம் அவர்களிடம் கேட்கப்பட்டது. சொல் சுத்தம், நாணயம், தேவையில்லாதவற்றில் செல்லாமை ஆகிய இம்மூன்றுந்தான் என்று பதிலளித்தார்கள். உண்மையை உரைத்தும், பிறருடைய அமானிதத்தைக் காத்ததும் அநாவசியமான காரியங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்ததும் தம்முடைய உயர்வுக்குக் காரணம் என்று ஹளரத் லுக்மானுல் ஹக்கீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியது யாவரும் கவனிக்கத் தக்க காரியங்களாகும். ஒருவரை அல்லாஹ் ஒதுக்கி வைத்திருக்கிறான் என்பதற்கு அடையாளம் அவர் தமக்கு தேவையில்லாததும் சம்பந்தமில்லாததுமான காரியத்தில் தலையிடுவதாகும். தனக்கு நன்மை பயக்கும் காரியங்களையே மனிதன் செய்ய வேண்டும்.

திருக்குர்ஆனை ஓதுதல், இஸ்திஃபார் செய்தல், திக்ரு செய்தல், ஸலவாத்து ஓதுதல் போன்றவைகள் மனிதனுக்குப் பயனுள்ளவை. மனிதனின் ஜீவிய காலம் மிக அருமையானது கிடைத்ததற் கரியது. அதனை தனக்கு பயனுள்ள காரியங்களில் கழிக்க வேண்டும். வீணான காரியங்களில் கவனத்தை திருப்பி விட்டு வயதை வீணாக்குவதே ஷைத்தானுக்கு சந்தோஷமானது. அதினும் அல்லாஹ்வுக்கு கோபத்தை உண்டாக்குவதும் பிறருக்கு

வருத்தமளிப்பதும் ஆகிய வார்த்தைகளைப் பேசுவது ஷைத்தானுக்கு சந்தோஷ மூட்டுவதும் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதுமாகும்.

وفي حديث ابن عمر رضي الله تعالى عنهما لاَ تُكْثِرُوْا الكَلاَمَ بِغَيْرِ ذِكْرِ اللهِ فَتَقْسُوْا قُلُوْبُكُمْ وَ إِنَّ اَبْعَدَ القُلُوْبِ مِنَ اللهِ القَلْبُ القَاسِيْ.

رواه الترمذي

அல்லாஹ்வுடைய திக்ரைத் தவிர்த்து (வேறு) பேச்சுக்களை அதிகமாக்காதீர்கள். உங்களுடைய இதயங்களை கெட்டியாக்கி விடும். அல்லாஹ்வை விட்டு தூர விலகி இருப்பது வன்னெஞ்ச முள்ளவர்தான் என்று இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்:- திர்மிதீ.

எனவே, அதிகமாகப் பேசுவது அகம் புறம் ஆகிய இரண்டிலுமே மனிதனுக்கு பெருந்தீங்கை உண்டுபண்ணும். மனிதனுக்குக் கிடைத்த இந்த வாழ்வை தேவையற்ற காரியங்களிலும் வீணானவற்றிலும் விளையாட்டிலும் கழிக்காமல் மறு உலக வாழ்விற்கு தேவையான காரியங்களில் கவனம் செலுத்தி மறுமை வாழ்வை மலரச் செய்ய அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா நம் அனைவருக்கும் நல்லுதவியை நல்குவானாக - ஆமீன்.

13. முழுமையான ஈமான்

عن أبي حمزة أنس بن مالك رضي الله تعالى عنه خادم رسول الله عن النبي صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لاَيُؤْمِنُ اَحَدُكُمْ حَتّٰى يُحِبَّ لأَخِيْهِ مَا يُحِبُّ لِنَفْسِهِ. رواه البخاري ومسلم.

"தனக்குப் பிரியப்படுவதை தன் சகோதரனுக்கும் பிரியப்படாத வரையில் உங்களில் ஒருவரும் (முழுமையாக) விசுவாசம் கொள்ள மாட்டார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

தனக்குப் பிரியப்பட்டதை தன் சகோதரனுக்கும் என்ற வாக்கியத்திலுள்ள சகோதரன் என்ற வார்த்தை விசாலமான கருத்துள்ளது. ஒரே தந்தைக்கும் தாய்க்கும் பிறந்தவர்களும் சகோதரர்கள் தாம். ஒரே தந்தையும் பல தாய்மார்களுக்கும் பிறந்தவர்களும் சகோதரர்கள் தாம். இதுபோல ஒரே தாய்க்கும் பல தந்தைகளுக்கும் பிறந்தவர்களும் சகோதரர்கள் தாம். இவர்கள் யாவரும் உதிர உறவுள்ள சகோதரர்கள்.

ஒரே ஊரில் பிறந்தவர்களுக்கும் ஒரே நாட்டில் பிறந்தவர்களுக்கும் சகோதரர்கள் என்பர். இது தேச உறவைக் குறிக்கிறது. ஒரே மொழியைப் பேசுவோரையும் சகோதரர் என்பர். இது மொழி உறவைக் காட்டும். இது போல ஒரே

அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களை ஒருவருக் கொருவர் சகோதரர் என்பர். இது அரசியல் உறவு. இவ்விதமாக வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் போன்றவர்களும் தங்களை சகோதரர்கள் என்று கூறிக் கொள்வர். இது தொழில் உறவு.

ஒரே மதத்தைப் பின்பற்றுவோரும் தங்களை சகோதரர்கள் என்பர். இவர்களுடைய நாடு, மொழி பலவாறாக இருந்த போதினும் அவைகள் மத சகோதரத்துவத்திற்கு விரோதமானவைகளல்ல. இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள சகோதரன் என்ற வார்த்தை இங்கு கூறப்பட்டுள்ள பலவிதமான சகோதரர்களையும் கட்டுப்படுத்துவதுடன் மனித இனத்தைச் சேர்ந்த யாவரையுமே குறிக்கிறது. எனவே, சகோதரன் என்ற வார்த்தைக்கு இந்த ஹதீஸில் விரிவான பரந்த கருத்தை பெரியோர்கள் குறிப்பிடு கின்றனர். மூமினானவர் மறு உலகப் பேற்றை அடைய விரும்புகிறார். முஸ்லிம் அல்லாதாரும் தம்மைப் போல் நல்ல விசுவாசியாகி ஸாலிஹான நற்செயல் களைப் புரிந்து மறு உலகப் பேற்றை அவர்கள் அடைய வேண்டும் என்றே விரும்பவேண்டும். இந்த உணர்வைக் குறித்து தமிழ் நாட்டுப் பெரியார் ஒருவர் யான் கண்ட இன்பம் பெறுக இவ்வையகம் என்று கூறிப் போந்தார். எனவே, முஸ்லிம் அல்லாதார் நேர்வழி பெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பது முஸ்தஹப்பு என்பதாக இஸ்லாமிய நூல்கள் கூறுகின்றன.

சங்கைவான்களான ஸஹாபீகளிடம் இந்த உணர்வு சிறந்த முறையில் இருந்தது. ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் கிலாஃபத் ஆட்சியின் போது தான் எகிப்து நாடு முஸ்லிம்களின் ஆட்சிக்கு உட்பட்டது. அந்த நாட்டை ஆட்சி புரிந்த மக்கூக்கிஸ் என்ற அரசர் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் காலத்தில் இருவருக்கும் இஸ்லாமிய அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வழைப்பை அவர் ஏற்று, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பதில் கடிதமும் எழுதினார். பல அன்பளிப்புகளையும் அனுப்பினார். எனினும், அவர் உரோம ஏகாதிபத்தியத்திற்கு கட்டுப்பட்டு, கப்பம் கட்டும் மன்னராக இருந்தார். பின்னர் முஸ்லிம்களுக்கும் உரோம சக்கிரவர்த்திக்கு மிடையில் போர் மூண்டதைத் தொடர்ந்து ஹளரத் உமர் பாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் எகிப்து மீதும் முஸ்லிம்கள் படையெடுத்து அந்த நாட்டைக் கைப்பற்றினர். போர் முடிந்து முஸ்லிம்களிடம் கைதிகளாக இருந்த எகிப்திய ராணுவ வீரர்கள் விடுதலை செய்யப்பட்ட போது முஸ்லிம் வீரர்கள் வரிசையாக நின்று கொண்டு அவர்களுக்கு சன்மார்க்க உபதேசம் செய்தனர். அச்சமயத்தில் இஸ்லாத்தை ஒருவர் தழுவினால் முஸ்லிம் வீரர்கள் தக்பீர் முழங்கி வரவேற்று மகிழ்ந்தனர். இஸ்லாத்தைத் தழுவாமல் தங்களுடைய பூர்வ மதத்திலேயே ஸ்திரமாக இருப்பதாக ஒருவர் கூறினால் அதற்காக அவரைக் கண்டிக்கவோ வற்புறுத்தவோ செய்யாமல் முஸ்லிம் வீரர்கள் கண்ணீர் வடித்தழுதனர் என்ற விவரம் எகிப்து படையெடுப்பு பற்றிய சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, ஸஹாபிகள் காட்டிய இம்முன் உதாரணம் இந்த ஹதீஸில் கண்ட மனித சகோதரத்துவத்துக்கு சிறந்த முன்னுதாரணமாக இருக்கிறது. தாங்கள் ஈமான் கொண்டது போல மற்றவர்களும் தாங்களாக ஈமான் கொள்ள வேண்டும் என்றுதான் ஸஹாபிகள் விரும்பினார்கள். யாரையும் நிர்ப்பந்தித்து இஸ்லாமைத் தழுவ செய்ய முயலவில்லை.

ஸஹாபிகள் தங்களுக்குள் எவ்வளவு தியாக உணர்வுடன் பழகினர் என்பதற்கு இங்கு இரு சம்பவங்களை மட்டும் உதாரணத்திற்காக கூறுவோம்.

திரு மதீனாவில் ஒரு ஏழை ஸஹாபிக்கு வேக வைக்கப்பட்ட ஆட்டுத்தலை ஒன்றை வேறு ஒரு ஸஹாபி அன்பளிப்பாக அனுப்பினார். அவரிடம் அது கொடுக்கப்பட்ட போது தம்மைப் பார்க்கினும் அதிக வறுமையிலுள்ள வேறு ஒரு ஸஹாபீயை காண்பித்து அவருக்குக் கொடுக்குமாறு கூறினார். அவரிடத்தில் அதனைக் கொண்டு போன போது அவர் வேறு ஒருவரைக் காட்டி, என்னிலும் அவர்தான் அதிக தேவையுள்ளவர். அவருக்குக் கொடுங்கள் என்று கூறப்பட்டது. இப்படியாக ஏழு வீட்டிற்கு அந்த ஆட்டுத் தலை கொண்டு செல்லப்பட்டு இறுதியாக முதலாவது வீட்டிற்கே அது மீண்டும் கொண்டு வரப்பட்டது என்று ஹதீஸ் ஷரீபில் வந்திருக்கிறது.

ஹிஜ்ரீ 4-ம் வருடத்தில் நிகழ்ந்த பனூ குறைளா என்ற யூத வம்சத்தாருடன் நிகழ்ந்த போரில் யூதர்கள் தோல்வி யடைந்தனர். முஸ்லிம்கள் வெற்றியடைந்தனர். இஸ்லாமியச் சட்டப்படி பகைவரிடமிருந்து கிடைத்த போர் பரிசில் ஐந்தில் ஒருபாகம் இஸ்லாமிய அரசாங்கத்திற்குச் சேர வேண்டும். இவர்கள் யாவரும் முஹாஜிர்களும் அன்ஸார்களும் ஆவர். முஹாஜிர்கள் திருமதீனாவில் அகதிகளாக வந்து குடியேறியவர்கள். அவர்களிடம் பொருள் இல்லை; அன்ஸார்களின் ஆதரவிலேயே திருமதீனாவில் வாழ்ந்தார்கள். எனவே, பூர்வ குடிகளாகிய அன்ஸார்கள் தங்கள் அகதி சகோதரர்களின் பால் அனுதாபம் கொண்டு தங்களுக்குச் சேரவேண்டிய போர்ப் பரிசுச் சொத்துக்கள் யாவற்றையும் தியாகம் செய்து தங்கள் அகதிச் சகோதரர்களான முஹாஜிர்களுக்கு

விட்டுக் கொடுத்து விட்டனர். இது கொஞ்சம் நஞ்சமல்ல. சட்டப்படி பங்கு வைத்தால் பனூ குறைளாவின் மொத்த சொத்தை எட்டுப் பங்கு வைத்தால் ஒரு பங்கு நீங்கலாக மீதி ஏழு பங்கு அன்ஸார்களுக்குச் சேரும். இந்த தியாகத்தை எவருடைய தூண்டுதலின் பேரிலோ, முஹாஜிர்களின் வேண்டுகோளின் பேரிலோ இல்லாமல் தாங்களாகவே மனமுவந்து செய்து மகிழ்ந்தனர்.

இது மட்டுமல்ல, ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கலீஃபாவாக இருந்த காலத்தில் நிகழ்ந்த ஷாம் யுத்தத்தில் இறுதிப் பெரும் போர் யர்மூக் என்ற இடத்தில் நிகழ்ந்தது. ஹிர்க்கல் சக்கிரவர்த்தியின் பல லட்சம் போர் வீரர்கள் நன்கு பயிற்சி பெற்று பூரண ஆயுதபாணிகளாக வந்து வீர தீரமாகப் போரிட்டனர். முஸ்லிம்களிலுள்ள மொத்த வீரர்களின் எண்ணிக்கை முப்பத்தையாயிரம் தான். இவர்கள் யாவருக்கும் போதுமான அளவு ஆயுதங்களும் இல்லை. பயிற்சியும் அவ்வளவாக இல்லை. இஸ்லாம் உலகில் இருப்பதா? மடிவதா என்பது போரின் முடிவைப் பொருத்ததாக இருந்தது. அப்போரில் முஸ்லிம்கள் தோற்றால் ரோமப்படை அரப் நாட்டுக்குள் பிரவேசித்து விடும். முஸ்லிம்கள் வென்றால் ஷாம் தேசம் முழுவதும் வீழ்ச்சியடைந்து விடும். எனவே, முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் இதனைத் தங்கள் இறுதிப் போராக கணித்திருந்தனர். நான்கு நாட்கள் தொடர்ந்து போர் நடந்தது. உரோமப் படையில் மொத்த உயிர்ச்சேதம் இலட்சக் கணக்கில் இருந்தது. முஸ்லிம்களின் உயிர்ச் சேதம் ஆயிரக் கணக்கில் இருந்தது. போரில் முஸ்லிம்கள் வீர வாகை சூடினர். உரோமர்கள் பெருத்த நஷ்டத்துடன் சிதறி ஓடினர். இப்போரின் முடிவு ஷாம்

தேசத்தை முஸ்லிம்களிடம் விட்டு விட்டு உரோமர்கள் அந்த நாட்டை விட்டு வெளியேறுவதாக இருந்தது. அன்றிலிருந்து இன்று வரை அந்த நாடு முஸ்லிம்களின் வசத்தில் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் வாழும் நாடாக அது இன்றும் இருந்து வருகிறது.

இப்போர் பகலில் நடைபெறும் இரவில் இரு கட்சியினரும் போரை நிறுத்தி விட்டு காயமடைந்தவர்களை அப்புறப்படுத்தி சிக்சைக்கு அனுப்புவர். மரித்தவர்களை நல்லடக்கம் செய்வர். ஒரு நாள் நடந்த போர் மாலையில் முடிவடைந்து. அவரவர் கட்சியில் காயமடைந்தவர்களை சிகிச்சைக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். காயமடைந்த முஸ்லிம் வீரர் ஒருவர் தண்ணீர் என்று குரல் கொடுத்தார். சப்தம் வந்த இடத்தை நோக்கி தண்ணீர் கொண்டு போகப்பட்டது. அப்பொழுது அவர் அருகில் சற்று தூரத்தில் வேறு முஸ்லிம் வீரர் தண்ணீர் என்று குரல் கொடுத்தார். இச்சப்தத்தைக் கேட்டவுடன் தண்ணீர் கேட்ட முதல் வீரர் தண்ணீரை இரண்டாவது குரல் கொடுத்தவருக்கு கொடுக்குமாறு கூறினார். இரண்டாவது குரல் வந்த இடம் சென்ற போது அதற்குப் பக்கத்திலிருந்து தண்ணீர் என்று மூன்றாவது குரல் வந்தது. இரண்டாவது குரல் கொடுத்தவர் மூன்றாவது நபருக்கு தண்ணீர் கொடுத்து விட்டுத் தம்மிடம் வரச் சொன்னார். மூன்றாவதாக குரல் வந்த இடம் சென்ற போது அவருக்குப் பக்கத்தில் சற்று தூரத்திலிருந்து தண்ணீர் என்று நான்காவது குரல் கேட்டது. மூன்றாவது குரல் கொடுத்தவர் நான்காமவருக்கு முதலாவதாக தண்ணீர் கொடுத்து விட்டு தமக்கு தண்ணீர் கொடுக்குமாறு கூறினார். நான்காமவரிடம் சென்ற போது அவர் இறந்து விட்டார். அவரைப் பார்த்து விட்டு மூன்றாமவரிடம் வந்தபோது அவரும் இறந்து விட்டார். அவரைப் பார்த்து விட்டு இரண்டாமவரிடம் வந்த போது

அவரும் மரித்து விட்டார். என்னே ஸஹாபிகளின் சகோதர வாஞ்சை. மரணத் தருவாயில் கூட தம்மைப் பார்க்கினும் தம் சகோதர முஸ்லிமுக்கு முதல் சலுகை கொடுத்து. திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களின் உபதேசத்தை மெய்ப்பித்தனர். அவர்களின் மெய்யான தியாகத்தால் இஸ்லாம் வளர்ந்தோங்கி அக்காலத்தில் பரவிற்று. இக்காலத்தில் முஸ்லிம்களில் பெரும்பாலரிடம் இத்தியாக உணர்ச்சி நூற்றுக்கு ஒரு பங்காவது இருக்குமா என்பது சந்தேகம் தான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு விருந்தாளி வந்தார். அவருக்கு உணவளிப்பதற்காக உம்மஹாத்துல் முஃமினீன்களுக்கு தகவல் சொன்னார்கள். குளிர்ந்த நீரைத் தவிர்த்து தங்களிடம் உணவில்லை என்று உம்மஹாத்துல் முஃமினீன்கள் அறிவித்தார்கள். எனவே, என்னுடைய விருந்தாளிக்கு உணவளிப்பவர் உங்களில் எவரேனும் உண்டா? என்று ஸஹாபிகளிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள். நான் யாரஸூலல்லாஹ் என்று ஒரு ஸஹாபீ கூறினார். நல்லது. அவரை அழைத்துச் சென்று உணவளியும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அவர் விருந்தாளியை அழைத்து வீட்டுக்குச் சென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விருந்தாளிக்கு உணவளித்து அவரை கௌரவப்படுத்த வேண்டும் என்று மனைவியிடம் கூறினார். அதற்கவ்வம்மை குழந்தைகளுக்குரிய உணவு மட்டும் தான் நம்மிடம் இருக்கிறது என்று கூறினார். நல்லது. குழந்தைகளைத் தூங்க வைத்து விட்டு அவர்களுடைய உணவை கொண்டு வந்து வை. விளக்கைத் தூண்டுவது போல் நடித்து விளக்கை அணைத்து விடு. அவருடன் சேர்ந்து உணவருந்தவது

போல நாம் நடித்து அந்த உணவை அவர் உண்ணுமாறு செய்து விடுவோம் என்று தம் மனைவியிடம் கூறி அவ்வம்மையும் அதற்கு சம்மதித்து கணவர் யுக்திப்படி நடந்து விருந்தாளிக்கு நன்கு உணவளித்து விட்டு, குழந்தைகளும் தம்பதிகளும் பட்டினியாக அவ்விரவைக் கழித்தனர். இது அல்லாஹ்விற்கு மிகவும் திருப்தியளித்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களுக்கு அவன் அறிவித்தான்.

ஹளரத் இப்ராஹீம் இப்னு அத்ஹமும் ஷக்கீக்குல் பலகீயும் ரஹ்மத்துல்லாஹி அலைஹிமா ஒரு முறை சந்தித்தனர். அப்பொழுது இப்ராஹீமுப்னு அத்ஹமை நோக்கி "உண்பதற்கு ஒன்றும் கிடைக்காவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்" என்று ஷக்கீக்குல் பலகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி வினவினார். அதற்கவர் ஏதாவது கிடைத்தால் நன்றி செலுத்துவோம் எதுவும் கிடைக்கா விடில் பொறுமையாக இருப்போம் என்று பதிலளித்தார். அதற்கு ஷக்கீக்கல் பலகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி எங்கள் ஊரிலுள்ள நாய்களெல்லாம் இப்படித்தான் செய்கின்றன என்று கூறினார். உடனே, இப்ராஹீமுப்னு அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி நீங்கள் என்ன செய்வீர்கள் என்று வினவினார். அதற்கவர் "எங்களுக்கு ஏதாவது கிடைத்தால் அதனை தியாகம் செய்வோம். ஏதும் கிடைக்காவிடில் நன்றி செலுத்துவோம்" என்றுரைத்தார். இதனைச் செவியுற்ற இப்ராஹீமுப்னு அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி எழுந்து அவருடைய உச்சியில் முத்தமிட்டு நீங்கள் தான் எனது குரு என்று கூறினார்.

ஹளரத் அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் நோய் வாய்ப்பட்டு குணமடைந்தார்கள். மீன் சாப்பிடவேண்டுமென விரும்பினார்கள்.

மீன் உணவு தயாரிக்கப்பட்டு அவர்கள் முன்னால் வைக்கப்பட்டது. அதனை அவர்கள் அருந்துவதற்குள் ஒரு பசியாளி வந்து உணவு கேட்டார். இந்த மீனை அவருக்குக் கொடுத்து விடுமாறு தம்முடைய பணியாளரிடம் கூறினார்கள். தாங்கள் பிரியப் பட்டீர்கள். அதனை அருந்தவில்லையே என்று அப்பணியாளர் வினவினார். நீங்கள் பிரியப்பட்டதை செலவு செய்யாத வரையில் நீங்கள் நன்றியை அடையவே மாட்டீர்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான் என்று பதிலளித்தார்கள்.

ஸஹாபிகளும் முற்காலத்து பெரியார்களும் திருக்குர்ஆன் ஹதீஸ்களைப் பயின்று அவற்றின் உபதேசங் களை பிறருக்குக் கூறியது மட்டுமின்றி தாங்களும் சொல்லுக் கிணங்க செயலிலும் காட்டி முன்னேற்றமடைந்து இம்மை மறுமைப் பேறுகளைப் பெற்றனர். இக்காலத்தில் உள்ளவர்கள் அப்படி இருக்கிறார்களா? என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. எல்லா வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்வழிகாட்டி திருக்குர்ஆன் ஹதீஸ்களின் உபதேசங்களை சொல்லளவில் மட்டுமின்றி செயலிலும் கடைப்பிடிக்க நல்லுதவி செய்வானாக. ஆமீன்.

14. கொலைக் குற்றம் புரியாதீர்

عن ابن مسعود رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلّم: لا يحلّ دمُ امرءٍ مُسلمٍ إلّا بإحدى ثلاثٍ الثّيبُ الزّاني والنّفسُ بالنّفسِ والتّاركُ لدينِهِ المُفارقُ للجماعةِ. رواه البخاري ومسلم.

"திருமணம் செய்த விபச்சாரி, உயிருக்கு பதில் உயிர், தன்னுடைய சன்மார்க்கத்தைத் துறந்து ஜமாஅத்தை விட்டுப் பிரிந்தவர் ஆகிய இம்மூன்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டல்லாமல் முஸ்லிமான மனிதனின் உதிரம் ஹலால் இல்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரி, முஸ்லிம்.

சட்டப்படி தவிர மனிதனைக் கொலை செய்வது குப்ருக்கு அடுத்தபடியாகவுள்ள பெரும்பாவம். அல்லாஹ்விடத்தில் மிகப் பெரும்பாவம் எது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவப்பட்டது. உன்னைப் படைத்த அல்லாஹ்வுக்கு நீ இணை வைப்பதுதான் என்று பதிலளித்தார்கள். பின்னர் அதற்கடுத்தபடியான பெரும் பாவம் எது என்று வினவப்பட்டது. உன்னுடன் உணவருந்தும் என்பதைப் பயந்து உனது பிள்ளையை நீ கொலை செய்தல் என்று பதிலளித்தார்கள். இந்த ஹதீஸை புகாரி முஸ்லிம் ஆகிய இரு பெரியார்களும் அறிவித்துள்ளார்கள். மேலும்

عن أبي هريرة رضي الله تعالى عنه عن النبي صلّى الله عليه وسلّم قال: اجتنبوا السّبعَ المُوبقاتِ. قالوا: يا رسولَ اللهِ وما هنّ؟ قال: الشّركُ باللهِ والسّحرُ وقتلُ النّفسِ الّتي حرّمَ اللهُ إلّا بالحقّ وأكلُ الرّبا وأكلُ مالِ اليتيمِ والتّولّي يومَ الزّحفِ وقذفُ المُحصناتِ المُؤمناتِ الغافلاتِ. رواه البخاري ومسلم.

"ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள். அவை யாவை யா ரஸூலுல்லாஹ் என்று வினவப்பட்டது. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல், அல்லாஹ் ஹராமாக்கிய உயிரை நியாயமின்றி கொலை செய்தல், வட்டியுண்ணல், அநாதையின் பொருளை புசித்தல், போர் புரியும் காலத்தில் புறங்காட்டல், கன்னிப் பெண்களின் மீது அவதூறு கூறல்" என்று பதிலளித்தார்கள்

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رسولُ اللهِ صلّى اللهُ عليهِ وسلّم: من أعانَ على قتلِ مُسلمٍ ولو بشطرِ كلمةٍ لقيَ اللهَ مكتوبًا بينَ عينيهِ آيسٌ من رحمةِ اللهِ. رواه ابن ماجة والبيهقي.

"முஸ்லிமைக் கொலை செய்வதற்கு ஒரு பாதி வார்த்தையைக் கொண்டேனும் உதவி செய்தவர் தன்னுடைய இரு

கண்களுக்கு மிடையில் அல்லாஹ்வின் கிருபையை விட்டு நம்பிக்கை இழந்தவர் என்று எழுதப்பட்ட நிலையில் அல்லாஹ்வை சந்திப்பார்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- இப்னு மாஜா, பைஹக்கி

இவ்வாறன ஹதீசுகள் ஏராளமாக இருக்கின்றன. வேண்டுமென்றே கொலை செய்தவர் (அரசு தண்டனையை விட்டுத் தப்பித்துக் கொண்டாலும்) அவர் தௌபா செய்வாராயின் அவருடைய தௌபா செல்லத்தக்கது தான். ஏனெனில் காபிரானவர் தௌபா செய்தால் அது அங்கீகரிக்கப்படும் என்றிருக் கையில் முஸ்லிமான ஒருவர் தன்னுடைய மூர்க்கத்தனத்தால் வேண்டு மென்றே கொலை செய்து விட்டு பின்னர் பச்சதாபப்பட்டு மனந்திரும்பி தௌபா செய்தால் அது அங்கீகரிக்கப்படாமல் இருக்கக் காரணமில்லை. கொல்லப் பட்டவரின் வாரிசுகள் வழக்கு நடத்தி தண்டித்து விட்டால் அல்லது நஷ்ட ஈடு வாங்கிக் கொண்டோ அல்லது நஷ்டஈடு வாங்காமலோ கொலை செய்தவரை மன்னித்து விட்டால், அவருக்கு மறுமையில் தண்டனை இல்லை. இவ்விதமாக இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹிபத்வா கொடுத்து உள்ளார்கள்.

ஷரீஅத்தின் புறச்சட்டம் இதனைத்தான் அறிவிக்கிறது. முஸ்லிம் என்ற நூலின் விரிவுரையிலும் இதுபோல் கூறப் பட்டுள்ளது. ஒரு மனிதன் வேறு ஒரு மனிதனால் கொல்லப் பட்டாலும், கொலை செய்யப்பட்டவர் தன்னுடைய ஜீவிய கால வாழ்வை பூரணமாக அனுபவித்து விட்டு மரணத்திற்குரிய தவணைப்படி தான் மரித்தார் என்பது ஸுன்னத்துல்வல்ஜமா

அத்தாரின் கொள்கை. முஃதஜிலா என்ற வகுப்பார் இதனை அங்கீகரிக்கவில்லை. மரணத்தின் தவணை பூர்த்தியாவதற்கு முன்னதாகவே கொலை செய்யப்பட்டவர் மரிக்கிறார் என்பது அவர்களின் கொள்கை.

முஸ்லிமான மனிதனை மூன்றில் ஒரு காரணத்திற்காக தவிர கொல்வது ஹலால் இல்லை என்பதிலிருந்து பருவ வயதை அடையாத சிறுவர்களை, காபிரை, நேச உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறவர்கள், முஸ்லிம் நாட்டின் முஸ்லிம் அல்லாத பிரஜையை கொலை செய்யலாம் என்று இந்த ஹதீஸில் விளங்குகிறது என்பதாகக் கொள்ளலாகாது. இந்த ஹதீஸில் கண்ட மூன்று காரணங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்த குற்றத்திற்கு தண்டனையாக தவிர வேறு எக்காரணத்திற்காகவும் எவரையும் கொல்லலாகாது. இஸ்லாமிய நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி தான் இத்தண்டனையை நிறைவேற்ற வேண்டும். தனிநபருக்கு இத்தண்டனையை நிறைவேற்ற உரிமை இல்லை. இவ்விபரங்களை சட்ட நூல்களில் விபரமாகக் காணலாம்.

ஷிர்க் (இணை வைத்தல்) கொலை ஆகியவற்றிற்கு அடுத்த படியாகவுள்ள பெரும் பாவச் செயல் விபச்சாரம் ஆகும். இதனைக் குறித்து தன்னுடைய திருமறையில்.

والذين لا يدعون مع الله إله آخر ولا يقتلون النفس التي حرم الله
إلا بالحق ولا يزنون ومن يفعل ذلك يلق اثاما يضاعف له العذاب
يوم القيامة ويخلد فيه مهانا إلا من تاب.

அல்லாஹ்வுடன் வேறு ஒரு தெய்வத்தைச் சேர்த்து வணங்க மாட்டார்கள். இன்னும் அல்லாஹ் ஹறாமாக்கிய

ஜீவனை (தக்க) காரணமின்றிக் கொல்ல மாட்டார்கள். இன்னும் விபச்சாரம் செய்ய மாட்டார். இதனை எவர் செய்கிறாரோ (பாவக்) குற்றத்தை அவர் சந்திப்பார். இறுதி நாளில் அவருக்கு வேதனை இரட்டிக்கப்படும். இன்னும் அதில் கேவலமான நிலையில் நிரந்தரமாக இருப்பார். (ஆனால்) தௌபா செய்தவரைத் தவிர. (25:68,69,70) என்ற ஆயத்தில் இணை வைத்தல், கொலை ஆகிய இரு குற்றசெய்கைகளுடன் இணைத்து மூன்றாவதாகக் கூறி இவர்கள் அடையும் மறு உலக வேதனையையும் கூறியுள்ளான்.

முஷ்ரிக்குகளில் ஒரு பெரும் கூட்டத்தார் கொலையையும் விபச்சாரத்தையும் அதிகமாகச் செய்தனர். இவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களிடம் வந்து, முஹம்மதே உம்முடைய பிரசாரம் அழகானது தான். இதுகாறும் நாங்கள் செய்து கொண்டிருக்கிற காரியங்களுக்குரிய பரிகாரத்தை எங்களுக்கு விபரிக்கலாமா? என்று வினவினார். அதற்கு பதிலாக இறைவன் மேற்கண்ட ஆயத்தையும்.

قل يا عبادي الذين اسرفوا على انفسهم لا تقنطوا من رحمة الله إن الله يغفر الذنوب جميعا.

"தங்கள் ஜீவன்களுக்கு விரோதமாக செய்த என்னுடைய அடியார்களே அல்லாஹ்வின் கிருபையைக் குறித்து நிராசை கொள்ளாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் குற்றங்கள் அனைத்தையும் மன்னிப்பான்" (39:53) என்ற ஆயத்தையும் அருளினான்.

عن حذيفة عن رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أنه قال: يَا مَعْشَرَ الْمُسْلِمِيْنَ اِتَّقُوْا الزِّنَا فَإِنَّ فِيْهِ سِتُّ خِصَالٍ ثَلَاثٌ فِي الدُّنْيَا وَثَلَاثٌ

فِي الآخِرَةِ أَمَّا الَّتِيْ فِي الدُّنْيَا فَيَذْهَبُ بَبَهَاءِ الْوَجْهِ وَيُوْرِثُ الْفَقْرَ وَيَنْقُصُ الْعُمْرَ وَ أَمَّا الَّتِيْ فِي الآخِرَةِ فَيُوْرِثُ السُّخْطَةَ وَسُوْءَ الْحِسَابِ وَالْخُلُوْدُ فِي النَّارِ. كتاب التدوين فى اخبار قزوين.

"விபச்சாரத்தைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் விபச்சாரத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்". அதில் ஆறு பலன்கள் இருக்கின்றன. அவற்றில் மூன்று இம்மையிலும் மற்றொரு மூன்று மறுமையிலுமாகும்.

இம்மையிலுள்ள மூன்று.

1. முக அழகு மாறி விடும்.

2. தரித்திரம் வரும்.

3. வயது குறையும்.

மறுமையிலுள்ள மூன்று.

1. அல்லாஹ்வின் கோபம்.

2. கடுமையான விசாரணை.

3. நரக வேதனை ஆகியவைகளாகும்.

அறிவிப்பவர்:- ஹளரத் ஹுதைஃபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- கிதாபு தத்வீன் பீ கஜ்வீன்.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்ட இம்மை மறுமைப் பலன்களையன்றி முஸ்லிம் அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையும் உண்டு. விபச்சாரம் செய்வது கிரிமினல் குற்றம். இதனைச் செய்தவர்கள் மீது இஸ்லாமிய அரசு நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அதனை சட்டப்படி நிரூபித்து விட்டால் இக்குற்றச் செய்கையை புரிந்தவர்கள் திருமணம் செய்து உடலின்பம் கொண்டவர்களாக இருந்தால், கல்லாலடித்துக் கொல்லப்பட வேண்டும் என்றும், அவர்கள் திருமணம் செய்து உடலின்பங் கொள்ளாதவர்களாக இருந்தால் நூறு கசையடியும் ஒரு வருடம் பிரஷ்டம் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும். இத்தீர்ப்பை அரசாங்கம் சட்டப்படி நிறைவேற்றும். தனி நபர் எவரும் இத்தீர்ப்பை தன்னுடைய நோக்கப்படி நிறைவேற்றக் கூடாது. இவ்வாறு தனிநபர் நிறைவேற்றினால் அவர் அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு சட்டப்படி தண்டிக்கப்படுவார்.

தன் சொந்தக் குரோதத்தால் வேண்டுமென்றே ஒருவரை மற்றொருவர் கொலை செய்து விட்டால், கொலை செய்தவர் நீதிமன்றத்தால் சட்டப்படி விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார். இதுபோல ஒரு முஸ்லிம், இஸ்லாத்தை விட்டு மாறி வேறு மதத்தில் சேர்ந்தாலும் எந்த மதத்தையும் தழுவாமல் நாத்திகராக இருந்தாலும் இஸ்லாமிய அரசாங்கம் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து நீதிமன்ற விசாரணைக் குட்படுத்தும். நீதிமன்றம் அவர் இஸ்லாமை விட்டு மதம் மாறியவர், முஸ்லிம் ஜமாஅத்தை விட்டுப் பிரிந்து விட்டார் என்று கருதினால் அவர் சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்படுவார். மேற்கண்ட குற்றங்களை எவர் செய்தாலும் அவர் மீது இஸ்லாமிய

அரசாங்கம் நடவடிக்கை எடுத்து நீதிமன்ற விசாரணைக்கனுப்ப வேண்டும். நீதிமன்றம் சட்டப்படி விசாரித்து அவரை குற்றவாளி என்று நிர்ணயித்து மரண தண்டனை விதித்தால் தான் இதனை இஸ்லாமிய அரசாங்கம் நிறைவேற்றலாம்.. அவ்வாறின்றி அரசாங்க அதிகாரிகளோ போலீசாரோ, ஊர் ஜமாஅத்தினரோ அவரை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தாமல் தங்கள் சொந்த அபிப்பிராயப்படி மரண தண்டனைக்குட்படுதத்தினால் அது கொலைக் குற்றமாகக் கருதப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இந்தியா போன்ற நாடுகளில் மத சார்பற்ற அரசுகள் இயங்குகின்றன. இவற்றில் இஸ்லாமிய அரசாங்கங்கள் இல்லை. எனவே, இங்கு வாழும் பிரஜைகள் தங்கள் யுக்திப்படி இஸ்லாமிய சட்டத்தைப் பிரயோகம் செய்வது ஸ்தல அரசாங்கத்தால் குற்றமாகக் கருதப்படும். எனவே, சமூகக்கட்டுப்பாட்டை நிலைநிறுத்த விரும்பும் ஊர் ஜமாஅத்தார் ஸ்தல அரசாங்க சட்டத்திற்கு விரோதமில்லாமல், சட்டத்திற்கு உட்பட்ட நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை மறக்கலாகாது. இக்குற்றங்களை செய்பவர் ஸ்தல நிலைமையின் துணையால் இவ்வுலக அரசாங்கத் தண்டனை யிலிருந்து தப்பி விட்டால், தெய்வீக அரசாங்கத்தின் இயற்கை தண்டனை யிலிருந்து தப்ப முடியாது. இதற்குரிய ஒரே பரிகாரம் தௌபா இஸ்திஃபார் செய்து பாவச் செய்கையிலிருந்து மீளுவதுடன் தங்களுடைய குற்றச் செய்கையால் பாதிக்கப்பட்டவரை திருப்தி செய்து கொள்வதுதான். நஷ்டஈடு கொடுத்தோ வேறு விதமாகவோ பாதிக்கப்பட்டவர்களை திருப்தி செய்வது மிக மிக அவசியமாகும். எல்லாம் வல்ல அல்லாஹு ஜல்ல ஷானுஹு வதஆலா இத்தகைய குற்றங்களில் எதையும் செய்யாமல் வாழ நாம் யாவருக்கும் நல்லுதவி செய்து வழிகாட்டுவானாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

15. இஸ்லாமின் ஒழுக்கங்கள்

عن أبي هريرة رضي الله تعالى عنه أن رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَنْ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ. وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيُكْرِمْ جَارَهُ وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيُكْرِمْ ضَيْفَهُ. رواه البخاري مسلم.

"அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசம் கொண்டிருப்பவர் நல்லதைச் சொல்ல வேண்டும் அல்லது பேசாமல் இருக்க வேண்டும். அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசம் கொண்டிருப்பவர் தன்னுடைய பக்கத்து வீட்டாரை கௌரவிக்க வேண்டும். அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசம் கொண்டிருப்பவர் தம்முடைய விருந்தாளியை கௌரவிக்க வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

இரவும் பகலும் சேர்ந்ததற்குத் தான் அரபி மொழியில் யௌமுன் என்று பெயர். சூரிய வருடத்தைக் கணிப்பவர்கள் பகலுக்குக் பிறகு வருகிற இரவைச் சேர்த்து நாள் என்று கூறுவர். சந்திர வருடத்தைக் கணிப்பவர்கள் இரவுக்குப் பிறகு வருகிற பகலைச் சேர்த்து நாள் என்று கணிப்பர். அதாவது சூரிய அஸ்தமனத்துடன் அந்த நாள் பூர்த்தியாகி விடும். சூரிய வருடக் கணக்கினர் சூரிய உதயத்துடன் நாள் ஆரம்பமாகி மறு சூரிய

உதயத்துடன் நாள் பூர்த்தியாகுவதைக் குறிக்கின்றனர். முஸ்லிம்கள் இஸ்லாமிய வருடம் சந்திரக் கணக்கைச் சேர்ந்தது. எனவே, அல்யௌமுல் ஆகிர் என்பது கடைசி நாளைக் குறிக்கிறது. அதாவது கடைசிப் பகலைக் குறிக்கிறது. இந்தப் பகலுக்குப் பிறகு இரவு வராது. கியாமத்து நாள் என்பது எத்தனை போடி உலக வருடமானாலும் அது ஒரே ஒரு பகல்தான். எனவே, தான் மறு உலகில் மக்கள் யாவரும் உயிர்த்தெழுப்பப்பட்டு விசாரிக்கப்பட்டு சுவர்க்கம் அல்லது நரகிற்கு அனுப்பப்பட்டு அவர்கள் இன்பம் துன்பம் அடைகிற நீண்ட காலத்தை அல் அய்யாமு (நாட்கள்) என்று பன்மையாக இல்லாமல் அல்யௌமு (நாள்) என்று ஒருமையாகக் கூறப்படுகிறது.

விசுவாசம் கொண்டிருப்பவர் என்பது பரிபூரணமாக ஈமான் கொள்வதைத் தான் குறிக்கிறது. முஸ்லிம்களில் சிலர் தங்கள் அயலகத்தாருக்கு கண்ணியம் கொடுக்காவிடில் அல்லது விருந்தினரை நல்லவிதமாக உபசரிக்காவிடில் அல்லது நல்ல பேச்சுக்களை பேசாவிடில் அவர்களை விசுவாசம் கொண்டவரல்ல என்று இந்த ஹதீஸை ஆதாரமாக வைத்து தீர்ப்பளிக்கலாகாது. விசுவாசம் கொண்ட முஸ்லிம் இஸ்லாமியப் பண்பாட்டை பூரணமாக நிறைவேற்றத் தவறி விட்டனர் என்று தான் சொல்ல வேண்டும்.

நல்லதைச் சொல்ல வேண்டும் என்பது தனக்கோ பிறருக்கோ நன்மை பயக்கக் கூடியவற்றையே பேச வேண்டும். யாருக்கும் பயன்படாத பேச்சுக்களையோ தனக்கோ பிறருக்கோ தீமை விளைவிக்கிற பேச்சுக்களையோ பேசலாகாது என்பது கருத்து. பயனுள்ள பேச்சுக்களைப் பேசச் சந்தர்ப்பமில்லை யானால் எதையும் பேசாமல் இருந்து விடுதல் தான் சிறந்தது.

பயனற்றதைப் பேசுவது வீண். தீமையானவற்றைப் பேசுவது பாவம். இவ்விரண்டில் எதையும் செய்யாமல் மௌனமாக இருப்பது சிறந்தது.

இதனைக் குறித்து அல்லாஹ் தனது திருமறையில் وقولوا قولا سديدا நேர்மையான சொல்லைக் கூறுங்கள் என்று கூறியுள்ளான்.

عن معاذ بن جبل رضي الله تعالى عنه قال: قال رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: هَلْ يَكُبُّ النَّاسَ عَلَى وُجُوْهِهِمْ اَوْ عَلَى مَنَاخِرِهِمْ إِلاَّ حَصَائِدُ اَلْسِنَتِهِمْ. رواه الترمذي واحمد

"மனிதர் குப்புற விழுவது அல்லது தலைகீழாக விழுவது அவர்களுடைய நாவுகளின் பலன்களேயன்றி வேறில்லை'' என்று நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் மஆத்இப்னு ஜபல்ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- திர்மிதீ, அஹ்மத்

عن أم حبيبة رضي الله تعالى عنها عن النبي اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: كُلُّ كَلاَمِ اِبْنِ آدَمَ عَلَيْهِ لاَ لَهُ إِلاَّ أَمْرٌ بِمَعْرُوْفٍ اَوْ نَهْيٌ عَنْ مُنْكَرٍ اَوْ ذِكْرُ اللهِ. رواه الترمذي.

"அல்லாஹ்வின் திக்ரை அல்லது நல்லதை ஏவுதல் அல்லது தீயதை விளக்குதல் ஆகியவற்றைத் தவிர ஆதமுடைய மகனின் சகல பேச்சுக்களும் வீண்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அன்னை உம்முஹபீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹா

நூல்:- திர்மிதீ.

இது சம்பந்தமாக ஏராளமான ஹதீஸ்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவை முஸ்லிம் உலகம் முழுதும் பரவி பிரபல்யமாகவும் இருக்கின்றன. நாவினால் ஏற்படும் தீமைகள் எத்தனை என்று எண்ணிப் பார்த்ததில் இருபதுக்கும் அதிகமான தீமைகள் ஹதீஸில் மட்டும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மனிதன் பேச நாடினால் அவன் பேசுவதற்கு முன்னர் அவன் பேச நாடியுள்ள பேச்சின் விளைவு எப்படி இருக்கும் என்பதை நன்கு சிந்திக்க வேண்டும் என இமாம் ஷாபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

عن أبي هريرة رضي الله تعالى عنه عن النبي اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: إِنَّ الْعَبْدَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ مِنْ رِضْوَانِ اللهِ تَعَالَى لاَ يُلْقِي لَهَا بَالاً يَرْفَعُهُ اللهُ بِهَا دَرَجَاتٍ وَإِنَّ الْعَبْدَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ مِنْ سَخَطِ اللهِ لاَ يُلْقِي لَهَا بَالاً يَهْوِيْ بِهَا فِيْ جَهَنَّمَ. رواه البخاري.

"அல்லாஹ்வுக்கு திருப்தியானவற்றிலிருந்து அடியான் ஒரு வாரத்தை பேசி, அதன் பயனை அவன் (இவ்வுலகில்) அடையவில்லையானால் அவனுடைய அந்தஸ்துகளை அவன் உயர்த்துகிறான். அல்லாஹ்விற்கு கோபமானவற்றிலிருந்து அடியான் ஒரு வார்த்தை பேசி, அதன் பயனை (இவ்வுலகில்) அடையவில்லையானால், அதனைக் கொண்டும் நரகில் அவன் தள்ளப்படுவான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரீ.

عن أبي سعيد الخدري رضي الله تعالى عنه رفعه قال: إِذَا أَصْبَحَ ابْنُ آدَمَ فَإِنَّ الأَعْضَاءَ كُلُّهَا تُكَفِّرُ اللِّسَانَ فَتَقُولُ: اِتَّقِ اللهَ فِينَا فَإِنَّمَا نَحْنُ بِكَ فَإِنِ اسْتَقَمْتَ اِسْتَقَمْنَا وَإِنْ اعْوَجَجْتَ اِعْوَجَجْنَا. رواه الترمذي.

"ஆதமுடைய மகன் காலையி(ல் துயி)லெழுந்தால் (அவனுடைய உடலிலுள்ள) அவயவங்கள் நாவை சிந்திக்க வைக்கின்றன. எங்களைக் குறித்து நீ அல்லாஹ்வை அஞ்ச வேண்டும். நாங்கள் உன்னைக் கொண்டிருக்கிறோம். நீ நேராக இருந்தால் நாங்களும் நேராக இருப்போம், நீ கோணி விட்டால் நாங்களும் கோணி விடுவோம்" என்று கூறுகின்றன என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஸயீதினில் குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- திர்மிதீ.

வாய்மூடுதல் (ஸலாமத்) என்று அல்உஸ்தாது அபுல்காஸிமில் குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள். அதிகமாகப் பேசாமல் இருப்பது தொல்லைகளை விட்டு நலமாக இருக்கும் என்பது இதன் கருத்து. பேச வேண்டிய இடத்தில் தேவையான அளவு பேசுவது மனிதனுக்கு இருக்க வேண்டிய சிறந்த தன்மைகளில் ஒன்றாக இருப்பது போல பேசாமல் இருக்க வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பதும் அவனுடைய சிறப்பிலொன்று.

قال الله تعالى. وَاعْبُدُوا اللهَ وَلاَ تُشْرِكُوا بِهِ شَيْئًا. وبالوالدين احسانا والجار ذي القربى والجار الجنب.

"அல்லாஹ்வை வணங்குங்கள், அவனுக்கு எதையும் இணை வைக்காதீர்கள். இன்னும் இரு பெற்றோர்களுக்கும், பந்துக்களுக்கும், அனாதைகளுக்கும், மிஸ்கீன்களுக்கும், பக்கத்து அயலகத்தாருக்கும் தூரத்து அயலகத்தாருக்கும் உபகாரத்தை (செய்யுங்கள்)" (4:36) என்று அல்லாஹ தன்னுடைய திருமறையில் கூறியுள்ளான். அயலகத்தாரை கண்ணியப் படுத்துவது பற்றி ஏராளமான ஹதீஸ்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான்.

مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيُكْرِمْ جَارَهُ

"எவர் அல்லாஹ்வை விசுவாசித்திருக்கிறரோ அவர் தன்னுடைய அயலகத்தாரை கண்ணியப்படுத்த வேண்டும்" என்ற இந்த ஹதீஸும்.

عن مقداد بن الأسود رضي الله تعالى عنه يقول: قال رسول اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لأصحابه مَا تَقُولُونَ فِي الزِّنَا قَالُوا: حَرَّمَهُ اللهُ وَرَسُولُهُ فَهُوَ حَرَامٌ إِلَى يَوْمِ الْقِيَامَةِ. قال: فقال رسول اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لأصحابه: لأَنْ يَزْنِيَ الرَّجُلُ بِعَشْرَةِ نِسْوَةٍ أَيْسَرُ عَلَيْهِ مِنْ يَزْنِيَ بِامْرَأَةِ جَارِهِ قَالَ: فَقَالَ مَا تَقُولُونَ بِالسَّرِقَةِ قَالُوا حَرَّمَهَا اللهُ وَرَسُولُهُ فَهُوَ حَرَام. قَالَ: لأَنْ يَسْرِقَ الرَّجُلُ مِنْ عَشْرَةِ أَبْيَاتٍ أَيْسَرُ عَلَيْهِ مِنْ أَنْ يَسْرِقَ مِنْ جَارِهِ. رواه احمد.

"விபச்சாரத்தைக் குறித்து என்ன சொல்கிறீர்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய

தோழர்களிடம் வினவினார்கள். அது ஹராம் அதனை அல்லாஹ்வும் அவனுடைய ரசூலும் ஹராமாக்கி இருக்கிறார்கள். ஆதலின், அது கியாமத்து நாள் வரையில் ஹராம் என்று தோழர்கள் பதிலளித்தார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதன் பத்து பெண்களுடன் விபச்சாரம் செய்வது தன்னுடைய பக்கத்து வீட்டு பெண்ணுடன் விபச்சாரம் செய்வதைப் பார்க்கினும் மிக சுலபமானது என்று கூறினார்கள். பின்னர், திருட்டைக் குறித்து என்ன சொல்கிறீர்கள் என்று வினவினார்கள். அது ஹராம். அதனை அல்லாஹ்வும் அவனுடைய ரசூலும் ஹராமாக்கி இருக்கிறார்கள். கியாமத்து நாள் வரையில் அது ஹராம் என்று பதிலளித்தார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் பத்து வீடுகளில் ம்னிதன் திருடுவது தன்னுடைய அண்டை வீட்டிலிருந்து திருடுவதைப் பார்க்கினும் சுலபமானது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் மிக்காத் இப்னுல் அஸ்வத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- அஹ்மத்.

அண்டை வீட்டுக்காரர் நட்பின் காரணமாக பக்கத்து வீட்டுப் பெண்களும் ஆண்களும் தம்முடைய வீட்டுக்கு வருவதையும் போவதையும், தம்முடைய வீட்டிலுள்ள ஆண் பெண்களுடன் பேசுவதையும் அனுமதிப்பதுடன், தம்முடைய வீட்டுச் சாமான்களை அவர்களை விட்டு மறைக்காமலும் அவர்களை சந்தேகக் கண் கொண்டு பார்க்காமலும் இருப்பார். அயலகத்தார் தமக்கு துரோகம் செய்ய மாட்டார் என்ற நம்பிக்கையுடன் இருப்பார். எனவே, அண்டை வீட்டில் திருடுவதும், அங்குள்ள பெண்களைக் கொடுப்பதும் சுலபம். தூரத்து வீட்டின் நிலை இதற்கு நேர்மாறானது. அந்நியர்கள்

தம்முடைய வீட்டினருகில் சுற்றுவதையும் அடிக்கடி நடமாடுவதையும், தம் வீட்டு ஆண் பெண்களுடன் உறவு கொள்வதையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பார்கள். எனவே, அங்கு திருடுவதும், அங்குள்ள பெண்களைக் கெடுப்பதும் சிரமமான காரியம். புற உலகில் இப்படி இருப்பதற்கு நேர்மாறாக இந்த ஹதீஸ் கூறுகிறது. இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள சுலபம் என்பது பாவத்தாலும் வேதனையாலும் சற்று குறைவு என்பதையும், அயலகத்தாரிடம் இப்படிச் செய்வதால், நம்பியவருக்கு துரோகம் செய்தல் என்ற குற்றமும் ஏற்படுகிறது. எனவே, அண்டை வீட்டில் இவற்றைச் செய்வது மிகக் கொடிய குற்றமும், கடுமையான வேதனையு மாகும் என்பதை இந்த ஹதீஸ் சுட்டிக் காட்டுகிறது.

عن أبي هريرة رضي الله تعالى عنه ان رسول اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: وَاللّٰهِ لَا يُؤْمِنُ وَاللّٰهِ لَا يُؤْمِنُ وَاللّٰهِ لَا يُؤْمِنُ قَالُوا وَمَا ذَاكَ يَا رَسُوْلَ اللّٰهِ؟ قَالَ: اَلْجَارُ لَا يَأْمَنُ جَارُهُ بَوَائِقَهُ قَالُوا يَا رَسُوْلَ اللّٰهِ وَ مَا بَوَائِقُهُ؟ قَالَ: شَرُّهُ. رواه البخاري. ولفظه مسند احمد.

"அல்லாஹ்வின் மீது பிரமாணமாக அவன் விசுவாசம் கொள்ளமாட்டான். அல்லாஹ்வின் மீது பிரமாணமாக அவன் விசுவாசம் கொள்ள மாட்டான். அல்லாஹ்வின் மீது பிரமாணமாக அவன் விசுவாசம் கொள்ள மாட்டான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். "அவன் நஷ்டமடைந்து விட்டான், மறுமையின் வெற்றியை இழந்து விட்டான், அவன் யார்?" என்று ஸஹாபிகள் வினவினர். "அவனுடைய நட்பில் அவனுடைய அயலகத்தார் அச்சங்கொள்பவர் என்று பதிலளித்தார்கள்". அவனுடைய நட்பு என்றால் என்ன?

வென்று வினவினார். "அவனுடைய தீமை தான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- புகாரி. அஹ்மத்.

عن أنس رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَنْ آذَى جارَهُ فَقَدْ آذَانِي وَمَنْ آذَانِي فَقَدْ آذَى اللهَ وَمَنْ حَارَبَ جارَهُ فَقَدْ حَارَبَنِي وَمَنْ حَارَبَنِي فَقَدْ حَارَبَ اللهَ رواه ابو الشيخ وابو نعيم.

"தன்னுடைய அயலகத்தாரை எவர் நோவினை செய்தாரோ அவர் என்னை நோவினை செய்து விட்டார். என்னை எவர் நோவினை செய்தாரோ அவர் அல்லாஹ்வை நோவினை செய்து விட்டார். தன்னுடைய அயலகத்தாரிடம் எவர் போரிடுகிறாரோ அவர் என்னுடன் போரிட்டு விட்டார். என்னுடன் போரிட்டவர் அல்லாஹ் அஸ்ஸ வஜல்லவுடன் போரிட்டு விட்டார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு

நூல்கள்:- அஹ்மத். புகாரி

عن عبد الله بن عمر رضي الله تعالى عنهما قال: خرج رسول الله صلى الله عليه وسلم في غزاة فقال: لاَ يَصْحَبْنَا الْيَوْمَ مَنْ آذَى جارَهُ فَقَالَ رَجُلٌ مِنَ الْقَوْمِ: أَنَا بُلْتُ فِي أَصل حَائِطِ جَارِي قَالَ: لاَ تَصْحَبْنَا الْيَوْمَ. رواه الطبراني.

"ஒரு போருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புறப்பட்டார்கள். அப்பொழுது, தம்முடைய அண்டை வீட்டாரை நோவினை செய்தவர் எம்முடன் வரலாகாது என்று கூறினார்கள். உடனே, என் அண்டை வீட்டுக்காரரின் சுவற்றில் நான் சிறு நீர் கழித்தேன் என்று அவர்களிலுள்ள ஒருவர் கூறினார். அப்பொழுது, இன்றைய தினத்தில் எங்களுடன் சேர்ந்து நீர் (போருக்கு) வரலாகாது" என்று கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்:- அத்தப்ரானீ

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رجل: يَا رَسُولَ اللهِ إِنَّ فُلاَنَةَ يُذْكَرُ مِنْ كَثْرَةِ صَلاَتِهَا وَصِيَامِهَا وَ صَدَقَتِهَا غَيْرَ أَنَّهَا تُؤْذِي جِيْرَانَهَا بِلِسَانِهَا قَالَ: هِيَ فِي النَّارِ. قَالَ يَا رَسُولَ اللهِ فَإِنَّ فُلاَنَةَ يُذْكَرُ مِنْ قِلَّةِ صِيَامِهَا وَصَدَقَتِهَا وَصَلاَتِهَا وَإِنَّهَا تَصَدَّقُ بِالأَثْوَارِ مِنَ الأَقِطِ وَلاَ تُؤْذِي جِيْرَانَهَا بِلِسَانِهَا قَالَ: هِيَ فِي الْجَنَّةِ. رواه احمد.

"அல்லாஹ்வின் தூதரே இன்ன பெண் அவளுடைய அதிகமான தொழுகையையும் அவளுடைய தர்மத்தையும் அவளுடைய நோன்புகளையும் குறித்து பிரஸ்தாபிக்கப் படுகிறாள். என்றாலும், அவள் தன்னுடைய நாவால் (பிறரை) நோவினை செய்கிறாள் என்று ஒருவர் கூறினார். அவள் நரகில் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் தூதரே இன்னபெண் குறைவாகத் தொழுகிறாள், நோன்பு நோற்கிறாள். என்றாலும், அவள் தன்னுடைய கஞ்சியில் சிலபகுதிகளை தர்மம்

செய்வதுடன் அண்டை வீட்டுக்காரர்களை அவள் நோவினை செய்வதில்லை என்று அவர் கூறினார். அவள் சுவர்க்கத்தில் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு.
நூல்:- அஹ்மத்

عن معاوية بن حيدة رضي الله تعالى عنه قال: قلت يا رسول الله ما حق جاري؟ قال إن مرض عدته وإن مات شيعته وإن استقرضك أقرضته وإن أعوز سترته وإن أصابه خير هنأته وإن أصابته مصيبة عزيته ولا ترفع بناءك فوق بنائه فتسد عليه الريح ولا تؤذه بريح قدرك إلا أن تغرف له منها. رواه الطبراني.

"அல்லாஹ்வின் ரசூலே, அயலகத்தாரின் உரிமை என் மீது எவ்வளவு என்று வினவினேன். அதற்கவர்கள், அவர் நோயுற்றால் அவரிடம் சென்று நலம் வினவ வேண்டும். அவர் இறந்தால் அவரது நல்லடக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும். உன்னிடத்தில் அவர் கடன் கேட்டால் அவருக்கு கடன் கொடுத்து உதவ வேண்டும். அவர் தவறு செய்தால் (அதனை பகிரங்கப் படுத்தி அவமானத்தை உண்டாக்காமல்) அதனை மறைக்க வேண்டும். அவருக்கு நல்லது கிடைத்தால் அவரை வாழ்த்த வேண்டும். அவருக்கு துன்பமேற்பட்டால் அனுதாபப்பட வேண்டும். அவருக்கு காற்று வராமல் தடை ஏற்படும்படி உனது கட்டடத்தை அவரது கட்டடத்தைப் பார்க்கினும் உயர்த்தலாகாது. உனது சமையலில் இருந்து அவருக்கும் கொஞ்சமும் கொடுக்காமல் உமது சமையல் சட்டியின் வாடையைக் கொண்டு அவரை நோவினை செய்ய லாகாது

(அதாவது உமது வீட்டில் விசேஷமாக சமைத்தால் அவருக்கும் கொஞ்சம் கொடுக்க வேண்டும்)" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் முஆவியா இப்னு ஹைதாஃ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
நூல்:- அத்தபரானீ

عن عمرو بن شعيب عن أبيه عن جده رضي الله تعالى عنه عن النبي صلى الله عليه وسلم قال: وإن اشتريت فاكهة فاهد له فإن لم تفعل فأدخلها سرا ولا يخرج بها ولدك ليغيظ بها ولده. رواه الخرائطي شعب الإيمان.

"நீ பழம் வாங்கினால் அவருக்கும் அதிலிருந்து அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய முடியா விடில் இரகசியமாக அதனை நீர் கொண்டு போக வேண்டும். அவருடைய குழந்தை கோபமடையும் படி உனது பிள்ளையை (அக்கனியுடன்) வெளியாக விடலாகாது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அம்ரு இப்னு ஷுஐபு ரலியல்லாஹு தஆலா அன்ஹு
நூல்:- அல்கராயீத்தி.

عن أنس بن مالك رضي الله تعالى عنهما قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَنْ آمَنَ بِي بَاتَ شَبْعَانًا وَجَارُهُ جَائِعٌ إِلَى جَنْبِهِ وَهُوَ يَعْلَمُ. رواه الطبراني والبزار واسناده حسن.

"தன்னுடைய அயலகத்தார் பசித்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டே வயிறு நிரம்பியவராக இருக்கிற நிலையில்

இரவைக் கழிப்பவர் என்னை விசுவாசம் கொண்டவரல்லர்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்:- அத்தப்ரானீ.

عن بن عمر رضي الله تعالى عنهما قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَا زَالَ جِبْرِيْلُ يُوْصِيْنِي بِالْجَارِ حَتَّى ظَنَنْتُ أَنَّهُ سَيُوَرِّثُهُ. رواه البخاري ومسلم.

“அயலகத்தாரைக் குறித்து எனக்கு ஜிப்ரயீல் வஸிய்யத்துச் செய்து கொண்டே இருந்தார். இது வஹீயாக அறிவிக்கப்படுமோ என்றும் நான் எண்ணி விட்டேன்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

عن ابي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَنْ يَأْخُذُ عَنِّيْ هٰؤُلَاءِ الْكَلِمَاتِ فَيَعْمَلُ بِهِنَّ أَوْ يُعَلِّمُ مَنْ يَعْمَلُ بِهِنَّ فَقَالَ: أَبُوْ هُرَيْرَةَ فَقُلْتُ أَنَا يَا رَسُوْلَ اللهِ فَأَخَذَ بِيَدِيْ فَعَدَّ خَمْسًا فَقَالَ: اِتَّقِ الْمَحَارِمَ تَكُنْ أَعْبَدَ النَّاسِ وَ ارْضَ بِمَا قَسَمَ اللهُ لَكَ تَكُنْ أَغْنَى النَّاسِ وَأَحْسِنْ إِلَى جَارِكَ تَكُنْ مُؤْمِنًا وَأَحِبَّ لِلنَّاسِ مَا تُحِبُّ لِنَفْسِكَ تَكُنْ مُسْلِمًا وَلَا تُكْثِرِ الضَّحِكَ فَإِنَّ كَثْرَةَ الضَّحِكِ تُمِيْتُ الْقَلْبَ. رواه الترمذى.

“என்னிடத்திலிருந்து இந்த வார்த்தைகளை வாங்கிக் கொள்கிறவர் எவர்? அவர் அவற்றை செயல்படுத்தப்பட்டும் அல்லது செயல்படுத்துகிறவருக்கு கற்பிக்கட்டும்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் ரசூலே, நான் என்று அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள். அப்பொழுது எனது கையைப் பிடித்துக் கொண்டு ஐந்தைக் கூறினார்கள்.

1. ஹராமான (விலக்கப்பட்ட) வற்றைத் தவிர்த்துக் கொள். மக்களில் மிகவும் வணக்கவாளியாகி விடுவீர்.

2. அல்லாஹ் உமக்கு பங்கிட்டுத் தந்ததைக் கொண்டு திருப்தியடையும். அப்பொழுது மக்களில் நீர் மிகவும் தேவையற்றவராகி விடுவீர்.

3. உமது அயலகத்தாருக்கு உபகாரம் செய். நீர் மூமினாகி விடுவீர்.

4. உமக்கு பிரியமானதை மற்றைய மக்களுக்கும் பிரியப்படு. நீர் முஸ்லிமாகி விடுவீர்.

5. வெடிச் சிரிப்பை அதிகப்படுத்தாதீர். அதிகமாகச் சிரிப்பது இருதயத்தை மரிக்கச் செய்து விடும் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- திர்மிதீ.

அயலகத்தார் என்பது ஒரே வீட்டில் உன்னுடன் இருப்பவரையும் உன் வீட்டுடன் சேர்ந்திருக்கிற வீட்டுக்காரார் களையும்அதாவதுஒவ்வொருதிசையிலும்நாற்பதுவீட்டுக்காரர்களையும்

உன்னுடைய ஊர்க்காரர்களையும் குறிக்கும். உனது அயலகத்தார் முஸ்லிம் அல்லாதவராக இருந்தால் அவருக்கு அயலகத்தார் என்ற ஒரு உரிமை மட்டுமுண்டு. அவர் முஸ்லிமாக இருந்தால் அவருக்கு அயலகத்தார் முஸ்லிம் என்ற இரண்டு உரிமைகளுள்ளன. அவர் உறவினராக இருந்தால் அவருக்கு அயலகத்தார், முஸ்லிம், உறவினர் என்ற மூன்று உரிமைகள் இருக்கின்றன.

عن عائشة رضي الله تعالى عنها قالت: قلت يا رسول الله إنَّ لي جَارَيْنِ فَإِلَى أَيِّهِمَا أُهْدِي؟ قَالَ: إِلَى أَقْرَبِهِمَا مِنْكِ بَابًا. رواه البخاري.

"அல்லாஹ்வின் ரசூலே, எனக்கு இரண்டு அயலகத் தார்கள் இருக்கின்றனர். அவர்களில் எவருக்கு நான் அன்பளிப்புக் கொடுக்க வேண்டும் என்று நான் வினவினேன். உனக்கு அதிக நெருக்கமுள்ள தலைவாசல்காரருக்கு" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்:- அன்னை ஆயிஷா ரலியல்லாஹு தஆலா அன்ஹா

நூல்:- புகாரி.

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: يَا اَبَا ذَرٍّ إِذَا طَبَخْتَ مرَقَةً فَأَكْثِرْ مَائَهَا وَ تَعَاهَدْ جِيْرَانَكَ. رواه مسلم.

"அபூதர்ரே, நீர் குளம்பு தயார் செய்தால் அதில் தண்ணீரை அதிகப்படுத்தி உனது அயலகத்தாருக்கும் கொடு" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

பக்கத்து வீட்டுக்காரரையும் தம்முடைய நல்ல காரியங் களில் கூட்டுச் சேர்த்துக் கொள்வதால் இரு வீட்டுக்காரர் களுக்கும் இடையில் அந்நியோன்யம் வளரவும் நட்பு பெருகவும் பரஸ்பரம் உதவி உபகாரங்கள் ஏற்படவும் ஹேதுவாகிறது. பக்கத்து வீட்டுக்காரர் ஏழையாகவோ, விதவையாகவோ இருந்து அவர்களிடத்தில் சிறு பையன்களும் குழந்தைகளுமிருந்தால் உமது வீட்டு சமையல், பொரியலின் நறுமணம் அண்டை வீட்டுக்கும் வீசும். அங்குள்ள குழந்தைகளுக்கு அதன் மீது ஆசை ஏற்படும். அவர்களுக்கும் கொஞ்சம் கொடுத்து விட்டால் அவர்களின் ஆசை நிறைவேறிவிடும். அவ்வாறில்லாவிடில் குழந்தைகளை திருப்திபடுத்த முடியாமல் அவர்கள் அல்லலுற நேரிடும். எனவே, மக்களுக்குள் நட்பும் ஐக்கியமும் ஏற்பட இது ஒரு நல்ல வழியாகும் என்பதை இந்த ஹதீஸின் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உணர்த்தியுள்ளார்கள்.

இதுபோல உமது அண்டை வீட்டுக்காரரோ, உறவினர் களோ நண்பர்களோ உமக்கு ஏதேனும் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். நிராகரிக்க லாகாது. அவர்களை அற்பமாக மதிக்கலாகாது.

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيُكْرِمْ ضَيْفَهُ. رواه البخاري.

"அல்லாஹ்வையும் கடைசி நாளையும் எவர் விசுவாசித் திருக்கிறாரோ அவர் தன்னுடைய விருந்தாளியை கண்ணியப் படுத்த வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரி.

இதுவே நபிமார்கள், நல்லோர் பெரியோர்களின் குணமாகும். இஸ்லாத்தின் ஒழுக்கங்களில் ஒன்றாகும். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அபுல்லீபான் (விருந்தினரின் தந்தை) என்று சிறப்பித்து அழைக்கப்பட்டார்கள். தம்முடன் சேர்ந்து உணவருந்துவதற்கான விருந்தாளிகளைத் தேடி ஒரு மைல் இரண்டு மைல் தூரம் வரை செல்வார்கள் என்று ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து சொல்லப்படுகிறது. இரவு விருந்து ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமை என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறியிருப்பதை அல் லைதுப்னு ஸஅத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் உறுதியுடன் கடைப் பிடித்து தினசரி இரவில் விருந்தாளிக்கு உணவளித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் கட்டளை பர்ளா? வாஜிபா? என்பதைக் குறித்து மார்க்கச் சட்ட நிபுணர்கள் விவாதம் செய்து, இது முஸ்தஹப்பு என்பதாக தீர்ப்பளித்துள்ளார்கள். இது பெருந்தன்மையைச் சேர்ந்தது. இஸ்லாமின் ஆரம்பக் காலத்தில் முஸ்லிம்களுக்கு கடுமையான எதிர்ப்பும், பாதுகாப்பின்மையும் இருந்தாலும் அக்காலத்தில் உணவுப் பஞ்சமிருந்ததாலும் இது அவசியமாக இருந்தது. இப்பொழுது அந்த நிலை மாறிவிட்டதால் இது

முஸ்தஹப்பு (விரும்பத்தக்க காரியம்) தான். பண்பாட்டில் ஒன்று என்பதாக விளக்கம் கூறியுள்ளார்கள். ஒரு இரவும் பகலும் விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். விருந்தும் மருந்தும் மூன்று வேளைகள் என்பது பழமொழி.

اعبدوا الله ولا تشركوا به شيئا وبالوالدين احسانا وبذي القربى واليتامى والمساكين.

"அல்லாஹ்வை வணங்குங்கள், அவனுக்கு எதையும் இணையாக்காதீர், பெற்றோர்களுக்கும் பந்துக்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உபகாரம் செய்யுங்கள்" (4.36) என்று அல்லாஹு ஸுப்ஹானஹுவதஆலா தன்னுடைய திருமறையில் கூறியுள்ளான்.

عن أنس رضي الله تعالى عنه قال: ان رسول الله صلى الله عليه وسلم قال: اَللّٰهُمَّ أَحْيِنِيْ مِسْكِيْنًا وَأَمِتْنِيْ مِسْكِيْنًا وَاحْشُرْنِيْ فِيْ زُمْرَةِ الْمَسَاكِيْنِ يَوْمَ الْقِيَامَةِ فَقَالَتْ: عَائِشَةُ لِمَ يَا رَسُوْلَ اللهِ؟ قَالَ: إِنَّهُمْ يَدْخُلُوْنَ الْجَنَّةَ قَبْلَ أَغْنِيَائِهِمْ بِأَرْبَعِيْنَ خَرِيْفًا يَا عَائِشَةُ لَا تَرُدِّيْ الْمِسْكِيْنَ وَلَوْ بِشِقِّ تَمْرَةٍ. يَا عَائِشَةُ أَحِبِّي الْمَسَاكِيْنَ وَقَرِّبِيْهِمْ فَإِنَّ اللهَ يُقَرِّبُكِ يَوْمَ الْقِيَامَةِ. رواه الترمذي.

"நாயனே என்னை ஏழையாக ஜீவிக்கச் செய்; என்னை ஏழையாக மரணிக்கச் செய். என்னை ஏழைகளின் கூட்டத்தில் உயிர்ப்பிக்கச் செய்வாயாக என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் ரசூலே ஏன் (இப்படி பிரார்த்திக்கிறீர்கள்) என்று

(அன்னை) ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹா வினவினார்கள். அவர்கள் சீமான்களைப் பார்க்கினும் நாற்பது வருடங்களுக்கு முன்னதாக சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள். ஆயிஷாவே ஏழைகளை துரத்தாதே ஒரு பேரீத்தங்கனியின் ஒரு துண்டைக் கொடுத்தேனும் ஆதரி, ஆயிஷாவே ஏழைகளை நேசி, அவர்களை உன் அருகிலாக்கிக் கொள். இறுதி நாளில் உன்னை அல்லாஹ் தன் அருகிலாக்கிக் கொள்வான்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்:- அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- திர்மிதீ.

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: يَدْخُلُ الْفُقَرَاءُ الْجَنَّةَ قَبْلَ الأَغْنِيَاءِ بِخَمْسِ مِائَةِ عَامٍ نِصْفِ يَوْمٍ. رواه الترمذي

"சீமான்கள் சுவர்க்கம் புகுவதற்கு ஐநூறு வருடங்களுக்கும் அரை நாளுக்கும் முன்னர் ஏழைகள் சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- திர்மிதீ.

இவ்விரு ரிவாயத்துகளும் ஒன்றுக்கொன்று மாறாக இருப்பதைக் குறித்து அறிஞர்கள் விளக்கம் கூறியிருக்கின்றனர். ஏழைகளிலும் சிலர் தம்முடைய ஏழ்மையைப் பொருந்திக் கொள்ளாமல் அதனை அகற்றுவதற்காக பெரும் முயற்சிகளைச் செய்வர். ஆனால், அதில் அவர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை.

எனினும், இந்த நிலைக்காக இறைவனை நிந்திக்காமல் தன்னுடைய ஈமானையும் இஸ்லாமியப் பண்பாட்டையும் காப்பாற்றி அமைதியாக வாழ்வர். சிலர் தங்களுக்கு சீமான் தனம் கிடைக்குமா என்ற நப்பாசையைத் தறந்து வறுமையில் செம்மையாக வாழ்வர். இவ்வாறு ஏழைகளிலும் பல்வேறு வகையினர் வாழ்வதால் அவர்களின் தரத்திற்குத் தக்கவாறு சுவர்க்கம் புகுவதில் சிலர் துரிதமாகவும் சிலர் தாமதமாகவும் புகுவர். நாற்பது வருடங்களுக்கு முன்னர் சுவர்க்கம் புகுவோர் எல்லா ஏழைகளுக்கும் பிந்தி தாமதமாக சுவர்க்கம் புகும் ஏழைகளைச் சார்ந்தவர்கள். ஐனூறு வருடங்களுக்கு முன்னர் சுவர்க்கம் புகும் ஏழைகள் அனைவருக்கும் முந்தி துரிதமாக சுவர்க்கம் புகுபவரைச் சேர்ந்தவர்கள் என்றும் இவ்விரு எல்லைகளுக்கும் இடையிலுள்ள காலங்களிலும் அவரவர் தரத்திற்குத் தக்கவாறு முந்தியும் பிந்தியும் சுவர்க்கம் புகுவர் என்றும் கொள்ள வேண்டும் என்று விளக்கம் கூறியுள்ளார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் பனூ இஸ்ராயீல்களில் ஒரு கூட்டத்தாருக்கு தொல்லைகளும் துயரங்களும் ஏற்பட்டன. இதனை நிவர்த்திப்பதற்கு ஏற்ற காரியங்கள் யாவை என அக்காலத்தில் அவர்களின் மத்தியில் வாழ்ந்த நபியினிடத்தில் அவர்கள் வினவினர். அவர் அல்லாஹ்வை வேண்டினார். அதற்கு அவன் என்னுடைய திருப்தியை அவர்கள் நாடினால் ஏழைகளை அவர்கள் திருப்தியடையச் செய்ய வேண்டும். ஏழைகளை அவர்கள் அதிருப்தியடையச் செய்தால் என்னை அவர்கள் அதிருப்தியடையச் செய்வர் என்று வஹீ அறிவித்தான்.

அறிவிப்பவர்:- ஹழரத் அல்இமாம் அஹ்மதுப்னுல்ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி நூல்:- அஜ்ஜுஹ்த்

ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம்அவர்களின் புதல்வர் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மஸ்ஜிதுக்குச் சென்றால் ஏழையின் அருகில் சென்று ஏழையுடன் ஏழையாக அமர்கிறார் என்று கூறி அமருவார் என்று சொல்லப்படுகிறது. எனவே, நற்பேறுள்ளவர் ஏழைகளின் பால் பற்றுள்ளவராகுவார்.

16. கோபம் கொள்ளாதீர்

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: أن رجلا قال للنبي صلى الله عليه وسلم: أَوْصِنِي قَالَ: لاَ تَغْضَبْ فَرَدَّدَ مِرَارًا قَالَ: لاَ تَغْضَبْ. رواه البخاري.

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒருவர் எனக்கு உபதேசம் செய்யுமாறு வேண்டினார். நீ கோபம் கொள்ளாதே என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள். அவர் பல முறை தம்முடைய வேண்டுகோளை மடக்கி மடக்கிக் கூறினார். அதற்கு நீ கோபம் கொள்ளாதே" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரி.

மனிதனால் நிகழ்கிற பெரும்பாலான தீமைகளை விலக்குவதற்குரிய அரும்பெரும் வழியை இந்த ஹதீஸ் விவரிக்கிறது. மனிதன் தன்னுடைய வாழ்வை இன்பத்திலும் துன்பத்திலும் கழிக்கிறான். இவ்விரண்டிற்குமிடையில் தான் மனித வாழ்வு இருந்து வருகிறது என்று கூறிடின் அது மிகைப்படுத்திக் கூறியதாக கருதப்படமாட்டாது. உணவாலும், பானத்தாலும், உடலுறவாலும் உண்டாகிற வேட்கை தான் இன்பத்துக்குக் காரணம். கோபம் தான் துன்பத்தை உண்டாக்கக் காரணமாக இருக்கிறது. எனவே, ஒருவர் கோபத்தை அடக்கிக் கொள்ளும் ஆற்றலை அடைந்து செயல் வடிவில் கொண்டு வருவாராயின் மனிதனுக்கு ஏற்படுகிற பெரும்பாலான கெடுதல்களை அவர் தவிர்த்துக் கொண்டார் என்றே கொள்ள

வேண்டும். தமக்கு உபதேசம் செய்யுமாறு கேட்டுக் கொண்ட ஸஹாபீ கோபம் கொள்ள வேண்டாம் என்ற ஒரு சொல்லின் உபதேசத்தினுள் மறைந்திருந்த உண்மைகளைப் புரியாமல் இரந்திருக்கலாம் அல்லது நீண்ட உபதேசங்களை அவர் எதிர்பார்த் திருக்கலாம். எனவே, தம்முடைய வேண்டுகோளை மீண்டும் மீண்டும் பலமுறை மடக்கி மடக்கிக் கூறினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களும் தங்களுடைய மேற்கண்ட ஒற்றை பதிலையே மீண்டும் மீண்டும் கூறினார்கள். இச்சை, கோபம் ஆகிய இரண்டினாலேயே மனிதர்களுக்கும் வானவர்களுக்கும் வித்தியாசமேற்படுகிறது. இவ்விரு குணங்களும் வானவர்களிடமில்லை. மனிதனில் அவைகளிருப்பதால் தான் பாவங்களைச் செய்ய நேரிடுகிறது. இவ்விரண்டும் இல்லாத மனிதரை வானவர்களின் தன்மை யுள்ளவர் என்று மனிதர்கள் போற்றுவதை நாம் காண்கிறோம். இவ்விரு தன்மைகளும் மனிதரில் வைக்கப்பட்டு இருக்கின்றன. இவற்றை அடியுடன் ஒழித்து விட மனிதரால் இயலாது. ஏனெனில், உலகில் வாழும் காலத்தில் மனைவி மக்களுடனும் உற்றார் உறவினருடனும் பிறருடனும் இணைந்தே வாழ வேண்டிய திருக்கிறது. இவர்கள் பாவங்களைச் செய்வர். கோபமின்றி வெறுமனே உபதேசம் செய்தால், சிலர் அதனை செவியுறாமல் மென்மேலும் துணிந்து செய்வர். இத்தகைய சந்தர்ப்பங்களில் கோபம் தேவைப்படுகிறது. எனவே, கோபிக்க வேண்டிய இடத்தில் கோபிப்பதும், அதனை அளவோடு உபயோகிப்பதும் அவசியம். எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கோபிக்காதே என்ற உபதேசம் அனாவசியமாகக் கோபிக்காதே. தேவைக்கு மேல் அதிகமாக அதனை பிரயோகிக்காதே என்பதுதான் கருத்து.

عن بن عباس رضي الله تعالى عنه عن ابيه العباس أنه آتى رَسُوْلَ اللهِ فَقَالَ: يَا رَسُوْلَ اللهِ آنَا عَمُّكَ كَبِرَتْ مِنِّيْ وَاقْتَرَبَ اَجَلِيْ وَعَلِّمْنِيْ شَيْئًا يَنْفَعُنِيْ اللهُ بِهِ قَالَ يَا عَبَّاسُ اَنْتَ عَمِّيْ وَ اُغْنِيْ عَنْكَ مِنَ اللهِ شَيْئًا. وَلٰكِنْ سَلْ رَبَّكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالآخِرَةِ فَالَهَا ثَلاَثًا ثُمَّ آتَاهُ عِنْدَ قَرْنِ الْحَوْلِ فَقَالَ لَهُ مِثْلَ ذٰلِكَ. رواه الترمذي واحمد.

ஹளரத் அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் வந்தார்கள். யா ரசூலல்லாஹ்! "நான் தங்களின் சிறிய தந்தை. எனக்கு வயது முதிர்ந்து விட்டது. என்னுடைய தவணை நெருங்கிவிட்டது. ஏதாவது ஒன்றை எனக்குக் கற்றுத் தாருங்கள்; அதன் மூலம் அல்லாஹ்விடமிருந்து பயன் பெற வேண்டும்" என கேட்டார்கள். அப்பாஸே! "எனது சிறிய தந்தையே அல்லாஹ்விடமிருந்து உமக்கு எதையும் பெற்றுத் தர முடியாது. எனினும், அல்லாஹ்விடம் மன்னிப்பையும் உடல் நலத்தையும் இம்மையிலும் மறுமையிலும் கேள்" என்று மூன்று முறை கூறினார்கள். சிறிது காலம் கழித்துக் கேட்ட போதும் அதையே மீண்டும் கூறினார்கள்".

அறிவிப்பவர்:- ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்கள்:- திர்மிதீ, அஹ்மத்.

عَنْ أبي سعيد الخدري رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: اَلاَ وَاِنَّ الْغَضَبَ جَمْرَةٌ فِيْ قَلْبِ ابْنِ آدَمَ. رواه الترمذي.

"அறிந்து கொள்: நிச்சயமாக கோபம் என்பது ஒரு நெருப்பு. மனிதனின் இதயத்தில் அது பற்ற வைக்கப்படுகிறது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஸயீது அல்குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- திர்மிதீ.

கோபம் வந்தவுடன் நரம்புகள் விடைத்துக் கொள்கின்றன. கண்கள் சிவந்து விடுகின்றன. அல்லாஹ் கோபிக்கிறான் என்பது தண்டிக்க நாடுவதைக் குறிக்கிறது. அல்லாஹ்விற்காக கோபித்தல் என்பது புகழத்தக்க காரியமாகும். இதனால் தான் அல்லாஹ் ஹராமாக்கியதைப் பேணாமல் மீறினால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கோபம் அடைந்தார்கள். அவர்கள் துஆ கேட்கும் போது, நாயனே உன்னிடத்தில் சத்தியவார்த்தையை கோப வேளையிலும் சந்தோஷ வேளையிலும் கேட்கிறேன் என்று துஆ கேட்டார்கள்.

கோபத்தை அடக்குவதற்கும் அதனை அகற்றுவதற்கும் உள்ள பலமான சாதனம் மெய்யான யதார்த்தமான தவ்ஹீது தான். இவ்வுலகில் நிகழுகிற சகல காரியங்களுக்கும் உண்மையான கர்த்தா அல்லாஹ்தான். புறத்தில் அதனை நடத்தி வைக்கும் கருவிகள் படைப்புகள். ஒருவருக்கு அவர் விரும்பாத ஒன்று நிகழ்ந்து. மேற்கண்ட தவ்ஹீதை அவன் மனதார அதில் உணர்ந்தால் அவனுக்கு கோபம் வராது. அப்படி வந்தாலும் அது விரைவில் மாறி விடும். அப்படி வருகிற கோபம் படைத்தவன் மீது ஏற்படும். இது மிகக் கேவலமானது. உபூதிய்யத்துக்கு மாறான தாகும். அல்லது அக்கோபம் சிருஷ்டியின் மீதேற்படும். இது மேற்கண்ட தவ்ஹீதுக்கு முற்றிலும் விரோதமான ஷிர்க்காகும்.

முஃமின்களின் வணக்கம் இபாதத்து. உபூதிய்யத்து. உபூதத்து என்று மூன்று வகைப்படும்.

இபாதத் என்பது அல்லாஹ்வை கண்ணியப்படுத்தி மனோ இச்சைக்கு வழிப்படாமல் அவனுடைய ஏவல், விலக்கல்கள் அனைத்தையும் ஏற்றுச் செயல்படுவதாகும். இது வணக்கத்தின் வெளித் தோற்றமாகும்.

உபூதிய்யத் என்பது ஏவல் விலக்கல்களை ஏற்றுச் செயல்படுத்துவதுடன் அல்லாஹ்வுடைய விதிப்பைப் பொருந்திக் கொண்டு திருப்தியடைந்து கிடைக்கப் பெறாததற்காக பதற்ற மில்லாமல் பொறுமையைக் கடைப்பிடித்து வாழ்வதாகும். இது வணக்கத்தில் அந்தரங்க நிலையாகும்.

உபூதத் என்பது மேற்கூறப்பட்ட அந்தரங்க வணக் கத்துடன் அதனைத் தன் சக்தியினால் செய்ததாக எண்ணாமல் அனைத்தும் அல்லாஹ்வின் செயலாகவே காண்பதாகும். இது வணக்கத்தின் அந்தரங்கத்தின் அந்தரங்கமாகும். மேலும் விபரங்களுக்கு தப்ஸீருல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத் அத்தியாம் 2 வசனம் எண் 21ல் காண்க.

ஹளரத் அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பத்து வருட காலம் பணிவிடை புரிந்தார்கள். அதனை நீர் ஏன் செய்தீர்? நீர் ஏன் அதனைச் செய்யவில்லை என்று அவரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டிக்க வில்லை.

கோபத்தை அடக்க விரும்புவோர். கோபம் வரும் போது அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் என்று கூறி

அல்லாஹ்வினிடத்தில் காவல் தேட வேண்டும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

عن عطي رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: إِذَا غَضِبَ أَحَدُكُمْ فَلْيَتَوَضَّأْ. رواه ابو داود.

"உங்களில் ஒருவர் கோபம் கொண்டால் அவர் உளூச் செய்து கொள்ளட்டும்" என்று திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்:- அத்தீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- அபூதாவூத்.

இவ்விரு ஹதீஸ்களின் மூலம் கோபத்தை அடக்கும் முறையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

وفي رواية إِنَّ الْغَضَبَ مِنَ الشَّيْطَانِ.

மற்றோர் ரிவாயத்தில் **கோபம் ஷைத்தானின் செயல் களில் ஒன்றாகும்** என்று கூறப்பட்டிருக்கிறது.

عن أبي ذر رضي الله تعالى عنه قال: إن رسول الله صلى الله عليه وسلم قال لنا: إِذَا غَضِبَ أَحَدُكُمْ وَهُوَ قَائِمٌ فَلْيَجْلِسْ فَإِنْ ذَهَبَ عَنْهُ الْغَضَبُ وَإِلاَّ فَلْيَضْطَجِعْ. رواه ابو داود.

"உங்களில் ஒருவருக்கு நின்ற நிலையில் கோபம் வந்தால் உட்காரவேண்டும். அப்போதும் கோபம் அவரை விட்டு அகல வில்லையெனில் படுத்துக் கொள்ள வேண்டும்" என்று

திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறியிருக் கிறார்கள்.

அறிவிப்பாளர்:- அபூதர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- அபூதாவூத்.

عن أنس بن مالك رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَنْ كَفَّ غَضَبَهُ كَفَّ اللَّهُ تَعَالَى عَنْهُ عَذَابَهُ وَمَنْ خَزَنَ لِسَانَهُ سَتَرَهُ اللَّهُ عَوْرَتَهُ وَمَنِ اعْتَذَرَ إِلَى اللَّهِ قَبِلَ اللَّهُ عُذْرَهُ. رواه احمد.

"தன்னுடைய கோபத்தை எவர் தடுத்துக் கொண்டாரோ அவரை விட்டு அல்லாஹ் தன்னுடைய வேதனையை தடுத்துக் கொண்டான். தன்னுடைய நாவை எவர் அடக்கிக் கொண்டாரோ அவருடைய வெட்கத்தை அல்லாஹ் மறைத்துக் கொண்டான். அல்லாஹ்விடத்தில் எவர் குறையிரந்தாரோ (மன்றாடி வேண்டினாரோ) அவருடைய இரப்பை (மன்றாட்டத்தை) அல்லாஹ் அங்கீகரித்துக் கொண்டான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- அஹ்மத்.

"ஆதமுடைய மகனே, நீ கோபம் கொள்ளும் போது என்னை நினைவுகொள். நான் கோபம் கொள்ளும் போது உன்னை நினைவு கொள்கிறேன். அதனால் அழிகிறவர்களில் உன்னை அழிக்க மாட்டேன்" என்று அல்லாஹ் கூறுகிறான்

(ஹதீஸ் குதுஸீ)

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: أن رسول الله صلى الله عليه وسلم قال: لَيْسَ الشَّدِيْدُ بِالصُّرْعَةِ إِنَّمَا الشَّدِيْدُ الَّذِىْ يَمْلِكُ نَفْسَهُ عِنْدَ الْغَضَبِ. رواه البخاري.

"மல்யுத்தத்தால் வீரனில்லை. எனினும் கோப வேளையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே வீரன்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரி.

عن معاذ بن أنس رضي الله تعالى عنه عن أبيه: أن النبي صلى الله عليه وسلم قال: مَنْ كَظَمَ غَيْظًا وَهُوَ يَقْدِرُ عَلَى أَنْ يُنَفِّذَهُ دَعَاهُ اللّٰهُ عَلَىٰ رُؤُوْسِ الْخَلَائِقِ يَوْمَ الْقِيَامَةِ حَتَّى يُخَيِّرَهُ فِي أَيِّ الْحُوْرِ شَاءَ. رواه الترمذي.

"கோபத்தை பிரயோகிக்க சக்தி இருந்தும் அதனை எவர் அடக்கிக் கொள்கிறாரோ அவரை அல்லாஹ் மறுமையில் படைப்பினங்களுக்கு மத்தியில் அழைத்து நீ விரும்பிய ஹூருல் ஈனைத் தேர்ந்தெடுத்துக் கொள் என்று கூறுவான்" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் முஆத் இப்னு அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு தன் தந்தையிடமிருந்து நூல்:- திர்மிதி.

وقال النبي صلى الله عليه وسلم: مَنْ سَرَّهُ أَنْ يُشْرِفَ لَهُ الْبُنْيَانُ وَتُرْفَعَ لَهُ الدَّرَجَاتُ فَلْيَعْفُ عَمَّنْ ظَلَمَهُ وَلْيُعْطِ مَنْ حَرَمَهُ وَيَصِلْ مَنْ قَطَعَهُ.

"தனக்காக மாளிகை கட்டப்பட வேண்டும். தனக்கு அந்தஸ்துகள் உயர்த்தப்பட வேண்டும் என்பது எவருக்கு மகிழ்ச்சி உண்டாக்குகிறதோ அவர் தனக்கு அநியாயம் செய்தவரை மன்னிக்க வேண்டும், தனக்கு கொடுக்க மறுத்தவருக்குக் கொடுக்க வேண்டும். தன்னை பிரித்துத் தள்ளிய வரை இணைத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். மற்றோர் ஹதீஸில்.

وقال النبي صلى الله عليه وسلم: إِذَا كَانَ يَوْمُ الْقِيَامَةِ نَادَى الْمُنَادِي أَيْنَ الْعَافُوْنَ عَنِ النَّاسِ هَلُمُّوْا إِلَى رَبِّكُمْ وَخُذُوْا أُجُوْرَكُمْ.

"இன்னும், இறுதி நாள் ஏற்படும் போது, மனிதரை மன்னித்தவர்கள் எங்கே? உங்களுடைய ரப்பின்பால் வாருங்கள். உங்களுக்குரிய கூலிகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று அறிக்கையிடுபவர் அறிக்கையிடுவார்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

கோபத்து வேளையில் சாந்தமாக இருப்பதும், தேவையின் போது பொறுமையாக இருப்பதும் மிகச் சிறந்த நற்கிரியைகள் என்று இமாம் ஸுஃப்யானுத் தெளரீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்களும் ஃபுலைலுப்னு இயாள் குத்திஸ ஸிர்ருஹு அவர்களும் கூறியுள்ளார்கள். நம் அனைவருக்கும் அல்லாஹு இவ்வுயரிய பண்பைத் தந்தருள்வானாக. ஆமீன்.

17. பிற உயிரினங்களிடம் இரங்குவீர்

عن ابي يعلى شداد بن اوس رضي الله تعالى عنه عن رسول الله صلى الله عليه وسلم قال: إِنَّ اللَّهَ كَتَبَ الإِحْسَانَ عَلَى كُلِّ شَيْءٍ، فَإِذَا قَتَلْتُمْ فَأَحْسِنُوا الْقِتْلَةَ وَ إِذَا ذَبَحْتُمْ فَأَحْسِنُوا الذِّبْحَةَ وَلْيُحِدَّ أَحَدُكُمْ شَفْرَتَهُ وَلْيُرِحْ ذَبِيحَتَهُ. رواه مسلم.

“ஒவ்வொன்றின் மீதும் அல்லாஹ் இஹ்ஸானை (தயையை) கடமையாக்கி இருக்கிறான். நீங்கள் வெட்டினால் வெட்டில் தயை செய்யுங்கள். நீங்கள் அறுத்தால் அறுவையில் தயை செய்யுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தம்முடைய கூரிய கத்தியை நன்கு பதமாக்கிக் கொண்டு தம்முடைய அறுவைப் பிராணிக்கு சுகத்தைக் கொடுக்க வேண்டும்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூயஃலா ஷத்தாதுப்னு அவ்ஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- முஸ்லிம்.

முற்காலத்தில் அரபியர் போர் செய்தால், தம்மால் கொல்லப்பட்டவர் அடிபட்டு குற்றுயிராகக் கிடக்கும் போதே அவருடைய கால்கள், கைகள், மூக்கு, காதுகள், கண்கள் முதலிய ஒவ்வோர் அங்கத்தையும் வெட்டிவதைப்பதும், அடிபட்டவர் இதனால் வேதனையடைந்து மரிப்பதும் வழக்கம். போரில் காயமடைந்து விழுந்த பின்னர், போரிடும் சக்தியை இழந்து கீழே கிடப்பவரை அங்கஹீனம் செய்து இறக்கச் செய்வது இரக்கமற்ற செய்கை. கருணையற்ற செயல். இதனை மனிதத் தன்மையுள்ள எவரும் நேர்மை என்று கருதமாட்டார். திருமதீனாவுக்கு

அருகிலுள்ள உஹது மலையடிவாரத்தில் மக்கத்து குறைஷியருக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிடையில் நிகழ்ந்த போரில் வஹ்ஷீ என்பவரின் அம்புக்கு இலக்காகி வீழ்ந்த செய்யிதுனா ஹம்ஜாரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் அங்கங்களை துண்டு துண்டாக வெட்டியும் மார்பைப் பிழந்து. ஈரலை எடுத்துக் கடித்துமென்று துப்பிய சம்பவத்தைப் பற்றிய விவரத்தை எம்மால் எழுதப்பட்ட ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் என்ற புத்தகத்திலும் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களைக் குறித்து எழுதப் பெற்ற சரித்திரங்களிலும் காணலாம். அப்போரில் ஒரு முஸ்லிம் வீரர் மட்டும் அங்கஹீனம் செய்யப்படவில்லை. இவரையல்லாமல் வேறு இரண்டு மூன்று முஸ்லிம் வீரர்களும் இப்படிச் செய்யப்பட்டனர். இவற்றையெல்லாம் கருதியே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் நீர் போரில் ஒருவரை ஒருவர் சந்தித்து வெட்டிக் கொண்டாலும் அதிலும் கூட நீங்கள் இஹ்ஸானை அதாவது கருணையை கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இப்படி வருந்துவதை மனிதருக்கு மட்டுமின்றி இதர விலங்கினங்களுக்கும் கூட அரபியர் அக்காலத்தில் செய்து வந்தனர். கூர்மையான கல், மரக்கட்டை, எலும்பு போன்ற பொருட்களால் பிராணிகளையும் பறவைகளையும் வெட்டிச் சதைத்து அவற்றின் மாமிசங்களைப் புசித்துக் கொண்டிருந்தனர். இதனையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டித்து நீங்கள் புசிப்பதற்காக பிராணிகளை அறுத்தால் கூர்மையான பெரிய கத்தியால் அவற்றை விரைவில் அறுத்து விடவேண்டும். அவற்றை வேதனைப் படுத்தாமல் அறுத்து விடவேண்டும் என்று கட்டளை யிட்டுள்ளார்கள். பிக்ஹு என்னும்

மார்க்க சட்ட நூல்களில் அறுவை பற்றிய விவரத்தில் சிறு பறவைகளை அறுப்பதற்கு ஒரு சாண நீளத்திற்கு குறையாத கூர்மையான கத்தியால் அறுக்க வேண்டும். என்றாலும், அறுக்கப்படுகிற பிராணியின் பருமனுக்கு தக்கவாறு பெரும் கத்திகளை உபயோகிக்க வேண்டும். அந்த கத்தியைத் தீட்டி கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும் என்றிருப்பதையும் காணலாம்.

இந்த ஹதீஸில் உதாரணத்திற்கு மட்டும் தான் இரண்டு கூறப்பட்டிருக்கிறது என்று கருதலாகாது. எல்லா விஷயங்களிலும் இஹ்ஸானை (கருணையை) கடைப்பிடிக்க வேண்டும் என்பது இந்த ஹதீஸின் கட்டளையாகும்.

உங்களில் ஒவ்வொருவரும் தலைவர் தம்முடைய தலைமைத்தனத்திற்குட்பட்ட யாவற்றையும் பற்றி விசாரிக்கப் படுவார். ஆடு, மாடு, ஒட்டகைகள் உள்பட கால்நடைகளை வளர்த்து விவசாய வேலையில் ஈடுபடுத்துவோர், குதிரைகளை வைத்துச் சவாரி செய்வோர் அவற்றிற்கு தீவனம் கொடுத்து சரியான முறையில் பராமரிக்க வேண்டும். அவற்றின் சக்திக்கும் மீறி அவற்றிடம் வேலை வாங்கலாகாது. இதனைப் பேணாமல் அதிக வேலை வாங்கினாலும் அவற்றை பட்டினி போட்டாலும் இறுதிநாளில் இறைவன் சமூகத்தில் விசாரணைக்கு உட்படுத்தப் படுவர் என்பது திண்ணம். எனவே, மனிதர் சகல ஜீவன்களிடத்தும் காருண்யமாக நடந்து கொள்ள வேண்டும்.

عن عمرو بن الشريد رضي الله تعالى عنه قال سمعت الشريد يقول: سمعت رسول الله صلى الله عليه وسلم يقول: مَنْ قَتَلَ عُصْفُوْرًا عَبَثًا عَجَّ إِلَى اللهِ عَزَّ وَجَلَّ يَوْمَ الْقِيَامَةِ يَقُوْلُ: يَا رَبِّ إِنَّ فُلَانًا قَتَلَنِيْ عَبَثًا وَلَمْ يَقْتُلْنِيْ لِمَنْفَعَةٍ. رواه النسائي.

"குருவியை எவரேனும் வீணாகக் கொன்றால் அது இறுதி நாளில் அல்லாஹ்விடம் முறையிடும். இவர் ஏன் என்னை வீணாகக் கொன்றார். எந்த பிரயோஜனத்தையும் கருதி என்னை இவர் கொல்லவில்லை. அதனை விசாரித்து நியாயம் வழங்க வேண்டும் எனது ரப்பே என்று கூறும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அம்ரு இப்னு ஷரீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- நஸயீ.

பனூ இஸ்ராயீலுள்ள ஒருவர் எல்லை மீறிய துஷ்டராகவும் பகிரங்கமாக பெரும்பாவங்களைச் செய்பவராகவும் இருந்தார். ஒரு பிரயாணத்தின் போது ஒரு நாய் தாகத்தால் நாக்கைத் தொங்கவிட்டு ஒரு கிணற்றினருகில் தவித்துக் கொண்டிருப்பதை அவர் பார்த்து அதன் மீது இரக்கம் கொண்டு அவர் கிணற்றினுள் இறங்கி தன் கால் மேஜோட்டில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து நாய்க்கு ஊற்றி அதன் தாகத்தை தீர்த்தார். அவருடைய இந்த செய்கையை அல்லாஹ் பாராட்டி அவரை மன்னித்ததுடன் அக்காலத்தில் வாழ்ந்த நபிக்கு என்னுடைய படைப்பின் மீது அவர் கருணை காட்டி உதவியமைக்காக அவரை நான் மன்னித்தேன் என்ற நற்செய்தியை அவருக்கு கூறுமாறு வஹீ அறிவித்தான் என்று சொல்லப் படுகிறது. இதுபோல் ஒரு பெண் தான் வளர்த்த பூனைக்குட்டியை கட்டி வைத்து விட்டு வெளியூர் சென்றவள் பலநாட்களுக்குப் பின்னர் திரும்ப வந்து பார்த்த போது அப்பூனை பசி, தாகத்தால் வருந்திச் செத்துக் கிடந்ததைக் கண்டாள். அவளது ஜீவகாருண்ய மற்ற செய்கைக்காக அவளை அல்லாஹ் நரகில் வேதனை செய்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரு

சம்பவங்களும் கதைகளல்ல. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமஅவர்கள் அறிவித்த ஹதீஸ்கள் என்று ஸஹீஹுல் புகாரியில் கூறப்பட்டிருக்கின்றன.

அஷ்ஷெய்கு அபூபக்கரினிஷ் ஷிப்லீ குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் பிரபலமான ஷெய்கும் மாபெரும் ஒலியுமாவார்கள். ஹளரத் கௌதுல் அஃலம் முஹ்யயத்தீன் அப்துல் காதிரில் ஜீலானி குத்திஸ ஸிர்ருஹு அவர்களின் குரு பாரம்பரியத்தில் ஒருவர். இவர் மரித்த பின்னர் இவருடைய தோழர்களில் ஒருவர் இவரை கனவில் கண்டு அல்லாஹ் தங்களுக்கு என்ன செய்தான் என்று வினவினார். என்னை அல்லாஹ் தனக்கு எதிரில் நிறுத்தி, எதனால் உம்மை நான் மன்னித்தேன் என்பதை நீர் அறிவீரா அபூபக்கரே! என்று வினவினான் என்னுடைய நல்ல காரியங்களுக்காக என்று பதிலளித்தேன் இல்லை என்று அவன் கூறினான். அவ்வாறாயின் என்னுடைய அடிமைத்துவத்தில் நான் அந்தரங்க சுத்தியாக இருந்ததற்காக என்று கூறினேன். அதனையும் இல்லை என்று அவன் நிராகரித்தான். என்னுடைய ஹஜ்ஜு, நோன்பு, தொழுகை ஆகியவற்றால் என்றேன். இவற்றிற்காக உம்மை நான் மன்னிக்கவில்லை. நான் நல்லோர்களுடன் சேர்ந்திருந்ததாலும், தொடர்ந்து நான் பிரயாணம் செய்ததாலும், கல்வியைத் தேடிப் படித்துக் கொண்டதாலும் என்றேன். இதனையும் இல்லை என்று அவன் மறுத்தான். அப்பொழுது நான் எனது ரப்பே எதன் காரணமாக என்னை நீ மன்னித்தாய்? இவைகள் தாம் எனக்கு விமோசனம் அளித்தன என்று நாம் நம்பி இருந்தேன் என்றேன். இவை யாவற்றுக்காகவும் உம்மை நான் மன்னிக்கவில்லை என்றான். அப்பொழுது நான் ''நாயனே பின்னர் எதனால் என்னை

மன்னித்தாய் என்று வினவினேன். அதற்கவன் உனக்கு நினைவிருக்கிறதா? நீ ஒரு நாள் பகுதாது கடைத்தெருவில் சென்று கொண்டிருந்த போது, ஒரு பூனைக்குட்டி பனியின் கொடூரத்தால் நடுங்கிக் கொண்டிருந்ததை நீர் பார்த்து அதன் மீது கருணை கூர்ந்து உன் மீதிருந்த கம்பளித்துணியினுள் அதனைப் பொதிந்து அதனை குளிரை விட்டுக் காப்பாற்றினாய் அல்லவா? என்று வினவினான். நாம் ஆம் என்று பதிலளித்தேன். அந்தப் பூனைக்குட்டிக்கு நீ கருணை காட்டியதால் உமக்கு நாம் கருணை புரிந்தோம்'' என்றான் என்று பதிலளித்தார்.

குறிப்பிட்ட ஒரு நபர் கனவில் உரையாடிய விஷயம்தான் இது. சாமான்யரின் கனவுகள் வஹீ அல்ல. இவை போன்றவை மார்க்கச் சட்டமல்ல. இக்கனவை மற்றவர்கள் ஏற்று அதன்படி நடக்க வேண்டும் என்பது கடமையல்ல. என்றாலும், ஜீவகாருண் யத்திற்கு இறைவன் சமூகத்தில் எவ்வளவு ஏற்றமுண்டு என்பதை புரிந்து கொள்வதற்கு இக்கனவு ஓர் நல்ல உதாரணமாகும். தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு போன்றவை இறைவன் கடமை யாக்கியவைகள். இவற்றை செய்யாதிருந்தால் இறைவனின் கட்டளையை அலட்சியப் படுத்திய குற்றமாகக் கருதப்படும். அத்துடன் தன் கடமையை விட்டு விலகிய குற்றமும் ஏற்படும். இவற்றை நிறைவேற்றினால் கடமையை நிறைவேற்றியவன் குற்றவாளியல்ல என்ற பேறு மட்டும்தான் ஏற்படும். அவனுடைய கிருபையை அடைவதற்கு இவற்றை மட்டும் செய்வது போதுமான தல்ல. வேறு காரியங்களையும் செய்ய வேண்டும். அவற்றில் ஒன்றுதான் ஜீவகாருண்யம்.

ஜீவகாருண்யம் மனிதர்கள் தங்களுக்குள் மட்டும் கடைப்பிடிக்க வேண்டிய காரியமல்ல. பறவைகள், விலங்குகள்

உள்பட சகல உயிர்ப் பிராணிகளிடத்திலும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய காரியம். மனிதனின் உபயோகத்திற்குத்தான் அவை படைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நன்கு பராமரித்து முறைப்படி உபயோகிக்க வேண்டும். தேவையில்லாமல் அனாவசியமாக அவற்றிற்கு துன்பம் இழைக்கலாகாது. மரங்களின் இலையைக் கூட ஸஹாபிகள் அனாவசியமாக பறிக்க மாட்டார்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் ஜீவகாருண்யத்தை முறைப்படி கடைப்பிடிக்க நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்.

18. நற்குணம்

عن أبي ذر جندب بن جنادة وابي عبد الرحمن معاذ بن جبل رضي الله تعالى عنهما عن رسول الله صلى الله عليه وسلم قال: اِتَّقِ اللهَ حَيْثُمَا كُنْتَ وَاتْبِعِ السَّيِّئَةَ الْحَسَنَةَ تَمْحُهَا وَ خَالِقِ النَّاسَ بِخُلُقٍ حَسَنٍ. رواه الترمذي.

"எங்கு நீ இருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள். தீமைக்குப் பின்னர் நன்மையைத் தொடரச் செய். அதனை அது அழித்துவிடும். நற்குணத்துடன் மக்களிடம் பழகு" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அபூதர் ஜுன்துப்னு ஜுனாதா, அபூ அப்திர் ரஹ்மான் முஆதுப்னு ஜபல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- திர்மிதீ.

இந்த ஹதீஸை ரிவாயத்துச் செய்பவரான அபூதர்ருடைய வணக்கங்களைக் குறித்து அவருடைய தாயாரிடம் கேட்கப்பட்டது. அவர் பகல் காலத்தில் ஒரு மூலையில் ஒதுங்கி இருந்து சிந்தித்துக் கொண்டிருப்பார் என்று அவருடைய தாயார் பதிலளித்தார்.

ஹளரத் அபூதர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஒரு ஊருக்குச் சென்றார்கள். அவரை அங்கு உள்ளவர்கள் கூட்டமாகச் சேர்ந்து வரவேற்றனர். அவர்களுக்கு அவர் உபதேசம் செய்கையில் உங்களில் ஒருவர் வெளியூருக்கு பிரயாணம் செய்தால் தன்னுடைய வழிப்பயணத்துக்குத் தேவையான கட்டுச் சாதத்தை எடுத்துக் கொள்வதில்லையா?

என்று வினவினார். ஆம் என்று அவர்கள் பதிலளித்தனர். அப்புறம் அவர் கியாமத்து நாளுக்குரிய பயணம் இவ்வுலகில் நீங்கள் செய்யும் பயணங்களைக் காட்டினும் மிக தூரமானது. ஆதலின், அந்தப் பயணத்திற்குத் தேவையானதை இங்கேயே நீங்கள் சித்தம் செய்து கொள்ள வேண்டும். எங்களுக்கு தேவையான கட்டுச் சாதம் எது? என்று அவர்கள் வினவினர். அதற்கவர் பெருங்காரியங்களை சாதிக்க ஒரு ஹஜ்ஜை நிறைவேற்றுங்கள், விசாரணைக்கு எழுப்பப்படும் நாளின் நீளத்தை சகித்துக் கொள்ள கடும் வேனலில் ஒரு நாள் நோன்பு நோறுங்கள். கப்ரின் வெறுமையை தாங்கிக் கொள்வதற்காக இரவின் இருளில் இரண்டு ரக்கஅத்துத் தொழுங்கள். மகத்தான நாளில் நிற்பதைப் பொருந்திக் கொள்ள நல்ல வார்த்தையைக் கூறுங்கள் அல்லது தீய வார்த்தையைக் கூறாமல் இருங்கள். உனது பொருளைக் கொண்டு தர்மம் செய். நீ ஈடேற்றம் பெறுவதற்காக இந்த உலகை இரண்டு பகுதியாக பிரித்துக் கொள். ஹலாலை சம்பாதிப்பதற்காக ஒரு பகுதியையும் மறுமையை சம்பாதிப்பதற்காக ஒரு பகுதியையும் வைத்துக் கொள். மூன்றாவது பகுதி உனக்கு நன்மையையும் செய்யாது தீமையையும் செய்யாது. இதனை மறுத்து விடாதே. உன் சொத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றை உன் குடும்பத்திற்கு ஹலாலான முறையில் செலவு செய். மற்றொன்றை உனது மறுமைக்காகச் செலவு செய். மற்றது உனக்கு தீமையையோ நன்மையையோ செய்யாது. இதனை மறுத்திடாதே என்று கூறினார். அபூதர்ரில் கிபாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் இம்மகத்தான உபதேசத்தை நன்கு சிந்தித்து கடைப்பிடித்தொழுக ரஹ்மான் உதவி புரிவானாக.

عن أنس رضي الله تعالى عنه قال: أن معاذ بن جبل رضي الله تعالى عنه دخل رسول الله صلى الله عليه وسلم فقال: كَيْفَ أَصْبَحْتَ يَا مُعَاذُ؟ قَالَ: أَصْبَحْتُ مُؤْمِنًا بِاللّٰهِ تَعَالَى قَالَ: إِنَّ لِكُلِّ قَوْلٍ مِصْدَاقًا وَلِكُلِّ حَقٍّ حَقِيقَةً فَمَا مِصْدَاقُ مَا تَقُولُ؟ قَالَ: يَا نَبِيَّ اللّٰهِ مَا أَصْبَحْتُ صَبَاحًا قَطُّ إِلَّا ظَنَنْتُ أَنِّي لَا أُمْسِي وَمَا أَمْسَيْتُ مَسَاءً قَطُّ إِلَّا ظَنَنْتُ أَنِّي لَا أُصْبِحُ وَلَا خَطَوْتُ خَطْوَةً إِلَّا ظَنَنْتُ أَنِّي لَا أُتْبِعُهَا أُخْرَى وَكَأَنِّي أَنْظُرُ إِلَى كُلِّ أُمَّةٍ جَاثِيَةٍ تُدْعَى إِلَى كِتَابِهَا مَعَهَا نَبِيُّهَا وَأَوْثَانُهَا الَّتِي كَانَتْ تَعْبُدُ مِنْ دُونِ اللّٰهِ وَكَأَنِّي أَنْظُرُ إِلَى عُقُوبَةِ أَهْلِ النَّارِ وَثَوَابِ أَهْلِ الْجَنَّةِ قَالَ: عَرَفْتَ فَالْزَمْ. في كتاب حلية الأولياء.

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் (ஒருநாள்) முஆதுப்னு ஜபல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வந்தார். எவ்வாறு துயிலெழுந்தீர் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள். அல்லாஹ்வை விசுவாசித்தவனாக துயிலெழுந்தேன் என்று அவர் பதிலளித்தார். ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு ஆதாரமுண்டு. ஒவ்வொரு கடமைக்கும் ஒரு அகமியமுண்டு. நீர் சொன்னதற்கு என்ன ஆதாரம் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள். அதற்கவர் அல்லாஹ்வின் ரசூலே, நான் மாலை வரையில் உயிருடனிருக்க மாட்டேன் என்ற எண்ணத்துடன் அல்லாமல் நான் துயிலெழுந்ததே இல்லை. இதுபோல நான் காலை வரையில் நான் உயிருடனிருக்க மாட்டேன் என்ற எண்ணத்துடன் அல்லாமல் மாலையில் நான்

(படுக்கைக்குச் சென்றதே) இல்லை. நான் (நடக்கும் போது) இன்னொரு அடி எடுத்து வைக்க முடியாது என்று எண்ணாமல் நான் ஒரு அடியும் எடுத்து வைத்து நடந்ததில்லை. ஒவ்வொரு உம்மத்தும் (வர்க்கமும் விசாரணைக்கு) எழுப்பப்பட்டு அந்த ஒவ்வொரு உம்மத்தும் அதற்குரிய பட்டோலையின் பாலும் அந்த உம்மத்துக்குரிய நபியும், அவர்கள் அல்லாஹ்வையன்றி வணங்கிக் கொண்டிருந்த விக்கிரஹங்களும் அவர்களுடன் அழைக்கப் படுவதையும் நான் பிரத்தியட்சமாக பார்ப்பது போல எனக்கிருக்கிறது. நரகவாதிகள் தண்டனையின் பாலும், சுவர்க்கவாதிகள் நன்மையின் பாலும் செல்வதை நான் பார்ப்பது போலிருக்கிறது என்று கூறினார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்" அவர்கள் நீர் புரிந்து கொண்டீர். இதிலேயே நிரந்தரமாக இரும் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
நூல்:- ஹில்யத்துல் அவ்லியா

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமக்காவில் இஸ்லாமிய பிரசாரம் செய்வதைக் கேள்விப்பட்ட அபூதர்ரில் கிபாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் விஷயத்தை நன்கு தெரிந்து வந்து தகவல் தெரிவிக்குமாறு தம்முடைய சகோதரரை திருமக்காவிற்கு அனுப்பி வைத்தார். அவர் இங்கு வந்து சில நாட்கள் தங்கி இருந்து விட்டு தம்முடைய சகோதரரிடம் திரும்பச் சென்று தகவல் அறிவித்தார். அவர் அறிவித்த தகவல் அவருக்கு பூரணதிருப்தியளிக்காமல் அவரே திருமக்காவிற்கு நேரில் வந்து பல நாட்கள் தங்கி இருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களை நேரில் சந்தித்து இஸ்லாத்தைத் தழுவி மேலும் சில நாட்கள் தங்கி சன்மார்க்கத்தைக்

கற்றுக் கொண்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டுப் பிரிந்து செல்ல அவருக்கு மனமில்லை. என்றாலும் தம்முடைய சமூகத்தாரிடம் அவர் சன்மார்க்க பிரசாரம் செய்யட்டும் என்பதற்காக அவரை அனுப்பி வைத்தபோது அவருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் அல்லாஹ் ஏவிய கட்டளைகளை நிறைவேற்றுவதும், அவன் விலக்கியவற்றை விட்டு விலகிக் கொள்வதும் தான் வயது வந்த மனிதனின் கடமை. இதனை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நிறைவேற்ற வேண்டும். திருமக்காவிலேயே தங்கி தன் காரியத்தை மட்டும் நிறைவேற்றிக் கொள்வதைப் பார்க்கினும் தன் சொந்த ஊரிலும் வேறிடங்களும் சென்று தன்னாலியன்ற வரையில் மற்றவர்களுக்கு உணர்த்தி அவர்களை நல்வழிக்கு ஆளாக்குவது சிறந்தது என்ற கருத்தை

நீர் எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள் என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறி விளங்க வைத்தார்கள். நாம் எங்கிருந்தாலும் நம்முடன் அல்லாஹ்வும் இருக்கிறான். அவன் எங்கும் நிறைந்தவன். ஊண் உறக்கமற்றவன். அசதி மறதி இல்லாதவன். நம்மை அவன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். நம்முடைய புறச் செய்கையை மட்டுமின்றி நம்முடைய எண்ணங்கள் உள்பட சகல அகச் செய்கைகளையும் பூரணமாக உணர்ந்தவன். அவனையன்றி எதையும் நாம் செய்ய இயலாது என்பதையும் இவ்வுபதேசம் உணர்த்துகிறது.

ஹில்யத்துல் அவ்லியா என்னும் இந்நூலை ஹாபிஜுல் கபீர் அபூநுஅம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றி நைசாப்பூர் கொண்டு சென்றபோது அவ்வூர் மக்கள் அவரை வரவேற்று நூல் ஒன்றுக்கு ஆயிரத்து இருநூறு திர்ஹம் கொடுத்து அனைத்து நூல்களையும் வாங்கிக் கொண்டனர். மொழி பெயர்ப்பாசிரியரின் புதல்வர்.

عن أبي سعيد الخدري رضي الله تعالى عنه قال: جَاءَ رَجُلٌ إِلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَقَالَ: يَا رَسُولَ اللهِ أَوْصِنِي قَالَ: عَلَيْكَ بِتَقْوَى اللهِ فَإِنَّهُ جِمَاعُ كُلِّ خَيْرٍ عَلَيْكَ بِالْجِهَادِ فَإِنَّهُ رَهْبَانِيَّةُ الْمُسْلِمِينَ عَلَيْكَ بِذِكْرِ اللهِ وَتِلَاوَةِ كِتَابِهِ فَإِنَّهُ نُورٌ لَكَ فِي الْأَرْضِ وَذِكْرٌ لَكَ فِي السَّمَاءِ وَاخْزُنْ لِسَانَكَ إِلَّا مِنْ خَيْرٍ فَإِنَّكَ بِذَلِكَ تَغْلِبُ الشَّيْطَانَ. رواه مسند أبي يعلى.

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒருவர் வந்து தனக்கு உபதேசம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கவர்கள் நீ தக்வாவை (பயபக்தியை)ப் பற்றிப் பிடித்துக்கொள். அது சகல நல்லவற்றையும் தன்னுள் பொதிந்திருக்கிறது, ஜிஹாதை (சன்மார்க்கத்திற்காக உழைத்தல்) பற்றிப் பிடித்துக் கொள். அது முஸ்லிம்களுக்கு துறவறம். அல்லாஹ்வின் திக்ரை பற்றிப்பிடித்துக் கொள். அது இப்பூமண்டலத்தில் உனக்கு வெளிச்சம். வானில் உனக்கு கீர்த்தி. நல்ல காரியத்திலேயே உன் நாவை கட்டுப் படுத்திக் கொள். இதன் மூலம் ஷைத்தானை நீ மிகைத்து விடுவாய்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஸயீதுல் குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு   நூல்:- முஸ்னத் அபூயஃலா

தக்வா என்னும் பயபக்தி ஒருவரிடமிருந்தால் அவர் தீமையை ஒருபோதும் செய்யார். இதனால் அவருக்கு எந்தக் கெடுதலும் வராது. நன்மையானவற்றையே அவர் செய்வார். இதனால் அவருக்கு நலமே விளையும். எனவே, தக்வா என்னும் பயபக்தி சகல நலன்களையும் பொதிந்தது என்று கூறப்பட்டது.

مَنِ اتَّقَى اللهَ عَاشَ قَوِيًّا وَسَارَ فِي بِلَادِهِ آمِنًا.

"எவர் அல்லாஹ்வை அஞ்சுகிறாரோ அவர் பலவானாகவே வாழ்வார். அவனுடைய நாடுகளில் அச்சமற்றவராக பயணம் செய்வார்" என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்தார்கள்.

وَقَالَ وَهْبٌ رحمة الله عليه اَلْإِيمَانُ عُرْيَانٌ وَلِبَاسُهُ التَّقْوَى وَزِينَتُهُ الْحَيَاءُ وَرَأْسُ مَالِهِ الْعِفَّةُ.

"ஈமான் என்பது நிர்வாணியாக இருக்கிறது. அதற்கு உடை தக்வாதான். அதன் ஆபரணம் (அலங்காரம்) நாணம். அதனுடைய மூலதனம் பேணுதல் (பத்தினித்தனம்)" என்று வஹ்பு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்.

தக்வா என்பது சன்மார்க்கக் கட்டளைகளை மனப்பூர்வமாக ஏற்று நடப்பதும், சன்மார்க்கம் விலக்கியவற்றைச் செய்யாமல் விலகிக் கொள்வதும் தான்.

அல்லாஹ்விற்கு மாறு செய்ய (பாவம் செய்ய) நீ நாடினால் உன்னை அவன் பார்க்காத விதமாக பாவத்தைச் செய்து கொள் அல்லது அவன் படைத்துள்ள இவ்வுலகை விட்டு

வெளியேறிச் சென்று உன் விருப்பப்படி பாவத்தைச் செய்து கொள்ளலாம் அல்லது அவன் படைத்து தந்தள்ள உணவை துறந்துவிட்டு வேறு ஒருவரின் உணவைச் சாப்பிட்டுக் கொண்டு உன் விருப்பப்படி பாவம் செய்யலாம் என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். அல்லாஹ்வுக்கு எவர் பயபக்தி செலுத்தி அவன் ஏவியதைச் செய்து விலக்கியதை தவிர்த்துக் கொள்கிறாரோ அவர் சன்மார்க்க நெறியை முழுமையாக தழுவியவராகி விடுகிறார் என்று சன்மார்க்க அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்.

قال الله تعالى: ليس البر أن تولوا وجوهكم قبل المشرق والمغرب
ولكن البر من آمن بالله واليوم الأخر،

"கிழக்கிலும் மேற்கிலும், மட்டும் உங்கள் முகங்களை திருப்புவது நன்றியில்லை. எனினும் மெய்யான நன்றி அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசம் கொண்டவர் தான்" (2:177) என்று அல்லாஹ் தன்னுடைய திருமறையில் கூறியுள்ளான்.

وقال الله تعالى: ألا إن اولياء الله لا خوف عليهم ولا هم يحزنون
الذين وكانوا يتقون.

"அறிந்துகொள்! நிச்சயமாக அல்லாஹ்வின் ஒலிமார்கள் அவர்களுக்கு (மறுமையில்) பயமுமில்லை: அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள் என்றும் அவர்கள் விசுவாசம் கொண்டு தக்வாவை கடைப்பிடித்தவர்கள் (10:63,64) என்றும் அல்லாஹ் தன்னுடைய திருமறையில் கூறியுள்ளான்.

முதல் ஆயத்தில் கண்டவாறு ஈமான் இஸ்லாமைக் கடைப்பிடித்து தக்வாவை பற்றிப் பிடிக்கிறாரோ அவர்

முத்தக்கீயாவார். அவர் அல்லாஹ்வின் ஒலி. இரண்டாவது ஆயத்தில் கண்டவாறு எவர் தக்வாவை கடைப்பிடிக்கிறாரோ அவர் ஒலிமார்களில் ஒருவராகக் கருதப்படுவார். தக்வாவை கடைப்பிடிப்பதால் அநேக நன்மைகள் ஏற்படுகின்றன.

وإن تصبروا وتتقوا لا يضركم كيدهم شيئا.

1. **"நீங்கள் பொறுமையாக இரந்து தக்வாவை கடைப்பிடிப்பீர்களாயின் அவர்களுடைய சதி உங்களுக்கு எந்தத் தீமையையும் செய்து விடாது"** (3:120) என்று அல்லாஹ் கூறியுள்ள இந்த ஆயத்தின்படி ஒருவரிடத்தில் பொறுமையும் தக்வாவும் இருப்பின் பிறரால் தீங்கு ஏற்படாத விதத்தில் பாதுகாப்புக் கிடைக்கும்.

إن الله مع الذين اتقوا والذين هم محسنون.

2. **தக்வாவை கடைப்பிடித்து, இன்னும் நற்காரியங் களைச் செய்பவர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கிறான் (16:128)** என்ற இந்த ஆயத்தின்படி தக்வாவை நல்லவிதமாக கடைப்பிடித்தொழுவோருக்கு இறையின் உதவியும் ஆதரவும் இருக்கிறது.

ومن يتق الله يجعل له مخرجا ويرزقه من حيث لا يحتسب

3. **எவர் தக்வாவை கடைப்பிடிக்கிறாரோ அவருக்குச் விமோசனத்தை அவன் ஏற்படுத்தி, அவர் அறியாத விதத்தில் அவருக்கு (சம்பத்து) அளிப்பான் (65:2,3)** என்ற இந்த ஆயத்தின் மூலம் தக்வாவுள்ளவர் கஷ்டங்களிலிருந்து விடுதலையடைவார் ஹலாலான பொருள்களை அடைவார் என்று அறிவிக்கப் படுகிறது.

اتقوا الله وقولوا قولا سديدا يصلح لكم أعمالكم ويغفر لكم ذنوبكم

4. அல்லாஹ்வுக்கு தக்வா செய்து நேர்மையான சொல்லைச் சொல்லுங்கள் உங்களது செயல்களை உங்களுக்கு திருத்துவான். இன்னும் உங்களுடைய குற்றங்களை உங்களுக்கு மன்னிப்பான் (33:70,71) என்ற இவ்வாயத்தின் மூலம் தக்வாவை கடைப்பிடிப்பவருக்கு பாவமன்னிப்பும் செயல் திருத்தமும் ஏற்படுகிறது.

يا أيها الذين آمنوا اتقوا الله وآمنوا برسوله يؤتكم كفلين من رحمته ويجعل لكم نورا تمشون به

5. விசுவாசங் கொண்டவர்களே, அல்லாஹ்வுக்கு பயபக்தியாயிருந்து அவனுடைய ரசூலை விசுவாசியுங்கள். தன்னுடைய ரஹ்மத் என்னும் கருணையிலிருந்து உங்களுக்கு இருமடங்கு தருவான். இன்னும் உங்களுக்கு நூர் என்னும் பிரகாசத்தை ஏற்படுத்துவான். அதனைக் கொண்டு (சன்மார்க்க வழியில்) நடப்பீர்கள் (57:28) என்ற இந்த ஆயத்தின் மூலம் சன்மார்க்கப் பாதையில் சரியாக நடப்பதற்குரிய அகப் பிரசாரமான மனத்தெளிவு ஏற்படுகிறது. சிருஷ்டி என்ற முறையில் இறைவன் கிருபையும் தக்வாதாரி என்ற முறையில் ஒன்றும் ஆக இருமடங்கு கிடைக்கிறது.

إن الله يحب المتقين.

6. நிச்சயமாக அல்லாஹ் தக்வாவுள்ளவர்களை நேசிக்கிறான் (9:4) என்ற இவ்வாயத்தின் மூலம் அல்லாஹ்வை அஞ்சி பக்தியுடன் நடப்பவரை அவன் நேசிக்கிறான். அவனுடைய அன்பும் நீதியும் அவ்வடியானுக்கு கிடைக்கிறது.

إن اكرمكم عند الله أتقاكم.

7. அல்லாஹ்விடத்தில் உங்களுள் மிகக் கண்ணியம் பெறுகிறவர் உங்களிலுள்ள மிக தக்வாதாரி தான் (49:11) என்ற ஆயத்திலிருந்து தக்வாவுள்ளவருக்கு அவனிடத்தில் கண்ணியம் கிடைக்கிறது.

الذين آمنوا وكانوا يتقون لهم البشرى في الحياة الدنيا وفي الآخرة.

8. ஈமான் கொண்டு பயபக்தியுமுள்ளவர்களாக இருந்தார்களே அவர்களுக்கு இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் நற்செய்தி இருக்கிறது (10:63,64) என்ற இந்த ஆயத்தின் மூலம் மறுமையில் அவர்களின் வாழ்வின் சிறப்பு பற்றிய நற்செய்தி அவர்கள் மரிப்பதற்கு முன்னர் இவ்வுலக வாழ்வின் போதே அறிவிக்கப்படும். அவர்களுக்கு என்று சுவர்க்கத்தில் சித்தம் செய்யப்பட்டிருக்கிற இடத்தில் பிரவேசிக்கும் போதும் அவர்களுக்கு வானவர்களால் நற்செய்தி கூறப்படும்.

ثم ننجي الذين اتقوا

9. பின்னர், தக்வாவை கடைப்பிடித்தார்களே அவர்களுக்கு நாம் ஈடேற்றமளிப்போம் (19:72) என்ற ஆயத்தின் மூலம் தக்வா உள்ளவர்களுக்கு இம்மை மறுமை இரண்டிலும் ஈடேற்றம் இருக்கிறது.

وسارعوا إلى مغفرة من ربكم وجنة عرضها السماوات والأرض أعدت للمتقين.

10. உங்களுடைய ரப்பில் நின்றுமுள்ள மன்னிப்பின் பாலும் சுவர்க்கத்தின் பாலும் விரைந்து செல்லுங்கள். அதன் விஸ்தீரணம் வான்களும் புவியுமாகும். தக்வாவுள்ளவர் களுக்கென இது தயார் செய்யப்பட்டிருக்கிறது. (3:133)

தக்வா உள்ளவர்களுக்கு இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் இறைவனால் கொடுக்கப்பட இருக்கிற அருட் கொடைகள் இப்பத்து ஆயத்துகளிலும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தவிர அவர்கள் அடைய இருக்கிற அருட்கொடைகள் பற்றிய ஆயத்துகளும் ஹதீஸ்களும் ஏராளமாயிருக்கின்றன.

ஒரு முஸ்லிம் வியாபாரி தம் கடையில் சாமான் வாங்க வந்த ஒரு பெண்ணை கட்டி ஆலிங்கனம் செய்து முத்தமிட்டார். பின்னர் தம்முடைய அடாத செய்கையை நினைத்து வருந்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து நடந்த காரியத்தைக் கூறி இதற்கு ஏதேனும் பரிகாரமுண்டா என்று வினவினார். இறைவனிடமிருந்து தகவல் வராமல் மார்க்கம் சம்பந்தமான எக்காரியத்திற்கும் தங்கள் யுக்திப் படி பதிலளிப்பது வழக்கமில்லாததால், இறைவனின் தகவலை எதிர்பார்த்து மௌனமாக இருந்தார்கள். அப்பொழுது இறைவன்.

واقم الصلاة طرفي النهار وزلفا من الليل إن الحسنات يذهبن السيئات.

பகலில் இருமருங்குகளிலும் இரவில் ஒரு பகுதியிலும் தொழுகையை நிறைவேற்றுவீராக. நிச்சயமாக நன்மைகள் தீமைகளைப் போக்குகின்றன. (11:114) என்ற ஆயத்தை இறைவன் அருளினான். எனவே, இந்த ஹதீஸில் கண்டவாறு

பாவம் செய்தால் உடனே தவ்பா செய்ய வேண்டும். குறைந்த பட்சம் அதற்குப் பதிலாக நன்மையான காரியங்களைச் செய்ய வேண்டும்.

واتبع السيئة الحسنة تمحوها.

தீமையை நன்மை தொடரச் செய் என்ற இவ்வாசகத்தில் தீமை என்ற வார்த்தை பாவச் செயலையும் நன்மை என்ற வார்த்தை தொழுகையையும் குறிக்கும். இத்தொழுகையைக் குறித்து அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா தன்னுடைய திருமறையில்,

واقم الصلاة طرفي النهار وزلفا من الليل إن الحسنات يذهبن السيئات.

பகலின் இருமருங்கிலும், இரவில் ஒரு பகுதியிலும் தொழுகையை நிறைவேற்றுவீராக. நிச்சயமாக நல்லவைகள் தீயவைகளைப் போக்கடித்து விடும் (11.114) என்று கூறியுள்ளான். இந்த ஆயத்து அருளப்பட்ட சந்தர்ப்பம் ஒரு வியாபாரியின் செய்கைக்காக இருந்த போதினும் அந்த ஒருவருக்கு மட்டிலும் இது விதியல்ல. இந்த விதி யாவருக்கும் பொதுவானது. எனவே, தீமையை, பாவமான காரியத்தைச் செய்தவர் தொழுகையை நிறைவேற்றி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அப்பாவம் மன்னிக்கப்படும் என்பது கருத்து.

وقال صلى الله عليه وسلم: اَلصَّلَوٰاتُ الْخَمْسُ وَالْجُمْعَةُ إِلَى الْجُمْعَةِ وَرَمَضَانُ إِلَى رَمَضَانَ مُكَفِّرَاتٌ لِمَا بَيْنَهُنَّ مَا اجْتُنِبَتِ الْكَبَائِرُ.

ஐங்காலத் தொழுகைகளும், ஒரு ஜும்ஆவிலிருந்து இன்னொரு ஜும்ஆ வரையிலும் ஒரு ரமளானிலிருந்து இன்னொரு ரமலான் வரையிலும், பெரும்பாவங்களைத் தவிர்த்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம் தங்களுக்கு இடையிலுள்ளவை (களான சிறு பாவங்) களைப் பரிகரித்து விடும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: أن رسول الله صلى الله عليه وسلم قال: أَرَأَيْتُمْ لَوْ أَنَّ نَهْرًا بِبَابِ أَحَدِكُمْ يَغْتَسِلُ مِنْهُ كُلَّ يَوْمٍ خَمْسَ مَرَّاتٍ هَلْ يَبْقَى مِنْ دَرَنِهِ شَيْءٌ قَالُوْا لَا يَبْقَى مِنْ دَرَنِهِ شَيْءٌ قَالَ: فَذَلِكَ الصَّلَوَاتُ الْخَمْسُ يَمْحُوا اللهُ بِهِنَّ الْخَطَايَا. رواه مسلم والترمذي. لفظ الترمذي.

"உங்களில் ஒருவருடைய தலைவாயலில் ஒரு ஆறு இருந்து ஒவ்வொரு நாளும் அதில் ஐந்து முறை அவர் நீராடிக் கொண்டிருந்தால், அவருடைய அழுக்கில் ஏதாவது (எஞ்சி) இருக்குமா? கூறுங்கள் என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள். அவருடைய அழுக்கில் எதுவும் எஞ்சி இருக்காது என்று (ஸஹாபிகள்) பதிலளித்தார்கள். இவ்விதமாகத்தான் ஐங்காலத் தொழுகைகளும், இவற்றைக் கொண்டு தவறுகளை அல்லாஹ் மன்னிக்கிறான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- முஸ்லிம், திர்மிதீ

عن الحارث مولى عثمان يقول جلس عثمان يوما وجلسنا معه فجاء المؤذن فدعا بماء في إناء اظنه سيكون فيه مد فتوضا ثم قال: رَأَيْتُ رسول الله صلى الله عليه وسلم يَتَوَضَّأُ وُضُوْئِي هذا ثُمَّ قَالَ: وَمَنْ تَوَضَّأَ وُضُوْئِي ثُمَّ قَامَ فَصَلَّى صَلَاةَ الظُّهْرِ غُفِرَ لَهُ مَا كَانَ بَيْنَهَا وَبَيْنَ الصُّبْحِ ثُمَّ صَلَّى الْعَصْرَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ الظُّهْرِ ثُمَّ صَلَّى الْمَغْرِبَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ الْعَصْرِ ثُمَّ صَلَّى الْعِشَاءَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ الْمَغْرِبِ ثُمَّ لَعَلَّهُ أَنْ يَبِيْتَ يَتَمَرَّغُ لَيْلَتَهُ ثُمَّ إِنْ قَامَ فَتَوَضَّأَ وَصَلَّى الصُّبْحَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ الْعِشَاءِ وَهُنَّ الْحَسَنَاتُ يُذْهِبْنَ السَّيِّئَاتِ. رواه احمد.

"ஹளரத் உத்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் அடிமையான அல்ஹாரித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள். ஒரு நாள் உத்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அமர்ந்தார்கள். நாங்களும் அவருடன் அமர்ந்தோம். தொழுகைக்காக அழைப்பவர் (முஅத்தின்) வந்தார். அவரை அழைத்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். அதில் ஒரு முத்து அளவு தண்ணீர் இருந்தது எனக் கருதுகிறேன். (ஒரு முத்து என்பது இரண்டு கைகளையும் சேர்த்து அள்ளக்கூடிய அளவாகும்). அதிலிருந்து உளூச் செய்தார்கள். பின்னர் என்னுடைய இந்த உளூவைப் போல் எவர் உளூச் செய்து லுஹர் தொழுகையை நிறைவேற்றினாராயின் அந்த தொழுகைக்கும் ஸுப்ஹு தொழுகைக்கு மிடையிலுள்ளது அவருக்கு மன்னிக்கப்படும். பின்னர் அஸரைத் தொழுவாராயின்

அதற்கும் ளுஹர் தொழுகைக்குமிடையில் உள்ளது அவருக்கு மன்னிக்கப்படும். பின்னர் அஸரைத் தொழுவாராயின் அதற்கும் ளுஹர் தொழுகைக்குமிடையில் உள்ளது அவருக்கு மன்னிக்கப் படும். பின்னர் மஃரிபு தொழுவாராயின் அதற்கும் அஸருக்கு மிடையிலுள்ளது அவருக்கு மன்னிக்கப்படும். பின்னர் இஷா தொழுவாராயின் அதற்கும் மகுரிபுத் தொழுகைக்குமிடையில் உள்ளது மன்னிக்கப்படும், பின்னர் அவர் தூங்கக் கூடும். பின்னர் அவர் துயிலெழுந்து உளூச் செய்து ஸுப்ஹு தொழுதாராயின் அதற்கும் இஷா தொழுகைக்கும் இடையில் உள்ளது மன்னிக்கப் படும் என்று கூறி விட்டு இவைகள் தாம் நற்செயல்கள் தீமைகளைப் போக்கி விடும் என்று கூறினார்கள் இந்நற்கிரியைகள் தவிர வேறு நற்செயல்கள் எது எனக் கேட்டார்கள். லா இலாஹ இல்லல்லாஹு வசுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வல்லாஹு அக்பர் வலா ஹெளல வலா குவ்வத இல்லா பில்லாஹ்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஹளரத் அல்ஹாரிஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- திர்மிதீ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஸ்ஜிதிலிருந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களைச் சுற்றிலும் அமர்ந்து கொண்டு இருந்தோம். அப்பொழுது அங்கொருவர் வந்து யா ரசூலல்லாஹ் நான் ஹத்துக்குரிய குற்றம் செய்துள்ளேன். எனக்கு ஹத்துக்குரிய தண்டனையை அளியுங்கள் என்று வேண்டிக் கொண்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்கள். மறுபடியும் அவர் யா ரசூலல்லாஹ் நான் ஹத்துக்குரிய குற்றத்தை செய்துள்ளேன். எனக்கு ஹத்துக்குரிய

தண்டனையை அளியுங்கள் என்று வேண்டினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்கள். பின்னர், மீண்டும் அவர் யா ரசூலல்லாஹ் நான் ஹத்துக்குரிய குற்றத்தைச் செய்துள்ளேன். எனக்கு ஹத்து தண்டனையை அறிவியுங்கள் என்று வேண்டினார். அதற்கவர்கள் பதிலுரைக்காமல் மௌனமாக இருந்தார்கள். பின்னர், தொழுகை நடந்தது. தொழுது முடிந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீடு திரும்பினார்கள். அந்த மனிதரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின் தொடர்ந்தார். என்ன நடக்கிறது என்று அறிய நானும் அவர்களைப் பின் தொடர்ந்தேன்.

அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருகில் சென்று யா ரசூலல்லாஹ் நான் ஹத்துக்குரிய குற்றத்தைச் செய்துள்ளேன் எனக்கு ஹத்து தண்டனையை அளியுங்கள் என்று வேண்டினார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீர் உளூச் செய்தீரா? சிறப்பான முறையில் அதனைச் செய்தீரா? என்று வினவினார்கள். அதற்கவர் ஆம் யா ரசூலல்லாஹ் என்றார். பின்னர், நம்முடன் தொழுகையில் சேர்ந்து கொண்டீரா? என்று வினவினார்கள். அதற்கவர் ஆம் யாரஸூலல்லாஹ் என்றார். அப்புறம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்வாறாயின் உம்முடைய ஹத்து தண்டனையை அல்லது உமது குற்றத்தை உமக்கு அல்லாஹ் மன்னித்து விட்டான் என்று கூறினார்கள் என்று அபூஉமாமத்தல் பாஹிலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இந்த ஹதீஸ்களிலிருந்து ஹஸனாத் (நல்லவை) என்பது ஐங்காலத் தொழுகைகள் என்பதையும். ஸய்யிஆத் (தீயவை)

என்பது சிறுபாவங்கள் என்பதையும் புரிந்து கொள்கிறோம். ஹஸனாத் என்பது பொதுப்பட எல்லா நற்கிரியைகளையும் குறிக்கும் என்றும் கொள்ள இடமுண்டு. ஹஸனாத் என்பது

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللهُ وَاللهُ اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ.

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹஸனாத்து என்ற பதத்திற்கு வேறு பல கருத்துக்களையும் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அவை யாவும் ஹஸனாத்துக்கள் தாம். ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளல்ல.

அல்லாஹ் அடியானை அவன் குற்றம் செய்யாமல் தண்டிப்பதில்லை. ஆதலின், எவர் நற்கிரியையிலும் வழி பாட்டிலும் ஈடுபடுகிறாரோ அவரை அல்லாஹ் ஆபத்துகளையும் இப்பிரபஞ்ச மாயையின் சதியிலும் விட்டுக் காப்பாற்றுகிறான் என்று அஸ்ஸல்மா ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி உள்ளார்கள். எவர் முஸ்லிஹான (இணக்கமான) வராக இருக்கிறாரோ அல்லாஹ் தன்னுடையு தயையின் பொருட்டு அவ்ரை அழிப்பதில்லை. அக்கிரமக்காரர்களைத் தான் அவன் அழித்திருக்கிறான் என்று அல் இமாமுல் குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்கள். அஸ்ஸலாஹ் (இணக்கம்) என்பது ஹலாலான உணவை உட்கொள்ளல், சுன்னத்துகளைப் பின்பற்றுதல், மன இச்சைக்கு மாறு செய்தல். இம்மூன்றும் ஸாலிஹான காரியங்கள் என்று ஷக்கீக்குல் பலகீ குத்திஸ ஸிர்ருஹு கூறியுள்ளார்கள்.

وَخَالِقِ النَّاسَ بِخُلُقٍ حَسَنٍ. மனிதருடன் நற்குணத்துடன் பழகு என்பதற்கு உன்னை பிறர் எப்படி நடத்த வேண்டும்.

உன்னுடன் அவர்கள் எப்படிப் பேச வேண்டும், பழக வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயோ அவ்விதமாக அவர்களை நீ நடத்த வேண்டும் அவர்களுடன் பேச வேண்டும் பழக வேண்டும், என்பது கருத்து. அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கலாகாது. தொல்லைக்கு உட்படுத்தலாகாது. மலர்ந்த முகத்துடன் அவர்களைச் சந்திக்க வேண்டும். மதுரமான வார்த்தைகளால் உரையாட வேண்டும். இம்மாதிரி நாம் நடந்தால்தான் பிறரின் அன்பையும் அபிமானத்தையும் நட்பையும் நாம் அடைய முடியும். நற்குணத்தைப் போற்றியும் அது குறித்தும் ஏராளமான ஹதீஸ்கள் வந்திருக்கின்றன. திருக்குர்ஆனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து இறைவன்

وقال تعالى: فبما رحمة من الله لنت لهم ولو كنت فظا غليظا القول لا تفضوا من حولك.

அவர்களுடன் நீர் இளகிய மனமுள்ளவராக இருப்பது அல்லாஹ்வின் கிருபையினாலேயாம். கடுகடுத்தவராகவும் வன்னெஞ்சமுள்ளவராகவும் நீர் இருந்திருப்பீராயின் உம்மை விட்டு அவர்கள் பிரிந்து சென்றிருப்பர். என்றும் **وانك لعلى خلق عظيم நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்திலிருக்கிறீர்** என்றும் கூறியுள்ளான்.

மதுரமான வாக்குள்ளவராகவும் கருணை இரக்கச் சித்தமுள்ளவராகவும் இருந்ததால் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தோழமை கொண்ட எவரும் அப்புறம் வெறுத்து விலகியதில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அநீதி செய்தவர்களை மன்னித்து அவர்களை கனிவுடன் நடத்தினார்கள். அவர்களை

பகிஷ்கரித்து பட்டினி கிடக்கச் செய்தவர்களுக்கு பஞ்சம் வந்தபோது உணவுப் பொருள்களை அனுப்பச் செய்து கஷ்ட நிவாரணமளித்தார்கள். அவர்களை விலக்கி வைத்தவர்களை அவர்கள் விலக்காமல் ஆதரித்து தங்களுடன் இணைத்துக் கொண்டார்கள். இவை நபிமார்கள் நல்லோர்கள் பெரியோர் களின் குணங்களாகும். இவற்றைப் பேணி நடப்பது நம்மவர் கடமையாகும்.

19. இறைவனை அஞ்சுவீர்

عن ابي العباس عبد الله بن عباس رضي الله تعالى عنهما قال:
كنت خلف النبي صلى الله عليه وسلم يومًا فقال يا غلامُ إني أعلِّمك
كلماتٍ احفظِ الله يحفظك احفظِ الله تجده تجاهك إذا سألت
فاسألِ الله وإذا استعنت فاستعن بالله واعلم ان الأمة لو اجتمعت
على ان ينفعوك بشيء لم ينفعوك إلا بشيء قد كتبه الله لك وإن
اجتمعوا على ان يضروك بشيء لم يضروك إلا بشيء قد كتبه الله
عليك رفعت الأقلام وجفت الصحف. رواه الترمذى.

“ஒரு நாள் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னால் வாகனத்தில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது அவர்கள் சிறுவா! உனக்கு சில விஷயங்களை நான் கற்றுக் கொடுக்கிறேன். அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணிக் கொள். அல்லாஹ் உன்னைப் பாதுகாப்பான், அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணிக் கொள். அல்லாஹ்வை உம்முடன் நீர் பெற்றுக் கொள்வீர். (அதாவது அல்லாஹ் உமக்கு உதவுவான்) நீர் கேட்டால் அல்லாஹ்விடம் கேட்பீராக! நீர் உதவி தேடினால் அல்லாஹ்விடம் உதவி தேடுவீராக. அறிந்துகொள்! மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஏதாவது ஒரு பொருள் கொண்டு உமக்குப் பயன் வழங்க நாடினாலும், அல்லாஹ் உமக்கு எதை எழுதியுள்ளானோ அப்பொருளைக் கொண்டே தவிர அவர்களால் உமக்குப் பயன் அளிக்க இயலாது. மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உமக்கு

ஏதாவது ஒரு பொருளைக் கொண்டு தீங்கு செய்ய நாடினாலும் அல்லாஹ் உமக்கு எதை எழுதியுள்ளானோ அப்பொருளைக் கொண்டே தவிர அவர்களால் உனக்கு தீங்கு செய்ய இயலாது. எழுதுகோல்கள் உயர்த்தப்பட்டு விட்டன. ஏடுகள் காய்ந்து விட்டன. (தக்கீர் எனும் விதி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டது)'' என்று திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா நூல்:- திர்மிதீ.

திர்மிதீ தவிர மற்ற அறிவிப்பில் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணிக் கொள்ளும்! அவனை உமக்கு முன்னால் பெற்றுக் கொள்வாய். உனது செழிப்பான காலங்களில் அல்லாஹ்வை அறிந்துகொள். (அவனுக்கு நன்றி செலுத்து). உனது கஷ்டமான காலத்தில் அவன் உன்னை அறிவான். (உனக்கு உதவுவான்) அறிந்துகொள்! உன்னை எது வந்தடையாமல் சென்று விட்டதோ, அது உனக்குச் சேர வேண்டியதல்ல. உன்னை எது வந்தடைந்து விட்டதோ அது உன்னை விட்டு தவறிச் சென்று விடக்கூடியது அல்ல. அறிந்து கொள்! நிச்சயமாக உதவி, பொறுமையுடன் உள்ளதாகும். நிச்சயமாக மகிழ்ச்சி கஷ்டத்துடன் உள்ளதாகும். நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

20. நாணமும் ஈமானே

عن ابي مسعود عقبة بن عمرو الأنصاري البدري رضي الله تعالى عنهما قال: قال رسول الله وسول الله صلى الله عليه وسلم إِنَّ مِمَّا أَدْرَكَ النَّاسُ مِنْ كَلَامِ النُّبُوَّةِ الأُولَى إِذَا لَمْ تَسْتَحِ فَاصْنَعْ مَا شِئْتَ.

رواه البخاري.

“நீ வெட்கத்தை இழந்து விட்டால் நீ விரும்பியதைச் செய்து கொள்” என்ற சொல் முந்தைய நபிமார்களின் வாக்கியங்களில் இருந்து மக்களுக்குக் கிடைத்த அறிவுரைகளில் ஒன்றாகும்” என திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூ மஸ்ஊத் அன்சாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- புகாரீ.

21. ஷரீஅத்தைப் பேணுவீர்

عن أبي عمرو وقيل أبي عمرة سفيان بن عبد الله رضي الله تعالى عنه
قَالَ: قلت يا رسول الله قُلْ لِيْ فِي الإِسْلَامِ قَوْلاً لاَ أَسْأَلُ عَنْهُ أَحَدًا
غَيْرَكَ قَالَ: قُلْ آمَنْتُ بِاللهِ ثُمَّ اسْتَقِمْ. رواه مسلم.

"யா ரசூலல்லாஹ் நான் தங்களைத் தவிர வேறு யாரிடமும் கேட்க மாட்டேனே அத்தகைய ஒரு சொல்லை இஸ்லாத்தில் எனக்குக் கூறுவீர்களாக எனக் கேட்டேன். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொண்டேன் எனக் கூறுவீராக" பின்னர் (அதன் மீதே) உறுதியுடன் நிற்பீராக" எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபீ அம்ரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்

22. கடமைகளை மட்டும் நிறைவேற்றினால்

عن أبي عبد الله جابر بن عبد الله الأنصاري رضي الله تعالى عنهما
قال: انَّ رَجُلاً سَأَلَ رسول الله صلى الله عليه وسلم فَقَالَ: أَرَأَيْتَ إِذَا
صَلَّيْتُ الْمَكْتُوبَاتِ وَصُمْتُ رَمَضَانَ وَ أَحْلَلْتُ الْحَلَالَ وَحَرَّمْتُ
الْحَرَامَ وَلَمْ أَزِدْ عَلَى ذٰلِكَ شَيْئًا أَأَدْخُلُ الْجَنَّةَ قَالَ: نَعَمْ. رواه مسلم.

"திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒருவர் வந்து (யா ரசூலல்லாஹ்) கடமையாக்கப்பட்ட நோன்புகளை நோற்றும், ஹலாலானவற்றை (மட்டுமே) செய்தும், ஹராமானவற்றைச் செய்யாமலிருந்தும் (வருகிறேன்). இதை விட அதிகமாக எதையும் நான் செய்ய வில்லை. நான் சுவர்க்கம் செல்ல முடியுமா?" என்று அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அப்போது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஆம்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அபூ அப்துல்லாஹ் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா நூல்:- முஸ்லிம்.

23. நன்மைகளை விரைந்து செய்வீர்

عن أبي مالك الحارث بن عاصم الأشعري رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: اَلطُّهُوْرُ شَطْرُ الإِيْمَانِ وَالحَمْدُ لِلّهِ تَمْلَئُ المِيْزَانَ وَسُبْحَانَ اللهِ وَالحَمْدُ لِلّهِ تَمْلَئَانِ اَوْ تَمْلَئُ مَا بَيْنَ السَّمَآءِ والأَرْضِ وَالصَّلاَةُ نُوْرٌ وَالصَّدَقَةُ بُرْهَانٌ وَالصَّبْرُ ضِيَاءٌ وَالقُرْآنُ حُجَّةٌ لَكَ اَوْ عَلَيْكَ. كُلُّ النَّاسِ يَغْدُوْ فَبَائِعٌ نَفْسَهُ فَمُعْتِقُهَا اَوْ مُوْبِقُهَا. رواه مسلم.

"பரிசுத்தம் ஈமானில் சரிபாதியாகும். அல்ஹம்து லில்லாஹ் (எனும் சொல்) மீஜான் தராசை நிரப்பும். ஸுப்ஹா னல்லாஹ் வல்ஹம்துலில்லாஹ் (எனும்) இரு சொற்களும் வானங்கள் பூமிக்கு மத்தியிலுள்ளவற்றை நிரப்பும். தொழுகை பிரகாசமாகும். தர்மம் ஆதாரமாகும். பொறுமை ஒளியாகும். குர்ஆன் (அதன் வழி நடந்தால்) அது உமக்கு சாதகமான ஆதாரமாகும். அல்லது (அதற்கு மாற்றமாக நடந்தால்) அது உமக்கு பாதகமான ஆதாரமாகும். ஒவ்வொரு மனிதரும் முயற்சிக்கின்றனர். சிலர் தங்களின் ஆன்மாவை அல்லாஹ் வுக்கு வழிப்படுவதில் ஈடுபடுத்துகின்றனர்; அவர்கள் அந்த ஆன்மாவை (அழிவை விட்டும்) விடுவித்துக் கொள்கின்றனர். சிலர் அந்த ஆன்மாவை (ஷைத்தானுக்கு வழிப்படுவதில் ஈடுபடுத்தி அழித்துக் கொள்கின்றனர்".

அறிவிப்பாளர்:- ஹாரிஸ் இப்னு ஆஸிமில் அன்சாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- முஸ்லிம்.

24. அநீதி இழைக்காதீர்

عن أبي ذر الغفاري رضي الله تعالى عنه عن النبي صلى الله عليه وسلم: فِيْمَا يَرْوِيْهِ عَنْ رَبِّهِ عَزَّوَجَلَّ اَنَّهُ قَالَ: يَا عِبَادِيْ إِنِّيْ حَرَّمْتُ الظُّلْمَ عَلَى نَفْسِيْ وَجَعَلْتُهُ بَيْنَكُمْ مُحَرَّمًا فَلاَ تَظَالَمُوْا يَا عِبَادِيْ كُلُّكُمْ ضَالٌّ إِلاَّ مَنْ هَدَيْتُهُ فَاسْتَهْدُوْنِيْ اَهْدِكُمْ يَا عِبَادِيْ كُلُّكُمْ جَائِعٌ إِلاَّ مَنْ اَطْعَمْتُهُ فَاسْتَطْعِمُوْنِيْ اُطْعِمْكُمْ يَا عِبَادِيْ كُلُّكُمْ عَارٍ إِلاَّ مَنْ كَسَوْتُهُ فَاسْتَكْسُوْنِيْ اَكْسُكُمْ يَا عِبَادِيْ إِنَّكُمْ تُخْطِئُوْنَ بِاللَّيْلِ وَالنَّهَارِ وَاَنَا اَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا فَاسْتَغْفِرُوْنِيْ اَغْفِرْ لَكُمْ يَا عِبَادِيْ إِنَّكُمْ لَنْ تَبْلُغُوْا ضُرِّيْ فَتَضُرُّوْنِيْ وَلَنْ تَبْلُغُوْا نَفْعِيْ فَتَنْفَعُوْنِيْ يَا عِبَادِيْ لَوْ اَنَّ اَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوْا عَلَى اَتْقَى قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ مَا زَادَ ذَلِكَ فِيْ مُلْكِيْ شَيْئًا يَا عِبَادِيْ لَوْ اَنَّ اَوَّلَكُمْ وَ آخِرَكُمْ وَ إِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوْا عَلَى اَفْجَرِ قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ مَا نَقَصَ ذَلِكَ مِنْ مُلْكِيْ شَيْئًا يَا عِبَادِيْ لَوْ اَنَّ اَوَّلَكُمْ وَ آخِرَكُمْ وَ إِنْسَكُمْ وَجِنَّكُمْ قَامُوْا فِيْ صَعِيْدٍ وَاحِدٍ فَسَاَلُوْنِيْ فَاَعْطَيْتُ كُلَّ وَاحِدٍ مَسْاَلَتَهُ مَا نَقَصَ ذَلِكَ مِمَّا عِنْدِيْ إِلاَّ كَمَا يَنْقُصُ المِخْيَطُ إِذَا اُدْخِلَ البَحْرَ يَا عِبَادِيْ إِنَّمَا هِيَ اَعْمَالُكُمْ اُحْصِيْهَا لَكُمْ ثُمَّ اُوَفِّيْكُمْ إِيَّاهَا فَمَنْ وَجَدَ خَيْرًا فَلْيَحْمَدِ اللهَ وَمَنْ وَجَدَ غَيْرَ ذَلِكَ فَلاَ يَلُوْمَنَّ إِلاَّ نَفْسَهُ. رواه مسلم.

"என் அடியார்களே! அநீதி இழைப்பதை என் மீது ஹராமாக்கிக் கொண்டேன். அதனை உங்களுக்கு மத்தியிலும் ஹராமாக்கி விட்டேன். எனவே, நீங்கள் அநீதி இழைக்காதீர்கள். அல்லாஹ் கூறுகிறான். என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் நேர்வழி காட்டினேனோ அவரைத் தவிர நீங்கள் அனைவரும் வழி தவறியவர்கள் தாம். எனவே, என்னிடமே நேர்வழியைத் தேடுங்கள், உங்களுக்கு நான் நேர்வழி காட்டுகிறேன்.

என் அடியார்களே!

உங்களில் யாருக்கு நான் உணவு அளித்தேனோ அவரைத் தவிர நீங்கள் அனைவரும் பட்டினியாளர்கள்தாம். எனவே, உணவை என்னிடம் கேளுங்கள். உங்களுக்கு நான் உணவளிக்கிறேன்.

என் அடியார்களே!

உங்களில் எவருக்கு நான் ஆடை அளித்தேனோ அவர் தவிர நீங்கள் அனைவரும் ஆடையில்லாதவர்கள் தாம். எனவே, ஆடையை என்னிடமே கேளுங்கள். நான் உங்களுக்கு ஆடையளிக்கிறேன்.

என் அடியார்களே!

நீங்கள் இரவிலும் பகலிலும் தவறு செய்து விடுகிறீர்கள். நான் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறேன். எனவே, என்னிடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். நான் உங்களை மன்னிக்கிறேன்.

என் அடியார்களே!

நீங்கள் எனக்கு எந்த இடையூறையும் பயனையும் அளித்துவிட முடியாது.

என் அடியார்களே!

உங்களில் முன்னோர்களும், பின்னோர்களும், மனிதர்களும், ஜின்களும் மிக மிக என்னை அஞ்சும் உள்ளம் உள்ளவர்களாக இருந்தாலும் அது எனது ஆட்சியில் எதனையும் அதிகரிக்காது.

என் அடியார்களே!

உங்களின் முன்னோர்களும், பின்னோர்களும், மனிதர் களும், ஜின்களும் மிகவும் பாவம் செய்யும் தீய உள்ளம் உள்ளவர்களாக இருந்தாலும் அது எனது அரசாங்கத்தில் எதையும் குறைத்து விடாது.

என் அடியார்களே!

உங்களின் முன்னோர்களும் பின்னோர்களும், மனிதர்களும், ஜின்களும் ஒரே இடத்தில் நின்று (தங்கள் தேவைகளை) என்னிடம் கேட்டு நான் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் அவர்கள் கேட்டதைக் கொடுத்தாலும், என்னிடமுள்ள வற்றில் (எனது கருவூலங்களில்) எதனையும் அது குறைத்து விடாது. கடலில் நுழைவிக்கப்பட்ட ஊசி குறைக்கும் (தண்ணீர்) அளவு போன்றதைத் தவிர.

என் அடியார்களே!

உங்கள் செயல்களை நான் முழுமையாக அறிந்து உள்ளேன். பின்னர் அவற்றை (அதன் கூலிகளை) உங்களுக்கு நான் முழுமையாக நிறைவேற்றி விடுவேன். எனவே, (உங்களில்) யார் நலவை (நற்கூலிகளை)ப் பெற்றுக் கொள்கிறாரோ, அவர் அல்லாஹ்வைப் புகழட்டும். யார் அது அல்லாததை (தண்டனையை)ப் பெற்றுக் கொள்கிறாரோ அவர் தம்மைத் தவிர

வேறு யாரையும் பழிக்க வேண்டாம்" என்று அல்லாஹ் கூறியதாக திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் அறிவித்து உள்ளார்கள்.

அறிவிப்பாளர்:- அபூதர்ரு ஜுன்துப் இப்னு ஜுனாதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு — நூல்:- முஸ்லிம்

குறிப்பு: இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூ இத்ரீஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இந்த ஹதீஸை அறிவிக்கும் போது முழங்காலிட்டு நின்று கொள்வார்.

25. நன்மைகள் வேண்டுமா?

عن ابي ذر رضي الله تعالى عنه ايضا أن ناسا من اصحاب رسول الله
صلى الله عليه وسلم قالوا للنبي صلى الله عليه وسلم: يَا رَسُوْلَ اللهِ
ذَهَبَ أَهْلُ الدُّثُوْرِ بِالأُجُوْرِ يُصَلُّوْنَ كَمَا نُصَلِّيْ وَيَصُوْمُوْنَ كَمَا نَصُوْمُ
وَيَتَصَدَّقُوْنَ بِفُضُوْلِ أَمْوَالِهِمْ قَالَ: أَوَ لَيْسَ قَدْ جَعَلَ اللهُ لَكُمْ مَا
تَصَدَّقُوْنَ إِنَّ لَكُمْ بِكُلِّ تَسْبِيْحَةٍ صَدَقَةً وَبِكُلِّ تَكْبِيْرَةٍ صَدَقَةً وَكُلِّ
تَحْمِيْدَةٍ صَدَقَةً وَكُلِّ تَهْلِيْلَةٍ صَدَقَةً وَأَمْرٌ بِالْمَعْرُوْفِ صَدَقَةٌ وَنَهْيٌ عَنْ
مُنْكَرٍ صَدَقَةٌ وَفِيْ بُضْعِ أَحَدِكُمْ صَدَقَةٌ قَالُوْا يَا رَسُوْلَ اللهِ أَيَأْتِيْ أَحَدُنَا
شَهْوَتَهُ وَيَكُوْنُ لَهُ فِيْهَا أَجْرٌ قَالَ: أَرَأَيْتُمْ لَوْ وَضَعَهَا فِيْ حَرَامٍ أَكَانَ
عَلَيْهِ وِزْرٌ فَكَذَلِكَ إِذَا وَضَعَهَا فِي الْحَلَالِ كَانَ لَهُ أَجْرٌ. رواه مسلم.

"திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சிலர், யா ரசூலல்லாஹ் (எங்களில்) செல்வந்தர்கள் (அதிகமான) நன்மைகளைக் கொண்டு செல்கிறார்கள். நாங்கள் தொழுவது போன்று அவர்களும் தொழுகிறார்கள். நாங்கள் நோன்பு நோற்பது போன்று அவர்களும் நோன்பு நோற்கிறார்கள். மேலும் தங்களின் செல்வங்களிலிருந்து (உபரியான) தான தர்மங்களும் செய்கின்றனர். (எனவே, அவர்கள் எங்களை விட அதிகமான நன்மைகளை அடைந்து கொள்கின்றனர்) எனக் கூறினார்கள். அதற்கு திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள், நீங்கள் தர்மம் செய்பவற்றையும் அல்லாஹ் உங்களுக்கு ஆக்கவில்லையா?

நிச்சயமாக ஒவ்வொரு தஸ்பீஹ் (சுப்ஹானல்லாஹ்) ஒவ்வொரு தக்பீர் (அல்லாஹு அக்பர்) ஒவ்வொரு தஹ்மீது (அல்ஹம்து லில்லாஹ்) ஒவ்வொரு தஹ்லீல் (லா இலாஹ இல்லல்லாஹ்) (இவற்றைக்) கொண்டும் ஸதக்கா(வின் நன்மை) உள்ளது. நன்மையை ஏவுதலும் ஸதக்காவாகும். தீமையைத் தடுத்தலும் ஸதக்கா வாகும். உங்களில் ஒருவர் தம் மனைவியுடன் உடலில் பங்கு கொள்வதற்கும் ஸதக்கா (வின் நன்மை) உள்ளது. அப்பொழுது ஸஹாபாக்கள் யா ரசூலல்லாஹ் ஒருவர் தம்முடைய இச்சையை நிறைவு செய்யத் தம் மனைவியுடன் இல்லற உறவு கொள்கிறார். அதற்கும் நன்மையுண்டா? என வினவினார்கள். அதற்கு திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர் தம்முடைய இச்சையை ஹராமான வழியில் நிறைவேற்றிக் கொண்டால் அவர் மீது பாவம் ஏற்படாதா? அது போன்றே அவ்விச்சையை அவர் ஹலாலான வழியில் நிறைவேற்றும் போது அதற்கும் நன்மை கிடைக்கிறது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூதர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

26. சமரசம் செய்து வைப்பீர்

عن ابي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: كُلُّ سُلَامَى مِنَ النَّاسِ عَلَيْهِ صَدَقَةٌ كُلُّ يَوْمٍ تَطْلُعُ فِيهِ الشَّمْسُ تَعْدِلُ بَيْنَ اثْنَيْنِ صَدَقَةٌ وَتُعِينُ الرَّجُلَ فِي دَابَّتِهِ فَتَحْمِلُهُ عَلَيْهَا أَوْ تَرْفَعُ لَهُ عَلَيْهَا مَتَاعَهُ صَدَقَةٌ وَالْكَلِمَةُ الطَّيِّبَةُ صَدَقَةٌ وَبِكُلِّ خَطْوَةٍ تَمْشِيهَا إِلَى الصَّلَاةِ صَدَقَةٌ وَتُمِيطُ الأَذَى عَنِ الطَّرِيقِ صَدَقَةٌ. رواه البخاري ومسلم.

"சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் மனிதர்களின் ஒவ்வொரு மூட்டின் மீதும் தர்மம் செய்தல் வேண்டும். நீர் இருவருக்கு மத்தியில் நீதி வழங்குவது தர்மம் ஆகும். ஒரு மனிதருக்கு அவரது வாகனத்தின் விஷயத்தில் நீர் உதவி செய்வது அவரை அவரது வாகனத்தில் ஏற்றி விடுவது அல்லது அவரது பொருட்களை அவரது வாகனத்தில் தூக்கி வைப்பது தர்மமாகும். இனிமையான சொற்களும் தர்மமாகும். தொழுகைக்காக நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டும் தர்மமாகும். பாதையை விட்டு தீங்கிழைக்கும் பொருட்களை அகற்றுவதும் தர்மமாகும்" என திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

27. நற்குணங்கள் யாவை?

عن النواس بن سمعان رضي الله تعالى عنه عن النبي صلى الله عليه وسلم قال: اَلْبِرُّ حُسْنُ الْخُلُقِ وَالإِثْمُ مَا حَاكَ فِي نَفْسِكَ وَكَرِهْتَ اَنْ يَطَّلِعَ عَلَيْهِ النَّاسُ. رواه مسلم.

"நன்மை செய்வது நற்குணமாகும். தீமை என்பது உன் உள்ளத்தை உறுத்தக்கூடியதும், மக்கள் அதனைப் பார்த்து விடுவதை நீர் வெறுக்கக் கூடியதுமாகும்" என திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹள்ரத் நவாஸ் இப்னு ஸம்ஆன்ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

عن وابصة بن معبد رضي الله تعالى عنه قال: أتيت رسول الله صلى الله عليه وسلم فقال: جِئْتَ تَسْئَلُ عَنِ الْبِرِّ قُلْتُ نَعَمْ قَالَ: اِسْتَفْتِ قَلْبَكَ اَلْبِرُّ مَا اِطْمَئَنَّتْ إِلَيْهِ النَّفْسُ وَاطْمَئَنَّ إِلَيْهِ الْقَلْبُ وَالإِثْمُ مَا حَاكَ فِي النَّفْسِ وَتَرَدَّدَ فِي الصَّدْرِ وَ إِنْ اَفْتَاكَ النَّاسُ وَاَفْتَوْكَ. رواه احمد والدارمي.

"நான் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தேன். (நான் வந்ததும்) நன்மையைப் பற்றி என்னிடம் கேட்க வந்துள்ளீரா என அவர்களாகவே கேட்டார்கள். நான் ஆம் எனக் கூறினேன். (நன்மை எது தீமை எது என்பதை) உன் உள்ளத்திடமே தீர்ப்புக் கேளும். உன் மனதும், உன் உள்ளமும் எதைப் பற்றி நிம்மதி அடைகிறதோ அது

நன்மையாகும். உன் மனதையும், உன் உள்ளத்தையும் எது உறுத்துகிறதோ அது பாவமாகும். மக்கள் அதனைச் சரியென தீர்ப்பு வழங்கினாலும் சரியே" என திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் வாபிஸா இப்னு மஃபத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- அஹ்மது, தாரமீ.

28. நபி வழியைப் பின்பற்றுவீர்

عن ابي نجيح العرباض بن سارية رضي الله تعالى عنه قال: وَعَظَنَا
رسول الله صلى الله عليه وسلم مَوْعِظَةً وَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ وَ
ذَرَفَتْ مِنْهَا الْعُيُوْنُ فَقُلْنَا يَا رَسُوْلَ اللّٰهِ كَاَنَّهَا مَوْعِظَةُ مُوَدِّعٍ فَاَوْصِنَا
قَالَ: اُوْصِيْكُمْ بِتَقْوَى اللّٰهِ عَزَّ وَجَلَّ وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَ اِنْ تَاَمَّرَ
عَلَيْكُمْ عَبْدٌ فَاِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اِخْتِلَافًا كَثِيْرًا فَعَلَيْكُمْ بِسُنَّتِيْ
وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِيْنَ الْمَهْدِيِّيْنَ عَضُّوْا عَلَيْهَا بِالنَّوَاجِذِ وَاِيَّاكُمْ
وَمُحْدَثَاتِ الْاُمُوْرِ فَاِنَّ كُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ. رواه ابو داود والترمذي.

"திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு மாபெரும் அழகிய உபதேசம் செய்தார்கள். அவ்வுபதேசம் எத்தகையது எனில் (அதனைக் கேட்கும் பொழுது) எங்கள் இதயங்கள் அஞ்சி நடுங்கின. கண்கள் கண்ணீரை வடித்தன. அப்பொழுது நாங்கள் யாரசூலல்லாஹ் இது வழியனுப்பி வைத்து விடைபெறக் கூடியவரின் உபதேசத்தைப் போன்றதாக உள்ளது. எனவே, எங்களுக்கு மேலும் உபதேசம் செய்வீர்களாக எனக் கூறினோம். அப்பொழுது திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (தோழர்களே) இறையச்சத்தைக் கொண்டு உங்களுக்கு உபதேசம் செய்கிறேன். உங்களுக்கு கறுப்பு நிற அடிமை தலைவரானாலும் அவரின் கட்டளைகளைச் செவியுறுவதையும், வழிப்படுவதையும் உங்களுக்கு நான் உபதேசம் செய்கிறேன். உங்களிலிருந்து (எனக்குப்பின்)

வாழ்கிறார்கள் அதிகமான வேறுபாடுகளைப் பார்ப்பார்கள். எனவே, என் வழிமுறைகளைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நேர்வழி காட்டப் பெற்ற நேர்மையான என் கலீபாக்களின் வழிமுறைகளையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவற்றின் மீது கடவாய்ப் பற்களைக் கடித்துக் கொள்ளுங்கள். நூதன விஷயங்களை உங்களுக்கு எச்சரிக்கிறேன். நிச்சயமாக ஒவ்வொரு நூதனமும் வழிகேடாகும்".

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூ நுஜைஹ் இர்பாழ் இப்னு ஸாரியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- அபூதாவூத், திர்மிதீ.

29. சுவர்க்கம் செல்ல வேண்டுமா?

عن معاذ بن جبل رضي الله تعالى عنه قال: قلت يا رسول الله أَخْبِرْنِي بِعَمَلٍ يُدْخِلُنِي الْجَنَّةَ وَيُبَاعِدُنِي عَنِ النَّارِ قَالَ: لَقَدْ سَأَلْتَ عَنْ عَظِيمٍ وَإِنَّهُ لَيَسِيرٌ عَلَى مَنْ يَسَّرَهُ اللَّهُ تَعَالَى عَلَيْهِ. تَعْبُدُ اللَّهَ لَا تُشْرِكُوا بِهِ شَيْئًا وَتُقِيمُ الصَّلَاةَ وَتُؤْتِي الزَّكَاةَ وَتَصُومُ رَمَضَانَ وَتَحُجُّ الْبَيْتَ ثُمَّ قَالَ: أَلَا أَدُلُّكَ عَلَى أَبْوَابِ الْخَيْرِ الصَّوْمُ جُنَّةٌ وَالصَّدَقَةُ تُطْفِئُ الْخَطِيئَةَ كَمَا يُطْفِئُ الْمَاءُ النَّارَ وَصَلَاةُ الرَّجُلِ فِي جَوْفِ اللَّيْلِ ثُمَّ تَلَا تَتَجَافَى جنوبهم عن المضاجع حَتَّى بَلَغَ يَعْمَلُونَ ثُمَّ قَالَ: أَلَا أُخْبِرُكَ بِرَأْسِ الْأَمْرِ وَعَمُودِهِ وَذِرْوَةِ سَنَامِهِ قُلْتُ بَلَى يَا رَسُولَ اللَّهِ قَالَ: رَأْسُ الْأَمْرِ الْإِسْلَامُ وَعَمُودُهُ الصَّلَاةُ وَذِرْوَةُ سَنَامِهِ الْجِهَادُ ثُمَّ قَالَ: أَلَا أُخْبِرُكَ بِمَلَاكِ ذَلِكَ كُلِّهِ فَقُلْتُ بَلَى يَا رَسُولَ اللَّهِ فَأَخَذَ بِلِسَانِهِ وَقَالَ: كُفَّ عَلَيْكَ هَذَا قُلْتُ يَا نَبِيَّ اللَّهِ وَإِنَّا لَمُؤَاخَذُونَ بِمَا نَتَكَلَّمُ بِهِ فَقَالَ: ثَكِلَتْكَ أُمُّكَ وَهَلْ يَكُبُّ النَّاسَ فِي النَّارِ عَلَى وُجُوهِهِمْ أَوْ قَالَ: عَلَى مَنَاخِرِهِمْ إِلَّا حَصَائِدُ أَلْسِنَتِهِمْ. رواه الترمذي.

"நான் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் என்னை சுவர்க்கத்தில் நுழைவித்து, நரகை விட்டும் தூரமாக்கும் ஓர் அமலை எனக்கு அறிவித்துத் தாருங்கள் எனக் கேட்டேன். அதற்கவர்கள் நீர் மிகப் பெரிய விஷயத்தைக் கேட்டு விட்டீர். யாருக்கு அதனை அல்லாஹ் எளிதாக்கி வைக்கிறானோ அது அவருக்கு எளிதாகும்.

அல்லாஹ்வை வணங்குவீராக. அவனுக்கு எப்பொருளையும் இணைவைக்காதீர். தொழுகையை நிலை நாட்டுவீராக, ஜக்காத்தைக் கொடுப்பீராக. ரமலானில் நோன்பு நோற்பீராக. இறையில்லமாம் திரு கஃபாவை ஹஜ் செய் எனக் கூறினார்கள். பின்னர் கூறினார்கள் நன்மைகளின் வாயில்களை உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? நோன்பு (பாவங்களைத் தடுக்கும்) கேடயமாகும். தண்ணீர் நெருப்பை நூர்ப்பது போன்று அது பாவத்தைப் போக்கி விடும். மேலும் நடு இரவில் (தஹஜ்ஜுத்) தொழுவதுமாகும். பின்னர் (அரபி) ததஜாபா ஜுனூபுஹும் என்று தொடங்கும் (சூரத் ஸஜ்தாவின் 16வது) வசனத்திலிருந்து (அரபி) யஃமலூன வரை ஓதினார்கள். (32:16,17)

பின்னர் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விஷயங்களில் மிக முக்கியமானதையும், அதன் தூணையும் அதன் உச்சியையும் உமக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? எனக் கேட்டார்கள். அதற்கு நான் ஆம் யாரசூலல்லாஹ் என்றேன். அப்பொழுது கூறினார்கள். விஷயத்தில் மிக முக்கியமானது இஸ்லாமாகும். தொழுகை அதன் தூணாகும். ஜிஹாத் அதன் உச்சியாகும். மேலும் கூறினார்கள். இவையனைத்தையும் (ஒன்று சேர்த்துக் கொள்ளக்கூடிய) உறுதியான ஒரு விஷயத்தை உமக்கு அறிவிக்கட்டுமா? அதற்கு நான் ஆம் யாரசூலல்லாஹ் என்றேன். அப்பொழுது தங்கள் நாவைப் பிடித்து இதனைத் தடுத்துக் கொள்வீராக என்று கூறினார்கள். நாங்கள் பேசுவதைக் கொண்டும் பிடிக்கப் படுவோமோ? என்று நான் கேட்டேன். அதற்கவர்கள், உம் தாய் உம்மை இழக்கட்டுமாக

மக்களை முகங்குப்புற நரகில் வீழ்த்துவது அவர்களின் நாவின் விளைச்சல்கள்தான்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் முஆத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள். நூல்:- திர்மிதி.

30. இறைக் கட்டளையை மீறாதீர்

عن أبي ثعلبة الخشني جرثوم بن ناشر رضي الله تعالى عنه عن رسول الله صلى الله عليه وسلم قال: إِنَّ اللهَ تَعَالَى فَرَضَ فَرَائِضَ فَلَا تُضَيِّعُوهَا وَحَدَّ حُدُودًا فَلَا تَعْتَدُوهَا وَحَرَّمَ أَشْيَاءَ فَلَا تَنْتَهِكُوهَا وَسَكَتَ عَنْ أَشْيَاءَ رَحْمَةً لَكُمْ غَيْرَ نِسْيَانٍ فَلَا تَبْحَثُوا عَنْهَا. رواه الدار قطني وغيره.

"நிச்சயமாக அல்லாஹு சில ஃபர்ளுகளை (கடமையாக) ஆக்கியுள்ளான். அவற்றை வீணாக்காதீர்கள். மேலும் சில வரம்புகளையும் ஏற்படுத்தியுள்ளான். அவற்றை(யும்) மீறாதீர்கள். மேலும் சில விஷயங்களை ஹராமாக்கியுள்ளான். அவற்றின் அருகில் கூடச் செல்லாதீர்கள். சில விஷயங்களைப் பற்றி அவன் எதுவும் கூறவில்லை. அது உங்கள் மீது அவன் அருள் கூர்ந்து கிருபை காட்டுவதற்காகவே யாகும். மாறாக, அவற்றை மறந்தவனாக விடவில்லை. எனவே, அவற்றைப் பற்றி நீங்கள் விவாதித்துத் தர்க்கம் செய்து கொண்டிருக்க வேண்டாம்" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- அபூ தஃலபா அல்ஹுஷனீ ஜுர்தூம் இப்னு நாஷிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

நூல்:- தாரகுத்னீ மற்றும் பல நூற்கள்.

31. பற்றற்றிருப்பீர்

عن أبي العباس سهل بن سعد الساعدي رضي الله تعالى عنه قال: جاءَ رَجُلٌ إِلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَقَالَ: يَا رَسُولَ اللهِ دُلَّنِي عَلَى عَمَلٍ إِذَا عَمِلْتُهُ أَحَبَّنِيَ اللهُ وَأَحَبَّنِيَ النَّاسُ فَقَالَ: ازْهَدْ فِي الدُّنْيَا يُحِبُّكَ اللهُ وَازْهَدْ فِيمَا عِنْدَ النَّاسِ يُحِبُّكَ النَّاسُ. رواه ابن ماجة وغيره

"திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து யா ரசூலல்லாஹ் எந்த அமலை நான் செய்தால் அல்லாஹ்வும், மக்களும் என்னை நேசிப்பார்களோ அந்த அமலை எனக்கு அறிவித்துத் தாருங்கள் எனக் கேட்டார். அதற்கு திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகின் விஷயத்தில் நீர் பற்றற்று இரு. அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களிடம் உள்ளவற்றை (செல்வங்களை) நீர் ஆசைப்பட வேண்டாம். மக்கள் உன்னை நேசிப்பார்கள்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபுல் அப்பாஸ் ஸஹ்ல் இப்னு ஸஃதிஸ்ஸாஇதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- இப்னு மாஜா.

32. தீங்கிழைக்காதீர்

عن أبي سعيد سعد بن سنان الخدري رضي الله تعالى عنه أن رسول الله صلى الله عليه وسلم قال: لَاَ ضَرَرَ وَلَاَ ضِرَارَ. رواه ابن ماجة وغيرهما.

"பிறர் தனக்கு தீங்கு இழைத்தாலும் அவருக்கு இவர் தீங்கிழைக்கக் கூடாது" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூஸஈத் இப்னு ஸினான் அல்குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- இப்னு மாஜா, தாரகுத்னீ.

33. வாதியும் பிரதிவாதியும்

عن ابن عباس رضي الله تعالى عنه أن رسول الله صلى الله عليه وسلم قال: لَوْ يُعْطَى النَّاسُ بِدَعْوَاهُمْ لَادَّعَى رِجَالٌ أَمْوَالَ قَوْمٍ وَدِمَائَهُم لكِنِ الْبَيِّنَةُ عَلَى الْمُدَّعِي وَالْيَمِينَ عَلَى مَنْ أَنْكَرَ. رواه البيهقي.

"ஒருவர் தம் வாதத்திறமையால் பிறர் பொருளை அபகரிக்க முயல்வாராயின், சிலர் சிலரின் பொருட்களையும், இரத்தங்களையும் வாதிட்டு எடுத்துக் கொள்வார்கள். என்றாலும் வாதிடுபவர் தகுந்த ஆதாரங்களைக் கொடுப்பதும், பிரதிவாதி சத்தியம் செய்வதும் அவசியமாகும்" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்:- பைஹக்கி

34. தீமையைத் தடுப்பீர்

عن أبي سعيد الخدري رضي الله تعالى عنه قال: سمعت رسول الله صلى الله عليه وسلم يقول: مَنْ رَأَى مِنكُمْ مُنكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وَذلِكَ أَضْعَفُ الإِيْمَانِ. رواه مسلم.

"உங்களில் ஒருவர் ஒரு தீமையைப் பார்த்தால் அதனை அவர் தம்முடைய கரத்தால் தடுக்கட்டும். அதற்கு அவர் சக்தி பெறாவிடில், தம்முடைய நாவால் தடுக்கட்டும். அதற்கும் அவர் சக்தி பெறாவிடில் தம்முடைய உள்ளத்தால் அதனை வெறுக்கட்டும். இதுவே ஈமானின் மிக பலஹீன நிலையாகும்" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூஸஈத் அல்குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்

35. சகோதரர்களாயிருப்பீர்

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: لاتَحَاسَدُوْا وَلاَ تَنَاجَشُوْا وَلاَ تَبَاغَضُوْا وَلاَ تَدَابَرُوْا وَلاَ يَبِعْ بَعْضُكُمْ عَلٰى بَيْعِ بَعْضٍ وَكُوْنُوْا عِبَادَ اللهِ إِخْوَانًا اَلْمُسْلِمُ اَخُو الْمُسْلِمِ لاَ يَظْلِمُهُ وَلاَ يَخْذُلُهُ وَلاَ يَكْذِبُهُ وَلاَ يَحْقِرُهُ اَلتَّقْوٰى هَاهُنَا وَ يُشِيْرُ إِلٰى صَدْرِهِ ثَلاَثَ مَرَّاتٍ بِحَسْبِ اِمْرِءٍ مِنَ الشَّرِّ اَنْ يَحْقِرَ اَخَاهُ الْمُسْلِمَ كُلُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ حَرَامٌ دَمُهُ وَمَالُهُ وَعِرْضُهُ. رواه مسلم.

"நீங்கள் பொறாமை கொள்ளாதீர்கள். பொருளை வாங்கும் எண்ணமில்லாமல் பிறரை ஏமாற்றி வாங்கச் செய்வதற்காக விலையை உயர்த்தாதீர்கள். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் கோபப்படாதீர்கள். நீங்கள் ஒருவரையொருவர் புறக்கணிக்க வேண்டாம். உங்களில் சிலர் சிலரின் வியாபாரத்தில் குறுக்கீடு செய்து விற்க வேண்டாம் அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் சகோதரர்களாகி விடுங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரராவார். அவர் அவருக்கு அநீதி இழைக்க மாட்டார். அவரை இழிவாக எண்ணமாட்டார். அவருக்கு உதவுவதை விடமாட்டார். இறையச்சம் இங்கு (இதயத்தில்) உள்ளது. அப்பொழுது திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் நெஞ்சின் பக்கம் மும்முறை சுட்டிக் காட்டினார்கள். (பின்னர் கூறினார்கள்) ஒரு முஸ்லிமை இழிவாக எண்ணுவதே தீமையால் மனிதனுக்குப்

போதுமானதாகும். ஒவ்வொரு முஸ்லிமின் இரத்தமும், செல்வமும், கண்ணியமும் மற்றொரு முஸ்லிமின் மீது (அவற்றைப் பறிப்பது) ஹராமாகும்" என்று திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

36. திருக்குர்ஆனும், திக்ருகளும்...

عن أبي هريرة رضي الله تعالى عنه عن النبي صلى الله عليه وسلم قال: مَنْ نَفَّسَ عَنْ مُؤْمِنٍ كُرْبَةً مِنْ كُرَبِ الدُّنْيَا نَفَّسَ اللهُ عَنْهُ كُرْبَةً مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ وَمَنْ يَسَّرَ عَلَى مُعْسِرٍ يَسَّرَ اللهُ عَلَيْهِ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَمَنْ سَتَرَ مُسْلِمًا سَتَرَهُ اللهُ فِي الدُّنْيَا والْآخِرَةِ وَاللهُ فِي عَوْنِ الْعَبْدِ مَا كَانَ الْعَبْدُ فِي عَوْنِ أخِيهِ وَمَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا سَهَّلَ اللهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ وَمَا اجْتَمَعَ قَوْمٌ فِي بَيْتٍ مِنْ بُيُوتِ اللهِ يَتْلُونَ كِتَابَ اللهِ وَيَتَدَارَسُونَهُ بَيْنَهُمْ إِلاَّ نَزَلَتْ عَلَيْهِمُ السَّكِينَةُ وَغَشِيَتْهُمُ الرَّحْمَةُ وَحَفَّتْهُمُ الْمَلَائِكَةُ وَذَكَرَهُمُ اللهُ فِيمَنْ عِنْدَهُ وَمَنْ بَطَّأَ بِهِ عَمَلُهُ لَمْ يُسْرِعْ بِهِ نَسَبُهُ. رواه مسلم.

"ஒரு முஸ்லிமின் கஷ்டங்களில் ஒரு கஷ்டத்தை எவர் போக்கி வைக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் கியாமத் நாளின் கஷ்டங்களில் ஒரு கஷ்டத்தைப் போக்கி வைப்பான். யார் சிரமப்படக் கூடியவருக்கு (அவரது சிரமத்தை) எளிதாக்கி வைக்கிறாரோ அவருக்கு அல்லாஹ் உலகிலும், மறுமையிலும் (அவரது விஷயத்தை) எளிதாக்கி வைப்பான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறாரோ அவரது குறையை உலகிலும் மறுமையிலும் அல்லாஹ் மறைப்பான். ஓர் அடியான் தன் சகோதரனுக்கு உதவி செய்யும் காலமெல்லாம் அல்லாஹ் அந்த அடியானுக்கு உதவி செய்வான்.

யார் கல்வியைத் தேடும் பாதையில் நடந்து செல்கிறாரோ அவருக்கு சுவனத்தின் பாதையை அல்லாஹ் எளிதாக்கி வைப்பான். எந்தக் கூட்டத்தினர் அல்லாஹ்வின் வீடுகளில் உள்ள ஒரு வீட்டில் கூடி அல்லாஹ்வின் திருவேதத்தை (குர்ஆன் ஷரீபை) ஓதுவதிலும், அதனை தங்களுக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்வதிலும் ஈடுபடுகிறார்களோ அவர்கள் மீது அல்லாஹ்வின் ஸகீனா என்னும் நிம்மதி இறங்கும். வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்வார்கள். அல்லாஹ் புகழ்ந்து உரைப்பான். யாரை அவர் அமல்கள் பிந்தச் செய்து விடுகிறதோ அவரை அவரது வம்சச் சிறப்பு (நற்பதவிகளின் பால்) முன்னேற்றச் செய்யாது" என திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஸ்லிம்.

37. அல்லாஹ்வின் கருணை

عن ابن عباس رضي الله تعالى عنهما عن رسول الله صلى الله عليه وسلم: فِيمَا يَرْوِيهِ عَنْ رَبِّهِ تَبَارَكَ وَتَعَالَى قَالَ: إِنَّ اللّٰهَ كَتَبَ الْحَسَنَاتِ وَالسَّيِّئَاتِ ثُمَّ بَيَّنَ ذٰلِكَ فَمَنْ هَمَّ بِحَسَنَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللّٰهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً وَإِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللّٰهُ عِنْدَهُ عَشْرَ حَسَنَاتٍ إِلَى سَبْعِ مِائَةِ ضِعْفٍ إِلَى أَضْعَافٍ كَثِيرَةٍ وَإِنْ هَمَّ بِسَيِّئَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللّٰهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً وَإِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللّٰهُ سَيِّئَةً وَاحِدَةً.

رواه البخاري ومسلم.

"நிச்சயமாக அல்லாஹ் நன்மையையும் தீமையையும் எழுதி விட்டான். பின்னர் அதைத் தெளிவு படுத்தி விட்டான். ஒருவர் ஒரு நன்மையைச் செய்ய நாடி அதைச் செய்ய வில்லையென்றால் அதற்காக (ஒரு) நன்மையை முழுமையாக எழுதி விடுகிறான். அந்த நன்மையைச் செய்து விட்டால் பத்து முதல் எழு நூறு வரையும், அதற்கும் மேலாக பன்மடங்கு நன்மையை எழுதி விடுகிறான். ஒருவர் ஒரு தீமையைச் செய்ய நாடி அத்தீமையைச் செய்ய வில்லையென்றால் அதற்கும் அல்லாஹ் முழுமையாக ஒரு நன்மையை எழுதி விடுகிறான். அத்தீமையை அவர் செய்து விட்டால் ஒரு தீமையை மட்டுமே எழுதி விடுகிறான்".

அறிவிப்பாளர்:- ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்:- புகாரி, முஸ்லிம்.

38. அல்லாஹ்வை நெருங்குவது எப்படி?

عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: إِنَّ اللّٰهَ تَعَالَى قَالَ: مَنْ عَادَى لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالْحَرْبِ وَمَا تَقَرَّبَ إِلَيَّ عَبْدِي بِشَيْءٍ أَحَبَّ إِلَيَّ مِمَّا افْتَرَضْتُهُ عَلَيْهِ وَلَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّى أُحِبَّهُ فَإِذَا أَحْبَبْتُهُ كُنْتُ سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا وَلَئِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ وَلَئِنِ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ. رواه البخاري.

"நிச்சயமாக அல்லாஹ் கூறுகிறான் யார் (எனது) நேசரை எனக்காக (என் பாதையில் அவர் ஈடுபட்டிருப்பதற்காக) பகைத்துக் கொள்வாரானால், அவருடன் போரைக் கொண்டு நான் பிரகடனப் படுத்துவேன். என் அடியான் நான் அவன் மீது கடமையாக்கி யுள்ளதை விட மிகப் பிரியமான மற்றொன்றைக் கொண்டு என்பால் நெருங்குவதில்லை. என் அடியான் நான் அவனை நேசிக்கும் வரை நஃபிலான வணக்கங்களைக் கொண்டு என்பால் நெருங்குபவனாக ஆகி விட்டான். நான் அவனை நேசித்து விட்டால் அவன் கேட்கும் அவனுடைய கேள்வியாக, அவன் பார்க்கும் அவனுடைய பார்வையாக, அவன் பிடிக்கும் கரமாக, அவன் நடக்கும் காலாக நான் ஆகி விடுவேன். அவன் என்னிடம் கேட்டால் அவனுக்கு நான் கொடுப்பேன். அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினால்

அவனுக்கு நான் பாதுகாப்பு அளிப்பேன்" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரீ

39. தவறுதலாகச் செய்த பாவம்?

عن ابن عباس رضي الله تعالى عنهما أن رسول الله صلى الله عليه وسلم قال: إِنَّ اللَّهَ تَجَاوَزَ لِي عَنْ أُمَّتِي الْخَطَأَ وَالنِّسْيَانَ وَمَا اسْتُكْرِهُوا عَلَيْهِ. رواه ابن ماجة والبيهقي وغيرهما.

"நிச்சயமாக அல்லாஹ் தவறுதலாகவும் மறதியாகவும், நிர்ப்பந்தத்தாலும் செய்த் பாவங்களை எனக்காக மன்னித்து விட்டான்" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா நூல்:- இப்னு மாஜா, பைஹக்கீ

40. மறுமைக்குத் தயாராவீர்

عن ابن عمر رضي الله تعالى عنهما قال: أخذ رسول الله صلى الله
عليه وسلم بِمَنْكِبَيَّ فَقَالَ: كُنْ فِي الدُّنْيَا كَأَنَّكَ غَرِيبٌ أَوْ عَابِرُ سَبِيلٍ
وَكَانَ ابْنُ عُمَرَ رضي الله تعالى عنهما يَقُولُ: إِذَا أَمْسَيْتَ فَلاَ تَنْتَظِرُ
الصَّبَاحَ وَ إِذَا أَصْبَحْتَ فَلاَ تَنْتَظِرُ الْمَسَاءَ وَخُذْ مِنْ صِحَّتِكَ
لِمَرَضِكَ وَمِنْ حَيَاتِكَ لِمَوْتِكَ. رواه البخاري.

"திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என் தோள் புஜங்களைப் பிடித்தவர்களாக (இப்னு உமரே) நீர் உலகில் வெளியூர் வாசியைப் போல் அல்லது பாதையைக் கடந்து செல்லும் பயணியைப் போல் ஆகி விடும்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்:- புகாரி.

மேலும் அப்துல்லாஹ் இப்னு உமர்ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். நீ மாலைப் பொழுதில் இருந்தால் காலைப் பொழுதை எதிர்பார்க்க வேண்டாம். நீ காலைப் பொழுதில் இருந்தால் மாலைப் பொழுதை எதிர்பார்க்க வேண்டாம். உன் வியாதியின் காலத்திற்கு வேண்டி ஆரோக்கியமான காலத்தை (நற்செயல்கள் புரிவதன் மூலம்) பயன்படுத்திற் கொள். உன் மரணத்திற்காக வேண்டி உன் ஆயுட் காலத்தை (நற்செயல்கள் புரிவதன் மூலம்) பயன்படுத்திக் கொள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா நூல்:- புகாரி.

41. ஈமானின் அடையாளம்

عن ابي محمد عبد الله بن عمرو بن العاص رضي الله تعالى عنهما
قال: قال رسول الله صلى الله عليه وسلم: لاَيُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى
يَكُونَ هَوَاهُ تَبَعًا لِمَا جِئْتُ بِهِ. كتاب الحجة باسناد صحيح.

"நான் கொண்டு வந்த மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்ற ஆசைப்படுபவரே பரிபூரணமான முஸ்லிமாக ஆக முடியும்" என திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அபூ முஹம்மத் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு அல்ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

42. அல்லாஹ்வின் பெருந்தன்மை

عن أنس رضي الله تعالى عنه قال: سمعت رسول الله صلى الله عليه وسلم يقول: قال الله تعالى: يَا بْنَ آدَمَ إِنَّكَ مَا دَعَوْتَنِي وَرَجَوْتَنِي غَفَرْتُ لَكَ عَلَى مَا كَانَ مِنْكَ وَلَا أُبَالِي يَا ابْنَ آدَمَ لَوْ بَلَغَتْ ذُنُوبُكَ عَنَانَ السَّمَاءِ ثُمَّ اسْتَغْفَرْتَنِي غَفَرْتُ لَكَ وَلَا أُبَالِي يَا ابْنَ آدَمَ إِنَّكَ لَوْ أَتَيْتَنِي بِقُرَابِ الْأَرْضِ خَطَايَا ثُمَّ لَقِيتَنِي لَا تُشْرِكُوا بِي شَيْئًا لَأَتَيْتُكَ بِقُرَابِهَا مَغْفِرَةً رواه الترمذى.

"அல்லாஹ் கூறுகிறான். ஆதமின் மகனே!

என்னை நீ அழைத்தபோதெல்லாம், என் மீது ஆதரவு வைத்த போதெல்லாம் உன்னை நான் மன்னித்தேன். உன் நிலை எப்படி இருந்த போதிலும் நான் அதனைப் பொருட்படுத்த வில்லை.

ஆதமின் மகனே உன் பாவங்கள் வானத்தின் முகட்டைத் தொட்டு, பின்னர் அவற்றிற்காக நீ என்னிடம் மன்னிப்புக் கேட்டு இறைஞ்சினாலும், நான் உன்னை மன்னித்து விடுவேன். ஆதமின் மகனே நீ பூமி நிரம்பப் பாவங்களைக் கொண்டு வந்து, பின்னர் எனக்கு நீ எதையும் இணை வைக்காதவனாக என்னைச் சந்தித்தால் நான் உன்னிடம் பூமி நிரம்ப மன்னிப்பைக் கொண்டு வருவேன். (அனைத்தையும் மன்னித்து விடுவேன்)" என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- ஹளரத் அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்

நூல்:- திர்மிதீ.